# SUVADUKAL
# சுவடுகள்

A Tamil Monthly from Norway

முஸ்லிம் கவிஞர் சிறப்பிதழ்

தி.மு.க.வின் மரணம்

பூநகரி

சிங்களவர் தேசம்

எமது மண் எமது மக்கள் எமது போராட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இதழின் தாமதம் தவிர்க்கமுடியாத ஒன்று. மன்னிக்க வேண்டுகிறோம்.

பல வாசகர்களது சந்தா வந்து சேரவில்லை. தயவுசெய்து உடன் சந்தாவைச் செலுத்தி உதவுங்கள். பன்னிரு இதழ்களுக்கான சந்தா 300 குறோணர்கள். வங்கிக் கணக்கிலக்கம் 16075213062

சுவடுகளுக்கு எழுதும் வாசகர்கள் தமது கடிதங்கள் பிரசுரிக்கப்படக் கூடாது எனக் கருதினால் அதைக் குறிப்பிட்டு எழுதுங்கள். கடிதங்கள் நாகரிகமான முறையில் எழுதப்படாமலோ, தனிப்பட்ட நபர்கள் மீதான அவதூறுகளாகவோ இருப்பின் அவற்றைப் பிரசுரித்தல் சுவடுகளுக்குச் சாத்தியமில்லை.

சுவடுகளுக்குப் படைப்புகளை எழுதுவோர் தயவுசெய்து சுவடுகளின் மூன்று அல்லது நான்கு பக்கங்களில் உங்கள் படைப்புகள் வருமாறு எழுதுங்கள். இடநெருக்கடியைக் கருத்திற் கொண்டு கடிதங்களையும் சுருக்கமாகவும், குறிப்பிட்ட விடயம் தொடர்பாகவும் மட்டுமே எழுதுங்கள்.

ஈழத்துத் தமிழ் இலக்கியத்திற்கு முஸ்லிம் படைப்பாளிகளின் பங்கு குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டியது - குறிப்பாக கவிதைத் துறையில். இந்த இதழில் இடம்பெறும் கவிதைகள் அனைத்தும் ஈழத்து முஸ்லிம் கவிஞர்களது படைப்புகள். இதைவிடச் சிறந்த படைப்புகளை முஸ்லிம் கவிஞர்கள் படைத்திருப்பது உண்மையே எனினும், இந்தக் கவிதைகள் சுவடுகளுக்கு வந்த கவிதைகளில் இருந்து மட்டுமே தெரிவாகியுள்ளன. வடாழத்தில் இருந்து முஸ்லிம்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டு மூன்று வருடங்கள் நிறையும் துயரை இது துடைக்காது என்பதையும் அறிவோம்.

பிறக்கவிருக்கும் புதிய வருடம் ஈழத்திலும், உலகெங்கும் பரந்துள்ள ஈழத்தமிழர்களது விடிவுக்குக் கட்டியம் கூறுவதாய் அமையட்டும்.

அடோனிஸ், அன்பரசன், அன்வார், முகமட் அபார், இலக்கியா, சஞ்சயன், சமுத்திரன், சோலைக்கிளி, ஜவ்பர்கான், ஜெயபாலன், துருவச்சி, தங்கா, மைத்திரேயி, சிவசேகரம், நண்பன் மற்றும் சிலர்.

சுவடுகள்,
இதழ் இல 52,
நவம்பர் 1993.



# சிறுவர் பூங்காவில் ஒரு சந்திப்பு

நோர்வேஜிய மொழியில் Barnehage என்று அழைக்கப்படும் சிறுவர் நிலையங்களைச் 'சிறுவர் பூங்கா' என நேரடியாகத் தமிழில் மொழிபெயர்க்கலாம். நாடெங்கும் பரந்து காணப்படும் இவ்வாறான நிலையங்கள் பொதுவாக மாநகரசபைகளின் நேரடிப் பராமரிப்பில் இயங்குபவை. தனியார் மற்றும் பொது நிறுவனங்கள் இவ்வாறான நிலையங்கள் சிலவற்றைப் பராமரிக்கின்றன. பிறந்த சில மாதங்களில் தொடக்கம் ஏழு வயது வரை உள்ள சிறுவர்கள் தமது பாடசாலை வாழ்வுக்கு முந்திய காலங்களை இவ்வாறான நிலையங்களில் கழிக்கின்றனர். அவர்களது உள உடல் விருத்திக்கு ஏற்ற விதத்தில் இந்த நிலையங்கள் அமைக்கப்பட்டுச் செயற்படுகின்றன.

அண்மையில் (19.10.93, செவ்வாய்) குறூறு(ட்) நகர்ப்பிரிவு (Grorud bydel) தனது சிறுவர் பூங்காக் கதவுகளைப் பொதுமக்களின் பார்வைக்காக அகலத் திறந்தது. இதனுடன் நேரடித் தொடர்பற்ற பொதுமக்கள் இந்த நிலையம் எவ்வாறு இயங்குகிறது என்பதைப் பார்வையிட இது ஒரு சந்தர்ப்பமாக இது அமைந்தது.

வெளிர்நீல நிறத்தில் அழகிய குருவிகூடு ஒன்றினைப் போல அமைந்திருந்தது ஃப்ளாவென் சிறுவர் பூங்கா (Flaen barnehage). குருவிகளின் குரல் போலக் குழந்தைகளின் மழலைக் குரல்கள் காதுக்குத் தேன்வார்த்தன. மழலைகளை நோக்கிச் 'சுவடுகளி'ன் கால்கள் சுவடுகள் பதித்தன.

'நரிக்கூடு' (Reve hi - றேவ ஹீ) என்ற பகுதிக்குள் 'சுவடுகள்' சார்பில் நான் சென்றபோது, அங்கு முத்து, பவளம், மரகதம், மாணிக்கம், வைடூரியம் போல் நிலமெங்கும் துள்ளிக் குதித்து விளையாடின சின்னச் செல்வங்கள். குழந்தைகளின் கைவண்ணங்கள் சுவர்களிலும் கூரைகளிலும் தொங்க விடப்பட்டிருந்தன. அங்கு மூன்று தமிழ் மழலைகள் பயில்கிறார்கள் என்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பகுதிக்குப் பொறுப்பான கிறேத்த (Grete) விடம் கேட்டுத் தெரிந்துகொண்டேன்.

கண்ட இடமெங்கும் கண்தேடியது, ஒரு தமிழ் மகவின் கைவண்ணம் காண. 'My selv' (நான்) என்று எழுதப்பட்டு ஓர் அழகிய சித்திரம் என் கண்ணைப் பறித்தது. யதுர்சன் என்றொரு தமிழ்க் குழந்தை தன்னை வரைந்திருந்தான். அவன் வயது நான்கு. அப்படத்தின் சிறப்பியல்பை கிறேத்தகூடப் பாராட்டினார். அவன் தெரிவு செய்த வர்ணமும், வரைந்த முறையும் நிச்சயமாக அவன் ஒரு கலைஞனாக வருவான் என்பதைக் காட்டியது. படத்தில் இடதுகையை வரைந்திருந்த அவன், தனது இடதுகையை மையினால் பதித்திருந்தான்.

அப்படத்தைப் பார்த்த போதும் அதை மற்றவர்கள் புகழும்போதும் எனது மார்பு ஒருகணம் நிமிர்ந்தது. யாரோ பாடிய ஒரு பாடல் என் காதினுள்ளே ரீங்காரமிட்டது. 'தமிழன் என்று சொல்லடா, தலைநிமிர்ந்து நில்லடா'.

முன்பே அனுமதி பெற்றிருந்தமையால் புகைப்படம் பிடிக்க அனுமதிக்கப் பட்டேன். அப்போது கதவில் ஒரு சிறு துண்டு தூங்கியதைக் கண்டேன், 'தமிழ்ப் பத்திரிகை ஒன்று இங்கு வருகிறது, அதில் படத்துக்கு நிற்க விரும்பாத பிள்ளைகளின் பெற்றோர் அறிவித்தல் தரவும்' என்றிருந்தது.

நேரப் பற்றாக்குறை காரணமாக இப்பேட்டி எழுத்து மூலம் பெறப்பட்டது. பேட்டியின் முக்கிய பகுதிகள்:

*இந்தச் சிறுவர் பூங்காவின் 'றேவ ஹீ' என்ற பகுதியில் எத்தனை பேர் பணிபுரிகிறீர்கள்?*

இங்கு மூவர் வேலை செய்கிறோம். இதில் ஒருவர் விசேட பயிற்சி பெற்றவர். மாநகரசபை (kommune) எமது வேண்டுகோளுக்கு இணங்க விசேட பயிற்சி பெற்றவரையும், தமிழ்ப் பயிற்சி பெற்ற ஆசிரியரையும் தந்துள்ளது (தாய்மொழிக் கல்விக்காக).

*சிறுவர் பூங்காவில் குழந்தைகள் பாலியல் ரீதியான பலாத்காரத்துக்கு உட்படுத்தப் படுகிறார்கள் என்று தொலைக்காட்சி, பத்திரிகைகளில் பார்க்கக் கூடியதாக உள்ளது. இதுபற்றி உங்களது கருத்து என்ன?*

நோர்வேஜியச் சட்டமானது நியாயமான சரியான சட்டதிட்டங்களை வகுத்துள்ளது. அதை மீறுபவர்களுக்குத் தண்டனை அளிக்கப் படுகிறது. பெற்றோர் பிள்ளைகளை அடிப்பது, பிள்ளைகளைக் காம இச்சைகளுக்குப் பயன்படுத்துவது இவைகள் சட்டவிரோதமானவை. இவ்வாறான சட்டவிரோதச் செயல்கள் சிறுவர் பூங்காவில் நடப்பதற்குச் சந்தர்ப்பம் கிடையாது. விபத்து, தீவிபத்துப் போன்றவை நடக்கலாம் என்பதால் பிள்ளைகள் தனியே இருப்பதில்லை, இரண்டு அல்லது மூன்று வளர்ந்தவர்கள் கூட இருப்பார்கள். அறைகள் என்றும் திறந்தே இருக்கும். யாரும் எந்த நேரத்திலும் போய் வரலாம். இதனால் எநத்ச் சட்டவிரோதச் செயலும் நடக்கச் சந்தர்ப்பம் கிடையாது.

தொடர்புச் சாதனங்கள் தமது திறமையால் மக்களிடையே பெரிய சந்தேகங்களை ஏற்படுத்தி விடுகின்றன. பல பெற்றோர்க்குச் சிறுவர் பூங்கா மிக அவசியமானதாகும். காம இச்சைக்குப் பிள்ளைகளைப் பயன்படுத்துவதைக் கவனத்தில் கொள்ளும் வேளை, அது நடப்பதற்கு மிகமிகக் குறைந்த சந்தர்ப்பமே உண்டு என்பதைக் கூற விரும்புகிறேன்.

*உங்கள் சிறுவர் பூங்காவில் மூன்று தமிழ்ப் பிள்ளைகள் இருக்கிறார்கள். வித்தியாசமான கலாச்சாரமுடைய பிள்ளைகளை வைத்திருப்பது சிரமமாக இல்லையா?*

அது சிரமமாகத்தான் இருக்கலாம். ஆனால் குழந்தைகள் எதையும் நேரடியாகத் தாம் கருதுவதைக் கேட்டுவிடுவார்கள். இது மற்றவர்களை நோகடித்துவிடும். இது ஒரு சிரமமான நிலையை ஏற்படுத்தும். மற்றக் கலாசாரங்களை அறிவதற்குத் தடையாக அமைந்துவிடும்.

இங்கு நாம் வேலை செய்கிறோம், அல்லது குழந்தைகளுக்குப் பழக்குகிறோம்; எவ்வாறு மற்றவர்களுக்கு மரியாதை செய்வது, எவ்வாறு மற்றவர்களைக் கருத்திற் கொள்வது என்று. குழந்தைகள் கலாசாரம் என்பது எங்கும் ஒன்றுதான். விளையாட்டுத் தான் அவர்களது முழு உலகமும். மற்றக் கலாசாரமுடைய குழந்தைகளுடன் கூடி விளையாடும்போது அவர்களை அறிய, புரிந்துகொள்ள வாய்ப்பாக அமையும்.

*வேறு கலாசாரம் கொண்ட குழந்தைகள் தொடர்பான நன்மை தீமைகளைக் குறிப்பிட முடியுமா?*

நன்மைகளாவன, ஆரம்ப வயதுடையவர்கள் வெகு சுலபமாகச் சேர்ந்து விளையாடுவார்கள். சுலபமாகவும், சரியாகவும் மொழியைக் கற்றுக் கொள்வார்கள். இதனால் பழக்கவழக்கங்கள் மாற்றீடு செய்யப் படுகின்றன. நட்பு வளர்க்கப் படுகிறது. இதனால் நிறவாதம், வகுப்புவாதம் அற்றுப் போகிறது.

வெளிநாட்டுக் குழந்தைகள் சில விடயங்களில் பங்குபற்ற அனுமதிக்கப் படுவதில்லை. காரணம் கலாசாரம், சமயம் போன்றன தடை போடுகின்றன. முன்பு நிகழ்ந்த ஒரு விடயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன்.

கோடையில் வெப்பமாக இருந்தபோது நோர்வேஜியக் குழந்தைகள் உடுப்பைக் கழற்றிவிட்டுக் குளித்து விளையாடினார்கள். ஆனால் சில வெளிநாட்டுக் குழந்தைகள் பெற்றோரால் அனுமதிக்கப் படவில்லை. இட நீதி இல்லாத ஒன்றெனக் கருதுகிறேன். இது குழந்தைகளுக்கு விளங்கமுடியாத, விளங்கப்படுத்த முடியாத ஒன்றாக இருக்கிறது.

*நிறவாதம் குழந்தைகளிடையோ அல்லது வேலை செய்பவர்களிடமோ காணப் படுகிறதா? அப்படி ஒரு நிலை உருவானால் எவ்வாறு சமாளிப்பீர்கள்?*

அது மிகமிகக் குறைவு. சில நிறவாதமுடைய கதைகளைக் குழந்தைகள் கதைப்பதுண்டு. அது குழந்தைகளின் தனித்தன்மையே தவிர நிறவாதமல்ல. ஏழு வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் ஒருபோதும் நிறவாதிகளாக இருக்க முடியாது. ஒரு மனிதரை விரும்பாவிடில் உருவத்தைச் சுட்டிக்காட்டி மனம் நோகுமாறு கதைப்பது வழக்கம்.

அப்படிப் பிரச்சனை என்று வரும் பட்சத்தில் குறிப்பிட்ட குழந்தையைக்

## சீனாவும் நோர்வேயும்

உலகுக்கு காகிதத்தைக் கண்டுபிடித்து மனித நாகரிகத்துக்கு உயிர்ப்பளித்தவர்கள் சீனர்கள். சிறிய நாடாக இருந்தாலும் இதற்குத் தன்னாலான ஒரு சிறு பங்களிப்பை நோர்வேயும் செய்திருக்கிறது. காகிதங்களை இலகுவாக இணைத்து வைத்திருப்பதற்கு 'க்ளிப்'களைக் (paper clips) கண்டுபிடித்தவர்கள் நோர்வேஜியர்களே.

கடுகு சிறிதானாலும்.....

சிவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூப்பிட்டுத் தனியாக விளங்கப் படுத்துவோம். கூடிக் குழந்தைகளுடன் கதைக்கும்போது தயவாக எடுத்துக்கூறி, அதனால் ஏற்படும் விளைவுகளைக் கூறுவோம். தாய்தந்தையரைக் கூட்டிக் கதைப்போம்.

வேலை செய்வோரிடம் நிறவாதம் காணப்பட்டால் அதை எமது கூட்டத்தில் (Staff meeting/ Personal møte) கதைப்போம், எடுத்துச் சொல்லுவோம். நிறவாதம் காட்டச் சிறுவர் பூங்கா அனுமதிக்காது.

*நோர்வேயில் பிள்ளைகள் சிலர் கடத்தப்பட்டுக் காணாமற் போகிறார்கள். பெண் குழந்தைகள் பாலியல் வதைக்கு உள்ளாகிக் கொல்லப் படுகிறார்கள். (உ-ம்: Maria Drammen) இவ்வாறான ஒரு நிலைமை சிறுவர் பூங்காவுக்கு ஏற்படாது எவ்வாறு பாதுகாப்பீர்கள்?*

சிறுவர் பூங்கா மிகச் சிறியது. பெற்றோர் யார்யார் என்பது எமக்குத் தெளிவாகத் தெரியும். அவர்களைத் தவிர வேறு எவரிடமும் நாம் குழந்தைகளை ஒப்படைப்பதில்லை. குழந்தைகள் வெளியே விளையாடுகையில் இங்கு வேலை செய்யும் 2,3பேர் நிற்போம். வேலியைத் தாண்டிப் பிள்ளைகள் வெளியே போக அனுமதி கிடையாது. அப்படி ஒரு சந்தேக நிலை தோன்றின் நகர்காவலருடன் (Politi) தொடர்பு கொள்வோம்.

*சிறுவர் பூங்காவில் வேலை செய்பவர்கள் அல்லது பெற்றோர் போதைவஸ்துப் பாவிப்பவர்களாக இருந்தால் பிள்ளைகளின் நலன் கருதி என்ன நடவடிக்கை எடுப்பீர்கள்?*

போதைவஸ்துப் பிரயோகம் என்பது எங்கும் அனுமதிக்கப்பட முடியாத ஒன்று. அப்படிப் பெற்றோர்கள் பாவிப்பதாக அறிந்தால் பிள்ளையைப் பெற்றோரிடம் ஒப்படைப்பதா இல்லையா என நாம் தீர்மானிப்போம். குழந்தைகளுக்கு உதவப் பல பராமரிப்பு நிலையங்கள், அமைப்புகள் உள்ளன. அவர்களுடன் தொடர்பு கொள்வோம்.

**சிறுவர் பூங்காவில் சந்திப்பு**
**நக்கீரனார்**

## சிறிமாவின் பிரசாரம்

இலங்கையின் இனப்பிரச்சனையைத் தீர்க்குமாறு கோரி, அரசுக்கெதிராகப் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட உள்ளதாக எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ கூறியுள்ளார். இனப்பிரச்சனைக்குத் தீர்வுத்திட்டம் ஒன்று (?) தன்னிடம் இருப்பதாகவும் அதை உரிய காலத்திலேயே வெளியிடுவேன் எனவும் கூறியுள்ள அவர், தமிழ் மக்களது வாக்குகளை நோக்கியே இந்தத் திடீர் அறிவிப்பை விட்டுள்ளார்.


செய்தியாளன்



○ சுகுமாரன்

# பூநகரி

முகம் குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்று கூறுவார்களே, அப்படி உள்ளது இலங்கைப் பிரதமரின் கூற்று. 'நாம் எமது வீரர்களை இழந்தோம். கோடிக்கணக்கான ஆயுதங்களை இழந்தோம். ஆனால் முகாமை இழக்கவில்லை' என இலங்கைப் பிரதமர் ரணில் குறிப்பிட்டிருப்பது தோல்வியில் ஏற்பட்ட இயலாமையின் வெளிப்பாடே. பூநகரி இராணுவ, நாகதேவன்துறை கடற்படை முகாம்கள் தாக்கப்பட்டு நிர்மூலமாக்கப் பட்டமை, தென்பகுதியில் பலத்த அரசியற் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையின் இராணுவ வரலாற்றில் இவ்வளவு பெரிய உயிர், பொருள் இழப்பை முன்னெப்போதும் இராணுவம் சந்தித்ததில்லை. 'இவ்வருட இறுதிக்குள் எமக்குப் போதியளவு இராணுவ யுத்த தளபாடங்கள் கிடைத்துவிடும். இதன்மூலம் யுத்தத்தில் எமது கை மேலோங்கும்' எனப் பேசித் திரிந்த ரணில் தற்போது திடீரென அரசியற் தீர்வு பற்றிக் கதைக்க வேண்டிய நிலைக்குப் பூநகரித் தாக்குதல் இட்டுச் சென்றுள்ளது. சர்வதேச மற்றும் தேசிய தொடர்பு சாதனங்களில் வந்த தகவல்கள் இறந்த படையினர் தொகை ஐநூறு முதல் ஆயிரம்வரை என்கிறது. காயமடைந்த படையினர் எண்ணிக்கையும் இதேயளவு. புலிகள் தரப்பிலும் ஐநூறு பேர்வரை இழப்பு ஏற்பட்டுள்ளது.



கிளாலியைக் கைப்பற்றி அதனூடாகத் தென்மராட்சியின் கணிசமான பகுதியைத் தன்வசப்படுத்திப் பொருளாதார போக்குவரத்துத் தடைகளை மேலும் இறுக்கும் நோக்கில் தொடங்கிய 'யாழ்தேவி' ராணுவ நடவடிக்கை இடையிலேயே பிசுபிசுத்தது. இழப்புகளுடன் திரும்பிய படைகள் அதிலிருந்து முழுமையாக மீளமுன் ஏற்பட்ட பூநகரி இழப்புகள் படையினரிடையே கடும் உளவியல் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. இதுபற்றிய 'ஓரளவு' செய்திகளை வெளியிட்ட 'ஒருசில' பத்திரிகைகள் இராணுவ உயர்பீடப் பகுதியில் இருந்து மிரட்டலைப் பெற்றுள்ளதில் இருந்தே இதன் தாக்கத்தை உணரமுடியும்.

முகாம் தாக்கப்பட்டதையிட்டு இராணுவத்தை அரசும், அரசை ராணுவமும் குற்றம் சாட்டிவருகையில், தென்னிலங்கை எதிர்க்கட்சிகள் குழம்பிய குட்டையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீன்பிடிக்க முயல்கின்றன. பயங்கரவாதப் பிரச்சனைக்கு முடிவு கட்டியபின்பே வடக்கு கிழக்குப் பிரச்சனைக்குத் தீர்வு என்றும், இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாண முடியாவிடில் அரசு பதவிதுறக்க வேண்டும் எனவும் முன்பின் முரணாகப் பேசும் சிறிமாவோ, அண்மையில் கூறியுள்ள கருத்து. "அனைத்துச் சிங்கள இளைஞர்களுக்கும் கட்டாய இராணுவப் பயிற்சி வழங்கப்பட வேண்டும்" என்பதாகும். இவரைவிட ஒருபடி மேலே சென்று ம.ஐ.மு.யின் பா.உ, பந்துல குணவர்தன புலிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாகவும் கிறிஸ்தவ தேவாலயங்களுக்கு ஊடாகவும் செயற்படுகின்றனர் எனக் கூறியுள்ளார்.

மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பதுபோல தமிழர்களுக்கு உதவும் யாருமே புலிகளாகத் தென்படுவது அல்லது காட்டப்படுவது இப்போது சர்வசாதாரண நிகழ்ச்சி. எதிர்க்கட்சிகளின் இந்நிலைப்பாடு, தமிழ் மக்களை அழித்துவரும் அரசின் நிலைப்பாட்டிற்குச் சற்றும் குறையாமலே உள்ளது. தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை வெறும் பயங்கரவாதப் பிரச்சனையாகக் காட்டும் சிங்கள அரசியல்வாதிகளுக்குச் சற்றும் குறைவின்றியே பிரபல பத்திரிகைகள் இயங்கிவருகின்றன. இலங்கை பௌத்த சிங்களவர்களுக்கு மாத்திரமே சொந்தமானது என்பதே தென்னிலங்கையின் பெரும்பாலான பத்திரிகைகளின் நிலைப்பாடாகும். குடாநாட்டில் இடம்பெற்றுவரும் மனிதஉரிமை மீறல்களுக்காகவும், கருத்துச் சுதந்திர மறுப்பிற்காகவும் முதலைக் கண்ணீர் விடும் இப்பத்திரிகைகள் தென்னிலங்கையில் பிரேமதாசா அரசால் ரயர் போட்டுக் கொழுத்தப்பட்ட 50ஆயிரத்துக்கு மேற்பட்ட இளைஞர்களைப் பற்றி வாய்திறப்பதில்லை. தமிழர்கள் என்ற ஒரே காரணத்திற்காக வகைதொகையின்றி ஆடுமாடுகளைப் போலக் கைது செய்து சிறையில் வதைக்கப்படும் நிலை பற்றித் தென்னிலங்கைப் பத்திரிகைகளோ எதிர்க்கட்சிகளோ மூச்சும் விடுவதில்லை. அவர்களின் கணிப்பீடு தமிழர்கள் யாவரும் புலிகள்; பயங்கரவாதிகள் என்பதே. புலிகள் சமாதானத்திற்குத் தயாரில்லை, இராணுவ தீர்வே ஒரேவழி, நாம் கதவுகளைத் திறந்தே வைத்திருக்கிறோம் என முன்பின் முரணாகக் கதைக்கும் இலங்கை அரசும், எதிர்க் கட்சிகளும், தொடர்பு சாதனங்களும் ஒரு விடயத்தை மறந்துபோய் விடுகிறார்கள். இலங்கையின் இன்றைய நிலைமைக்கு சரியான தீர்வுத் திட்டத்தை முன்வைக்க வேண்டியது அரசினதும் கடமையே. இன்னும் விளக்கமாகக் கூறினால் சிங்கள மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் அனைவரதும் கடமையே. ஏனெனில் உங்களிடமே ஆட்சியும் அதிகாரமும் உண்டு. நீங்களே பிரச்சனையின் மூலகர்த்தாக்கள்.

நடைபெறவுள்ள தேர்தலையும் நடைமுறை அரசியல் சூழ்நிலையையும் கருத்தில் கொண்டு தமிழ் மக்கள் மீது திடீர் பாசம் காட்டத் தொடங்கியுள்ள சிறிமாவோ அம்மையார் சமாதானத் தீர்வில் நாட்டம் கொண்டவராகக் காட்டிக் கொண்டாலும் உண்மை அதுவல்ல என்பது ஊரறிந்த விடயம். பதவியில் இருந்தபோது அவர் கொண்டிருந்த தமிழின விரோதப் போக்கை மறக்க முயன்றாலும், அண்மைக் காலங்களில் அவர் தனது சுயரூபத்தைக் காட்டியுள்ளார். நாட்டை யுத்தநிலையில் வைத்திருக்க வேண்டும்; பயங்கரவாதத்திற்கு எதிராகப் போராட வேண்டும் எனக் கூறியுள்ள அவரின் கட்சி அங்கத்தவர் தலைமை தாங்கிய பாராளுமன்றத் தெரிவுக்குழு தமிழ்க் கட்சிகளால் முன்வைக்கப்பட்ட



குறைந்தபட்சக் கோரிக்கைகளைக் கூட ஏற்றுக் கொள்ளவில்லை. இந்நிலையில் இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வை முன்வைக்குமாறு அம்மையார் நடாத்தவுள்ள போராட்டம் யாரை ஏமாற்ற? ஒன்று மட்டும் உண்மை, தமிழ் மக்கள் இனியும் ஏமாறத் தயாரில்லை.

சிங்கள பௌத்த இனவாதிகள்தான் இப்படி என்றால் அரசுடன் இணைந்து செயல்படும் ஈழ விடுதலை(?) இயக்கங்கள் ஒருபடி மேல்போய் தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை முற்றிலும் நசுக்கிவிடுவதில் மிகவும் ஆர்வமாயுள்ளன. மட்டக்களப்பில் ரெலோவினர் மேற்கொண்டுவரும் கொடுமைகள் சொல்லிலடங்கா. அங்குள்ள காட்டுக் கந்தோர்பற்றிக் கேட்டால் மக்கள் வாய்திறக்கவே அஞ்சுவர். இவ்வாறே புளொட், ஈபிடிபி என ஒவ்வொரு அமைப்பும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை நசுக்குவதில் இலங்கை அரசுடன் தோளோடு தோள் நிற்கின்றன. 'புலிகள் பயங்கரவாதிகள், பாஸிஸ்டுகள். புலிகளைப் பெரும்பாலான தமிழ் மக்கள் ஆதரிக்கிறார்கள். எனவே புலிகள் + தமிழ்மக்கள்= பயங்கரவாதிகள், பாஸிஸ்டுகள்' என்பதே தேசிய நீரோட்டத்தில் கலந்துவிட்ட தமிழ்க் குழுக்களின் கொள்கையாகும். அதுசரி ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு ஜனநாயக வழிக்குத் திரும்பி, தேசிய நீரோட்டத்திலும் கலந்துவிட்ட இக்குழுக்கள் தொடர்ந்தும் ஆயுதங்களை வைத்திருப்பது ஏன்? சிங்களப் படையின் கூலிப்படையாகச் செயற்பட்டு வருவது மட்டுமல்ல, தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தையே நீங்கள் ஒடுக்கி வருகிறீர்கள் என்பதை உணர்ந்துகொள்ளுதல் அவசியம். நீங்கள் புலிகளால் பாதிக்கப்பட்டது உண்மை என்றால் புலிகளுக்கு எதிரான உங்கள் போராட்டத்தில் நியாயம் இருக்கலாம்.



## வெட்டிப் பேச்சு வீரர்கள்

உலகின் சகல மக்களும் பிரதிநிதித்துவம் செய்யப்படும் அமைப்பு எது என்று யாராவது கேட்டால் 'ஐ.நா.சபை' என்று நீங்கள் பதில் தரக்கூடும். ஆனால் உலகின் மிக மோசடியான அமைப்பும் அதுதான் என்று கூறலாம்.

1993ஐ 'சர்வதேச பூர்வகுடி மக்களுக்குரிய ஆண்டா'கப் பிரகடனம் செய்தது ஐ.நா. ஆனால் இதைப் பற்றிப் பிறகு ஒரு மூச்சும் விடவில்லை. ஒரு செப்புக் காசைத்தானும் இந்த சர்வதேச ஆண்டுக்காகச் செலவு செய்யவில்லை. சில அரசாங்கங்கள் தனிப்பட்ட முறையில் ஒருலட்சம் டொலர்களை வழங்கியதன் மூலம், பூர்வகுடி மக்கள் தொடர்பான இரு உச்சிமாநாடுகள் ஒழுங்கு செய்யப்பட்டன.

இந்தத் தகவல்களை அண்மையில் நோர்வேக்கு விஜயம் செய்த அமெரிக்கக் கண்டத்துப் பூர்வகுடி மக்களான செவ்விந்தியர்களது பிரதிநிதிகளில் ஒருவரும், நோபல் பரிசு பெற்றவருமான றிகபேட்டோ மெஞ்சு கூறியுள்ளார்.

தனக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது, தனது நாடான கௌதமாலாவில் எந்த மாற்றத்தைக் கொண்டுவரவும் உதவவில்லை எனவும் அவர் கூறினார். சர்வதேச பூர்வகுடி மக்களது விசேடத் தூதராக றிகபேட்டோவை ஐ.நா. நியமனம் செய்திருந்தது.

*தூதன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறு புலிகளுக்கு எதிராகப் போராடுவதாக இருந்தால் அதற்கான நியாயமான காரணங்களைத் தமிழ் மக்கள் மத்தியில் முன்வைத்திருக்க வேண்டும். புலிகளுக்கு எதிரான வெகுஜனப் புரட்சியை முன்னெடுத்திருக்க வேண்டும். இதனை உங்களால் சாதிக்க முடியாதிருந்தால் தவறு உங்கள் பக்கமே உள்ளது என்று அர்த்தம். அல்லது அதற்குகந்த சூழல் தற்போது இல்லை என்றே கூறலாம். ஆனால் தற்போது நீங்கள் கொண்டுள்ள நிலைப்பாடு இலங்கை அரசுக்கு எதிரான தமிழ் மக்களது உறுதியான போராட்டத்தைக் காட்டிக் கொடுப்பதாகவே அமைந்துள்ளது. ஈழவிடுதலைக்காக ஆயுதம் தாங்கிய நீங்கள் இன்று உங்கள் ஆயுதங்களைத் தமிழ் மக்கள் பக்கம் திருப்பியுள்ளீர்கள். தேசிய நீரோட்டத்தில் நீங்கள் கலந்ததால் தமிழ் மக்களுக்கு விளைந்த நன்மை என்ன? உங்கள் ஆட்சி, அதிகாரம் கொடிகட்டிப் பறக்கும் இடங்களில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுவதும், சித்திரவதைக்கு ஆளாவதும் தினம் தொடர்கிறது. தமிழ் மக்கள் மீதான அரசின் பயங்கரவாதம் முன்னிலும் உறுதியாக நிகழ்கிறது. குறைந்தபட்சம் தமிழ் மக்களைப் பட்டினிச் சாவில் ஆழ்த்திவரும் அரசை உங்களால் தட்டிக் கேட்க முடிகிறதா? முடியாது, காரணம் தமிழர்களைக் கொண்டே தமிழர்களை ஒடுக்கும் காரியத்தில் அரசு மும்முரமாக இறங்கிவிட்டது.

பூநகரி இராணுவ கடற்படை முகாம் தகர்ப்பு ஒரு முழுமையான இராணுவ வெற்றியே (அப்பிரதேசத்தை மீண்டும் ராணுவம் கைப்பற்றியிருப்பினும்). தமிழ்பேசும் மக்களின் பாரம்பரியப் பிரதேசங்களை ஆக்கிரமித்துள்ள இராணுவத்தை அகற்றும் எந்த முயற்சியும் தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தின் வெற்றியாகவே கருதப்பட முடியும். ஆனால் இராணுவ வெற்றிகள் '<u>மட்டுமே</u>' எமக்கு விடுதலையைப் பெற்றுத்தரும் என்ற புலிகளின் கோட்பாடு மாறும்வரை எமது விடுதலைப் போராட்டம் முழுமைபெறாது.

ஒரு தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டம் இராணுவ வெற்றிகளால் <u>மாத்திரம்</u> உள்வாங்கப் படுமானால் அப்போராட்டம் சிதறடிக்கப்படும் சாத்தியங்கள் அதிகம் என்பதை வரலாறு காட்டிநிற்கிறது.

## ஒழுக்கமும் வழுவும்

*டென்மார்க்கில் தமிழ் அகதிகளது குடும்ப மீளிணைவு விவகாரத்தில் தனது அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டில் அந்நாட்டின் முன்னாள் நீதியமைச்சர் எறிக் நின் ஹன்சன் (Erik Ninn Hansen) மீதான வழக்கு அண்மையில் ஆரம்பமானது.*

*வழக்கு 24 நீதிபதிகளைக் கொண்டதாக நிகழும். இதில் பாதிப்பேர் உயர்நீதிமன்ற நீதிபதிகள்.*

*ஹன்சனைப் பதவியில் இருந்து விலக்கவேண்டும் என யூன் மாதத்தில் பாராளுமன்றம் 105 – 45 வாக்குகள் வித்தியாசத்தில் தீர்மானித்தது.*

*எழுபது வயதான நின் ஹன்சன்மீது தொடரப் படுவது போன்ற வழக்கு டென்மார்க்கின் சரித்திரத்தில் இரண்டாவது. முதலாவது வழக்கு 1909இல் பிரதமர் ஐ.சி.கிறிஸ்ரன்ஸனுக்கு எதிராகத் தொடுக்கப் பட்டது.*

செய்தியாளன்



(முன்தொடர்)

# அடோனிஸின் பாலை

## முற்றுகையிடப்பட்ட பெய்ரூத்தின் நாட்குறிப்பு

அலி அஹமட் ஸாஇட் (Ali ahmed sa-id) எனும் இயற்பெயரையுடைய அடோனிஸ் ஸிரியாவில் காஸ்யுமுன் கிராமத்தில் 1930ம் ஆண்டு பிறந்தார். 1956ல் லெபனானிற் குடியேறி அதன் பிரஜையானார் மாவாகிடு எனும் செல்வாக்குடைய கலாச்சார ஏட்டைத் தொடக்கி அதன் ஆசிரியராக இருந்த அடோனிஸ் அரபுப் பரீட்சார்த்தக் கவிதையின் முன்னோடிகளுள் ஒருவர் இவரது கவிதைத் தொகுதிகள் ஐந்தும், மரபுவழி அரபுக் கவிதைகளின் விமர்சனரீதியான தொகுப்பும், கவிதை ஆய்வுநூல்கள் பலவும், மொழிபெயர்ப்புகளும் அரபுக் கவிதைக்கு இவரது கொடைகள். இங்கு தமிழாக்கப்பட்டுள்ள கவிதைகள் அவரது பாலை என்ற ஆக்கத்தினின்று ஆங்கிலத்திற்கு மொழிபெயர்க்கப்பட்டு Victims of a map எனும் தொகுதியிற் பிரசுரமானவை ஆங்கிலமூலம் தமிழ்ப்படுத்தியவர் மணி. இவற்றின் முதற்பகுதி கடந்த இதழில் வெளியாகியிருந்தது.

12.
சாக்குகளில் மனிதரைக் கண்டனர்
தலையில்லாமல் ஒருவர்
நாவும் கைகளுமில்லாமல் ஒருவர்
நசுக்கப்பட்டு ஒருவர்
பேர்களின்றி மற்றையோர்
உனக்கென்ன பைத்தியமா? தயவுசெய்து
இதைப்பற்றி எழுதாதே.

13.
நீ காண்பாய்
அவன் பேரைச் சொல்வாய்
அவன் முகத்தை வர்ணத்தில் வரைந்தேன் என்பாய்
அவனிடம் உன் கையை நீட்டுவாய்
அல்லது எந்த மனிதனையும் போல் நடப்பாய்
அல்லது முறுவலிப்பாய்
அல்லது நானொருகாலம் துயருற்றேன் என்பாய்
நீ காண்பாய்
அங்கே
தாயகம் இல்லை.

14.
நீ செவிடாயும் ஊமையாயும் வாழ்வது
ஏற்கப்படுங் காலம் வரக்கூடும், ஒருவேளை
அவர்கள் உன்னை முணுமுணுக்க அனுமதிக்கக்கூடும்
மரணம், வாழ்க்கை, மறுஜன்மம்
உனக்குச் சாந்தி கிடைக்கட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15.
அவன் புனித யுத்தச் சீருடை அணிகிறான்
கருத்துகளைக் கவசமாய்ப் பூண்டு உலாவுகிறான்.
அவன் ஒரு வியாபாரி - அவன் துணிமணி விற்பதில்லை
மனிதரை விற்கிறான்.

16.
அவனை ஒரு கிடங்கிற்குக் கொண்டுபோய் எரித்தனர்
அவன் ஒரு கொலைகாரனல்லன், அவனொரு சிறுவன்
அவன்...
அண்டவெளியின் படிகளின் மேலேறி
அதிருங் குரல் அவன்.
அவன் இப்போது காற்றில் ஒலிக்கிறான்.

17.
அந்தகாரம்
பூமியின் விருட்சங்கள் வானத்தின் கன்னத்திற் கண்ணீராயின
இந்தவிடத்தே ஒரு கிரகணம்
நகரின் கிளையை அறுத்தது மரணம், நண்பர்கள் அகன்றனர்

18.
நீ படைக்கப்பட்டதாலோ உனக்கு உடலொன்று இருப்பதாலோ
நீ சாவதில்லை
வருங்காலத்தின் முகம் நீ என்பதனால் நீ சாகிறாய்.

19.
தன் சுகத்தைச் சுமக்குமாறு காற்றைத் தூண்டிய மலர்
நேற்று மரித்தது.

20.
சூரியன் உதிப்பதேயில்லை
தனது பாதுங்களை வைக்கோலால் மூடி
நழுவிவிடுகிறது......

21.
விடியலின் நெற்றியை மூடுந் தூசு அலுத்து
மனிதரின் சுவாசம் அலுத்துவிட்ட
ஒரு ரோஜா மலரை
அவனது மடிக்கு ஒரு பஞ்சணையாக வைக்க
மரணம் இலகுவில் வருமென நினைத்தேன்.




22.
பனங்களளினின்று பாலையின் அமைதி.... ஆதியனவரை
தன் வயிற்றைக் கடத்திக் கொணர்ந்து
அகதிகளின் தோள்களின்மீது துயிலுங் காலை..... ஆதியவற்றினின்று
வீதிகள், ராணுவ வாகனங்கள், படைகளின் குவிப்பு.... ஆதியவற்றினின்று
முஸ்லிம்களதும் அவிசுவாசிகளதும் குருதிநிறைந்த குண்டுகள்.... ஆதியவற்றினின்று
குருதியும் வியர்வையும் சீழாய் வழியும் இரும்புத் தசைகள்... ஆதியவற்றினின்று
கோதுமைக்காகவும் பசுமைக்காகவும் உழைப்போர்க்காகவும்
ஏங்கும் வயல்கள் ஆதியவற்றினின்று
நம் உடல்களைச் சுவர்களாற் சூழ்ந்து
நம்மீது இருளை வீசுங் கோட்டைகள்.... ஆதியவற்றினின்று
வாழ்வு பற்றிப் பேசி வாழ்வை உணர்த்தும் மரணங்கள் பற்றிய
கட்டுக்கதைகள்.... ஆதியவற்றினின்று
படுகொலையும் படுகொலையுண்டோரும் படுகொலை செய்தோருமான
பிரசங்கம்.... ஆதியவற்றினின்று
இருள் இருள் இருளினின்று
நான் சுவாசிக்கிறேன், என்னுடலை ஸ்பரிசிக்கிறேன் -
உன்னையும் அவனையும் என்னையும் பிறரையும் தேடுகிறேன்.

என் முகத்திற்கும் குருதிசொட்டும் இச்சொற்கள்.... ஆதியவற்றுக்கும்
நடுவே என் மரணத்தைத் தொங்கவிட்டேன்.

(இன்னும் வரும்)

தவிர்க்கமுடியாத
காரணங்களால்
இந்த இதழில்
'மண்மனம்'
இரண்டாம் பாகம்
தொடங்கவில்லை.
அடுத்த இதழில்
ஆரம்பிக்கும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8472 8323

## கவிராயருக்கு வந்த பதில்: பிறமொழி ஆராதனை பற்றிய பொதுவான கண்ணோட்டம்

உலகில் மனிதன் தனது கவலைகள் எல்லாவற்றுக்கும் அடைக்கலமாகவும் ஆறுதலாகவும் கடவுளைத்தான் நம்பியுள்ளான். யாருடனும் பகிர்ந்துகொள்ள முடியாத கவலைகள் துன்பங்களை கடவுளிடம் மட்டுமே பகிர்ந்துகொள்ள முடியும். படித்தவர்களோ, பாமரர்களோ தமது தாய்மொழியில்தான் சிந்தனை செய்யவோ உணர்வுகளை வெளிப்படுத்தவோ பெரிதும் விரும்புவார்கள். இது இவ்வாறிருக்க அவன் கடவுளைத் தேடிப் போகும் இடத்தில் அவனுக்குப் புரியாத மொழியில் ஆராதனை நடந்தால் அவனால் ஈடுபாட்டோடு பங்குபற்ற முடியாது.

ஏன் இப்படியான பிறமொழி ஆரராதனைகள் ஏற்பட்டன என்று கேட்போமாகில், ஆரம்பத்தில் எழுதப்பட்ட மொழிகளில் அவற்றைப் பாதுகாத்து வருவதால் மூலக் கருத்துகள் மாறமாட்டாது என்பது ஒரு சாராரின் பதிலாக இருக்கும். எங்களுக்கு ஓரளவு தெரிந்த மதங்களில் இஸ்லாமிய மதத்தில் அரேபிய மொழியிலும், புத்தமதத்தில் பாலி மொழியிலும், ஒதடக்ஸ் கிறிஸ்தவர்கள் கிரேக்க ஹீப்ரு மொழிகளிலும், இந்துமதத்தில் சமஸ்கிருத மொழியிலும் ஆராதனைகள் நடைபெறுகின்றன.

இஸ்லாமியர்கள் அரேபிய மொழியைப் படித்து கடவுளைப் பற்றி மேலும் அறிந்துகொள்ள ஊக்குவிக்கப் படுகிறார்கள். மேலும் திருக்குரான் பற்றிய விளக்கவுரைகள், அவர்களது சொந்த மொழியிலேயே சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. புத்த மதத்திலும் அப்படியே. கிறீஸ்தவர்களுக்கு அனேகமாக எல்லா மொழிகளிலும் ஆராதனை செய்யும் வசதிகள் இருப்பதால் அவர்களுக்குப் பிரச்சனை இல்லை. இந்துக் கோயில்களில் மட்டும் தற்போது பேச்சுவழக்கில் இல்லாத சமஸ்கிருத மொழியில் நடைபெற்று வருவதுதான் இப்போது தென்னிந்திய இந்துக்களின் பிரச்சனை. பேச்சுவழக்கில் இல்லாவிட்டாலும் வட இந்திய மக்களுக்கு சமஸ்கிருத மக்களுக்கு சமஸ்கிருதம் ஓரளவு புரிந்துகொள்ளக்கூடிய மொழி என்பதும் குறிப்பிடத் தக்கது.

தென்னிந்திய மக்களின் கோவில்களைக் கட்டியது யார்? பூசகர்களைப் பூசைக்கு அமர்த்திய யார்? தமிழ் தொன்மையான மொழியாக இருந்தும் சமஸ்கிருத மொழியில் வேதங்கள் எழுதப்பட்டால் எழுதியவர்கள் யார் என்ற கேள்விகளுக்கு நாங்கள் பதில் காண்பது முதற்கண் அவசியமாகும்.

தென்னிந்தியாவில் கோவில் கட்டியது தென்னிந்தியரே. பூசகர்களை நியமித்ததும் அவர்களே. கோவில்களைக் கட்டி அதில் வைக்கப்பட்ட விக்கிரகங்களுக்கு ஆராதனை செய்ய வேண்டிய ஆசார நியமங்களை ஒப்புக்கொண்டு, ஒரு கூட்டம் மக்கள் அவற்றைச் செய்ய அனுமதித்து, அரசன்முதல் ஆண்டிவரை தாம் கட்டிய கோயில்களில் விக்கிரகங்களில் இருந்து குறிப்பிட்ட தூரத்தில் நிற்க இசைந்துவிட்டார்கள். எமக்காகக்கூடப் பூசைசெய்ய எம்மால் முடியாது. அதற்குரிய ஆசாரம் எமக்கில்லை என்று பூசைசெய்ய விக்கிரகத்துக்குக் கிட்டப் போக முழு உரிமையையும் ஒருவரிடம் கொடுத்துவிட்டோமானால் அவர் என்ன பாஷையில் பூசை செய்தாலும் எமக்கென்ன. பூசை விக்கிரகத்துக்கா எமக்கா?

சமஸ்கிருதத்தை இப்போது யாரும் படிக்கலாம். பண்டிதர் ஆகலாம். அப்படியிருக்க ஏனோ பூசைகளை சொந்த மொழிகளில் பூசைகள் செய்ய பூசகர்களை ஏற்படுத்த யாரும் முன்வரவில்லை. பூசை செய்யும் ஆசாரம் நமக்கில்லையே என்று நாம் விட்டுக் கொடுத்தால், பூசையை உங்களுக்குப் புரியும்பாஷையில் செய்வது அநாசாரம் என்று பூசகர்கள் சொல்லக்கூடும். மொழிமாற்றிப் பூசை செய்வது தெய்வக் குற்றமாகிவிடுமோ என்று நாங்களே எங்கள் மொழியைத் தாழ்த்தினால், கடவுளாலும் எங்களுக்கு உதவிசெய்ய முடியாது. புத்தரின் புரட்சியின் பின் மாமிச உணவைப் பிராமணர்கள் விட்டதுபோல் நிச்சயம் எமது மொழியிலும் நாம் பூசை பண்ணக்கூடும். தென்னாட்டில் பூசகர்கள் எம்மோடு இடைபட்டு எமது மொழிபேசும் மக்கள்தானே.

அர்ச்சனை பாட்டேயாகும் என்று சுந்தருக்குக் கூறிய கடவுள், பாட்டே அர்ச்சனையாகலாம் என்று மாற்றியும் கூறவேண்டும் என்றால் சிந்திக்கும் திறனைத் தந்தது எதற்கோ? தேவாரம், திருவாசகம், சிவபுராணம், திருப்புகழ், திருவெம்பாவை, திருவருட்பயன், சித்தர் பாடல்கள் போன்ற பல பாடல்கள் தமிழில் இருக்கின்றன. திருக்குறள் ஒரு நல்ல தமிழ்நூல். இவற்றையெல்லாம் படித்துக் கடவுள் பக்தியை (மதபக்தியை அல்ல) வளர்த்துக்கொள்ள வேண்டும். கடவுளைப் பாடும்போது பொருள் உணர்ந்து பாடாதவரைப் பார்த்து கடவுள் "தம் வாயினால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள், அவர்களின் இருதயமோ என்னைவிடத் தூரமாக இருக்கிறது" என்று கூறுகிறார்.

நாம் மதம் என்ற வேலிக்குள் நின்று மதச்சண்டை பிடிப்பதற்கும் இந்தப் பொருள் உணராத ஆராதனைகள் காரணமாகின்றன. பொருள் உணர்ந்த ஆராதனையில் கடவுளுடன் இருதயம் நெருங்கிவரும். மதங்கள் என்ற வேலிகள் அற்றுப் போகும். கடவுள் பற்றிய நூல்கள்

## குற்றெழுத்துக் குறைபாடு

ஆறாவது ஆண்டு இதழின் (சிறப்பிதழினை) அம்சங்களை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தபோது சுவடுகள் 50வது, 'கனனிப்பழுது' என்ற முன்னுரையுடன் கிடைத்தது. அமைப்பில் அழகும் தெளிவும் கொண்டதான சுவடுகளின் கணனிக்குக் குற்றெழுத்துகளில் தட்டுப்பாடு நிலவுவதை உணரமுடிகிறது. சிறப்பம்சங்கள் பல இவ்விதழில் இடம்பெற்றிருந்தன.

குறிப்பாக அன்பர் கி.பி.அரவிந்தனின், இளையராஜாவின் இசைஞானம் பற்றிய கட்டுரை சிறப்பானதாகவும் அவசியமானதும்கூட.

இதழில் இடம்பெற்றிருந்த எல்லாக் கவிதைகளும் நன்றாக அமைந்திருந்தன. தில்லையின் 'ஒரு கடிதம்' யதார்த்தமானது, கவிதையும்தான்.

வளர்ந்துவரும் அன்ஸார் - சோலைக்கிளியின் கவிதைகளைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தமொழி, மதங்களில் இருந்தாலும் தேடி வாசிக்க விருப்பம் வரும். இந்து (சிந்து) நதிதீரத்தை அண்டித் தோன்றிய எல்லா இன மக்களும் இந்துக்களே. அவர்களுக்குள் இருந்த பல்வேறு வழிபாட்டு முறைகளைத் தொகுத்துத்தான் இந்துமதக் கோட்பாடுகள் அமைக்கப் பட்டிருக்கின்றன. அவ்வப்போது செல்வாக்காக இருந்த மொழிகளில் அவை எழுதப்பட்டு இருக்கின்றன. எழுதியவர்களில் நம்மவர்களும் இருக்கலாம். இந்துக்கள் அனைவருக்கும் பொதுவாக இது எழுதப்பட்டிருப்பினும், அதை அவரவர் சொந்த மொழியில் புரிந்துகொள்வது நன்மை பயக்கும். இந்துநதி தீரத்தில் அதான்றிய மக்கள் ஏராளம். அவர்களின் கடவுள் பற்றிய கோட்பாடுகள் சில அடிப்படையில் இசைந்துபோனாலும் பல வேறுபாடுகள் உண்டு. வேற்றுமையில் ஒற்றுமை காணும் இந்து மதத்தைப் பெரிய கடலுக்கு ஒப்பிடுவார்கள். கடவுளாகிய கரையை அடைய எமது நீச்சல் கரையை நோக்கி இருக்கவேண்டுமேயொழிய கடலுக்குள்ளாக இருக்கக்கூடாது. நாம் இந்து சமயத்துக்குரியவர்கள் என்றுவிட்டு, அதன் தத்துவங்களைத் துருவிக்கொண்டு நில்லாமல் கடவுளை நோக்கியதாக எமது வாழ்க்கை அமையட்டும்.

நண்பன்,
லண்டன்

## ஒரு கடிதம் - இரண்டு விடயங்கள்

அன்புடையீர்,

1. குமரேசன் என்பவர் இலக்கியச் சந்திப்பின் பதினான்காவது அமர்வு தொடர்பாக எழுதியது பற்றி ஒரு சில சொற்கள்:

கருத்துச் சுதந்திரம் மறுக்கப்பட்டது (?) பற்றி (சமர் தவிர்ந்த) ஐரோப்பிய ஏடுகள் எழுதவில்லை என்று சொல்லியுள்ளார். அவருக்கு 'ஓசை' என்றொரு பத்திரிகையைத் தெரியாமலிருக்கலாம். அதில் அசோக் என்பவர், சமரில் வந்ததைப் போலன்றிச் சிறிது பண்பாக, அதே விஷயம் பற்றி முறையிட்டிருந்தார். அதிற் சில தவறுகள் இருந்ததாக ஓசைக்கு நான் எழுதினேன். அவரது பதிலும் ஓசையில் வந்தது. சமரில் வந்த விஷயம் பற்றிப் பலரும் அலட்டிக்கொள்ளாத காரணங்கள் எவையாயினும், ஒரு மஞ்சட் பத்திரிகை என்ன வர்ணக் கொடியுயர்த்தினாலும் அது மஞ்சட் பத்திரிகையே என்ற காரணத்தாலேயே சிலர் சமரைப் பொருட்படுத்துவதில்லை. இவ்வாறே (கனடா) தாயகத்திலும் ஐரோப்பிய மொட்டைக்கடித எழுத்தாளர்(கள்?) புனைபேர்களிற் தனிமனிதர்மீதான கீழ்த்தரமான அவதூறுகளை எழுதுகிறார்(கள்); "நீ சொன்னாற் காவியம்" என்று யாரும் மினக்கெட்டு அவற்றுக்குப் பதில் போடாது விடுகிறார்கள்.

பாரிஸ் கூட்டத்தின் அடிப்படையான பிரச்சனை, அளவுக்கதிகமான நிகழ்ச்சிகளை இரண்டு தினங்களில் நடத்த முயன்றமை. கலந்துரையாடலுக்கு அதிக நேரம் ஒதுக்கப்பட்டிருக்கலாம். 'பேச்சுரிமை மறுக்கப்பட்டதாகக்' குறைப்பட்டுத் தன் நண்பரொருவருடன் வெளிநடப்புச் செய்த ஒருவர், அங்குவந்த எல்லாரையும் தான் அம்பலப்படுத்திவிட்டதாகச் சொன்னார். உண்மையில் அவர் உட்பட, ஒதுக்கப்பட்ட நேரத்துக்கமையத் தமது கருத்துகளைத் தெளிவாகவும், விஷயத் தொடர்பாகவும் சுருக்கமாகவுங் கூற இயலாத சிலர் மற்றவர்கட்கான நேரத்தை மறுத்துவிட்டுப், பேச்சுரிமை மறுப்புப் பற்றி முறையிட்டமை நியாயமல்ல. நான் முதலாம்நாள் நிகழ்ச்சிக்குப் போனபோது சில உரைகள் முடிந்துவிட்டன. யாரும் மாக்சிஸம் இறந்துவிட்டது என்று யாரோ சொல்லக் கேட்டுக் கைதட்டினார்கள் என்றால் அது அவர்களது கருத்துச் சுதந்திரம். அக் கருத்துத் தவறானது என்று காட்டுவது மாக்ஸியவாதிகளது பொறுப்பு. எனவே, குமரேசன் விரும்புவதுபோல அவர்களது "வாய்களைப் பொத்துவது" பற்றி நாம் கவலைப்பட வேண்டுமா? அதுகூடக், கருத்துச் சுதந்திர மறுப்பென்று வேறுயாரும் முறையிட முடியாதா? லெனின் சொன்னாரென்று நினைவு - வேறு யாரேன் சொல்லியிருந்தாலென்ன: "ஒரு தொன் பேச்சைவிட ஒரு அவுன்ஸ் செயல் உயர்வானது." நடைமுறையைவிடச் சீரிய ஆசான் இல்லை.

2. சோலைக்கிளியின் சமீபகாலக் கவிதைகள் பற்றி அன்ஸார்

குறைகூறியிருப்பது வெறுக்கத்தக்கது. சகோதரர் எம்எல்எம்.அன்ஸாருக்கான எனது பணிவான வேண்டுகோள், சொற்களின் கடுமையை இல்லாமலாக்கவும்.

இளைய அப்துல்லாஹ்
இலங்கை




## யாழ் மக்களின் பரிதாபம்

சுவடுகள் ஐம்பதாவது இதழில் அண்ணன் ஜெயபாலனின் கவிதை உறைப்பாக இருந்தது. 'சுவடுகளை' அதிகம் வர்ணிக்க ஒன்றுமில்லை. எல்லா விடயங்களும் காரமாகவே இருக்கிறது. ஈழப் போராட்டத்துக்கு 'சுவடுகள்' இன்னும் உதவவேண்டும். எமது சகோதர யாழ்ப்பாண மக்களின் நிலை பரிதாபமாக உள்ளது. அரசகூலிப்படைகள் இரக்கமின்றிப் புலிப்போர்வையில் அப்பாவிப் பொதுஜனங்களைக் குண்டுபோட்டு இரத்தம் குடிக்கிறார்கள். யாழ்ப்பாண மக்களின் அவலநிலையை உலகறியச் செய்வது சுவடுகளின் பணியில் கட்டாயம் அடங்கவேண்டும்.

முகமட் அபார்
இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உப்புச்சப்பில்லாமல்" இருப்பதாக எழுதியுள்ளார். சோலைக்கிளியின் ஒரு கவிதை "சீனிபோடாத ஆறின தேத்தண்ணி" போல இருந்ததாக இவர் ஓசைக்கு எழுதியதாக நினைவு. (ஐஸ் தேநீர் பற்றி அவருக்கு ஒருவேளை தெரியாமலிருக்கலாம்). கவிதை ரசனை என்பது அகச்சார்பானதுங்கூட. எனவே இவ்வாறு மொட்டையயாக விமர்சிப்பதைவிடச் சிறிது விளக்கமாக விமர்சித்து எழுதுவாராயின், பிற வாசகர்கட்குப் பயன்படும். சோலைக்கிளியின் கவிதைகள், முக்கியமாக இப்போதையவை, பெரும்பாலும் ஒரே தன்மையினவாகத் தென்படுவது என்னவோ உண்மை. எல்லாமே தரமாக இருக்க அவசியமில்லை. ஆனாலும் 'ஆனை படுத்தாற் குதிரை மட்டம்' என்பதுபோல, இன்றுவரும் புதுக்கவிதைப் பிரவாகத்தின் நடுவே அவரது குறைபாடான கவிதைகளும் தெரிகின்றன. ஆயினும் அவரது கவிதைகள் மேலும் அதிக சமூகப் பிரக்ஞையைக் காட்டலாம் என்று முன்பு (சரிநிகரில்) எழுதியதை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்.

**○ சிவசேகரம்**
**லண்டன்.**

**சோர்வின்றி மீட்டெடுங்கள்**

தங்களின் இறுதி இதழ் மிக அழகுடன் இருக்கிறது; படைப்புகளும் நன்று. புதிய ஆண்டில் 'சுவடுகள்' சென்றிருப்பதை நினைத்தால் மகிழ்ச்சியாக உள்ளது. தொடர்ந்து அது முன்னேறவேண்டும். உழுத்த மரபிலிருந்து நமது தமிழ் இலக்கியத்தை மீட்டெடுத்து, புதிய தளத்திற்குக் கொண்டுசெல்லும் முயற்சியில் சோர்வேற்படக் கூடாது.

**○ சோலைக்கிளி**
**இலங்கை**

## சினிப்பித்தன் பார்த்த டைனசோர்

ஒக்டோபர்'93 இதழில் வெளிவந்த சினிப்பித்தனின் **'Jurassic Park'** திரைப்படக் குறிப்பு ஒரு வகையில் 'யானை பார்த்த குருடனின்' குறிப்பே.

<u>ஜூராஸிக் பார்க்கின் கதை:</u>

சினிப்பித்தன் பார்த்த 'கதைத்துளி' கோடீஸ்வரனும் பேரப்பிள்ளைகளும் மட்டுமே. ஆனால் கதை அது மட்டுமல்ல.

"இயற்கையின் படைப்பு/ பரிணாமத்தில் மனிதன் கைவைத்துக் குழறுபடி செய்யவேண்டாம்"

என்ற தனது பிரதான செய்தியைத் தருவதற்குக் கதாசிரியன் பாவித்த ஊடகமே கோடீஸ்வரப் பேரப்பிள்ளைகள்.

விஞ்ஞான உலகில் கடந்த சில தசாப்தங்களாகப் பாரிய வளர்ச்சியைக் காட்டிய துறைகளில் கணனியியலும், பரம்பரை அலகியலும் முதன்மை பெறுகின்றன. உயிர்களின் பாரம்பரிய இயல்புகளை மாற்றும் அறிவைப் பரம்பரை அலகு (ப.அ) (gene) மீதான ஆராய்ச்சி வழங்கியுள்ளது.

அணுவைப் பிளக்கும் அறிவு எவ்வாறு அணுகுண்டைத் தயாரிக்க வழிவகுத்ததோ அதேபோல் ப.அ. தொழில்நுட்பமும் தாவர, உயிரினங்களின் இயல்பான குணாம்சங்களை மாற்றுவதன் மூலம் பேரழிவுக்கு வழிவகுக்கும் சாத்தியத்தைத் தன்னகத்தே கொண்டுள்ளது. மேலும் ப.அ.களை மாற்றி உருவாக்கும் புதிய (அல்லது சற்று வித்தியாசமான) தாவர, உயிரினங்களுக்கான உரிமை (patent) யாருக்கு என்ற வினாவும் எழுகிறது. இதனால் ப.அ. தொழினுட்பத்தின் அபிவிருத்தி, பிரயோகம், விளைபொருள் மீதான உரிமை போன்றன தொடர்பான சட்டங்களை வரையும் தேவை எழுந்தது. இது தொடர்பான விவாதங்களில் ப.அ.களில் கைவைப்பது தொடர்பான அறவியற் (ethical) கேள்விகள் பல எழுப்பப்பட்டன*. சார்பாகவும் எதிராகவும் பல விவாதங்கள் முன்வைக்கப் பட்டன. இந்த விவாதத்தில் 'ஜூராஸிக் பார்க்'கின் நிலைப்பாடு தெளிவானது.

இப்பின்னணியில் பார்ப்பின் 'ஜூராஸிக் பார்க்' கதை சமகால முக்கியத்துவமுள்ள விஞ்ஞானப் புனைகதை எனலாம். ஆறுகோடி வருடங்களுக்கு முன் ஒரு டைனசோரைக் கடித்த (மரப்பிசினுள் அகப்பட்டுப் பாதுகாப்பாயிருந்த) நுளம்பொன்று இன்று அகழ்வாய்வாளரால் மீட்கப்படுகிறது. அதிலிருந்த இரத்தத்திலுள்ள DNAயை எடுத்த விஞ்ஞானிகள் (இற்றுப்போன துண்டுகளுக்கு தவளையின் DNAயைப் பொருத்தி) டைனசோர்களை மீளப் படைக்கிறார்கள்.

எல்லாம் தமது (கணனிக்) கட்டுப்பாட்டுக்குள் இருப்பதால் அனர்த்தங்கள் ஏதும் நேராது என எண்ணும் (விஞ்ஞானி) மனிதனுக்கு எவ்வாறு இக்கட்டுப்பாடுகள் உடையக்கூடும் என்பதைப் படம் சுட்டிக் காட்டுகிறது. அதன்மூலம் பரிணாமத்தில் அழிந்துபோனவற்றை அவை வாழமுடியாத சூழலில் படைப்பது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்ற செய்தியைக் கதை வலியுறுத்துகிறது.

<u>கணனி டைனசோர்கள்:</u>

இப்படத் தயாரிப்பில் புகழ்பெற்ற ஒரு விடயம் <u>கணனி டைனசோர்கள்</u>. வழமையாக டைனசோர்களைப் பொம்மைகளாகச் செய்து அவற்றைப் படம் பிடிப்பார்கள். ஆனால் இப்படத்தில் பொம்மை டைனசோர்கள் ஒருசிலவே. பெரும்பாலான டைனசோர்கள் கணனிப் பிரதிமைகளாகத் (images) தயாரிக்கப்பட்டு படக்காட்சிகளின் மேலிணைக்கப் (superimpose) பட்டுள்ளன. கணனித்துறையில் ஏற்பட்ட வளர்ச்சி முப்பரிமாண உருவங்களைத் திரையில் உருவாக்கவும், அவை அசைவதுபோலவே இயல்பான முறையில் அசையச் செய்யவும் வழிவகுத்துள்ளன.

<u>'பரபரப்பு மன்னர்' ஸ்பில்பேர்க்:</u>

ஸ்டீபன் ஸ்பில்பேர்க்கின் படங்கள் சிறுவர் இளைஞரின் சந்தைக்காகத் தயாரிக்கப் படுவதாலோ என்னவோ பரபரப்பைத் தருவன. எனினும் இவ்வாறு மேலெழுந்தவாரியாகத் தெரியும் பரப்பினூடு இழையோடும் மனித (சக உயிர்மீதான) நேயம் கவனிக்கவும், வலியுறுத்தவும் படவேண்டிதொன்று. இதற்கு உதாரணமாக E.T, Purple Heart ஆகியவற்றைக் கூறலாம்.

இன்று ஐரோப்பாவில் பெருகத் தொடங்கியுள்ள நவநாசிசத்தைக் கண்டிக்கும் ஸ்பில்பெர்க், அதை வெளிப்படுத்தும் முகமாக Dr.Shindler எனும் படத்தைத் தயாரித்துக் கொண்டிருக்கிறார். இது ஹிட்லரின் இனஅழிப்பு நடவடிக்கை தொடர்பான கதையாகும்.

**◉ மைத்திரேயி**

* இந்தக் கோடையில் நோர்வீஜியப் பாராளுமன்றத்தில் மனித முளையம் (embryo) மீதான ஆராய்ச்சி, விந்து/ முட்டை தானம், இன்னோரன்ன பல ப.அ. அம்சங்களை உள்ளடக்கிய சட்டவரைவுகள் மீதான விவாதம் சூடுபிடித்தது வாசகருக்கு நினைவிருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோலைக்கிளியின் கவிதை அற்புதம்

றொம்ப அற்புதமான கவிதைகள் பிரசுரித்திருந்தீர்கள். ஜெயபாலனின் கவிதையைப் படித்தபோது நிஜமாகவே மெய்சிலிர்த்தது. எவ்வளவு மனிதாபிமான வரிகள். இந்தக் கவிதை வரிகளது ஜீவிதம் ஏன் மனிதர்களில் அரும்புவதில்லை.

கவிதை என்றாலும் கவிதைதான்; சோலைக்கிளியின் கவிதை. அவருக்கென்றிருக்கிற தனித்துவமான கோணங்கள் கவிதையில் மின்னின. 'கடல் அழுத தலைவெட்டிய பிணம்' கவிதையைப் படித்தபோது, சோலைக்கிளி சொல்லுவதுபோல், மனம் அதிகாலையைப் போலக் குளிர்ந்தது. சுறாமீனை விடுத்து, அதைவிடவும் பயங்கரமான தொரு மீனைக் குறிப்பிட்டிருக்கலாம். இந்தப் பகுதிகளின் அவலங்களது யதார்த்தத்தைக் கவிதை செய்திருந்தார்.

ஈழத்தமிழர்கள் தமது விடுதலைக்காக நடத்தும் போராட்டம், அடிப்படையில் நீதிக்கும் நியாயத்திற்குமானது என்று தாங்கள் குறிப்பிட்டிருப்பது 100% உண்மை. விரும்பினாலும் சரி - விரும்பாவிட்டாலும் சரி, ஏற்றுக் கொள்ளப் பட்டேயாக வேண்டியது அது. ஆனாலும் தாங்கள் குறிப்பிடுகிற நீதி, நியாயம் போராட்டக் குழுக்களிடையே துளியுமில்லை. தமிழர்களது விடுதலைப் போராட்ட அத்தியாயங்கள் முழுக்க, போராட்டக் குழுக்கள் சனியன்களாகத் தான் இருக்கின்றன. தமிழர்கள், இன்று தமது விடுதலைக்காக உழைப்பதைவிடவும் மேலாக

கொலைகாரர்களுக்கு எதிராகவும் அடக்குமுறையாளர்களுக்கு எதிராகவும் (தமது இனத்திலேயே உள்ள) போராட வேண்டியுள்ளது. இந்தக் கொலைகாரத் தரித்திரக்காரர்களை அழித்துத் துப்பரவு செய்தால்தான் தமிழர் போராட்டம் உண்மையான தூய்மையடையும். அந்தத் தூய்மையின் தடங்களில் நின்று பெறுகின்ற தீர்வுதான், தமிழர்களை நிம்மதியாக வாழவைக்கும். எனவே தமிழர்களுக்கு இரண்டு பாரிய பொறுப்புகள் இருக்கின்றன என்று எண்ணுகிறேன்.

ஒன்று - விடுதலைக்கான நியாயமான போராட்டத்தைத் தூய்மையுடன் முன்னெடுப்பது. மற்றையது - இந்தப் போராட்டத்தைக் காட்டிக்கொடுத்து, அவசியமான மக்களைக் கொன்று குவிக்கிறவர்களுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து அவர்களை அப்படியே நசுக்கி, இயலாமலாக்கிவிடுவது.

என்னைப் பொறுத்தவரை, இவையொன்றும் பாரிய வேலைகளே அல்ல. ஆனால், இந்த இலட்சியத்தில் இருப்புக் கொள்ளுகின்ற அனைவரும் ஜெயபாலனின் கவிதை வரிகளினூடாகப் பிறந்தவர்களாக இருக்கவேண்டும்.

**o எம்எல்எம்.அன்ஸார்**
**இலங்கை**



நேரடி அனுபவச் சிதறல்கள்

# சிங்களவர் தேசம்

*இவை ஒரு தனிநபரான எனது அனுபவங்கள். இவை பொதுமைப்படுத்தப்படக் கூடியனவா என்பது தெரியவில்லை. இந்த அனுபவங்கள் ஆய்வுகளோ, ஆய்வின் அடிப்படையிலான முடிவுகளோ அல்ல. — தர்மா*

எனது எத்தனையோ இனிமையான கனவுகளையும், நினைவுகளையும் தின்றுவிட்டு, இன்று உயிர்குடித்து நிற்கும் ஒரு அந்நிய தேசமாகிவிட்ட சிறிலங்காவில் எனது முதற் காலடியின் முதல் நினைவு. மிக நீண்ட நாட்களுக்குப் பின் 'தாய்நாடு போகிறேன், எனது நண்பர்கள் குடும்பத்தினரைப் பார்க்கப் போகிறேன்' என்ற சந்தோஷமான நினைவுகளை என்னுள்க் காண முடியவில்லை. பயமும் அச்சமும் நிறைந்த ஒரு அவலமான பயணம். ஒரு ஈனமான குரலில் 'நான் தமிழன்தான், ஆனா வெளிநாட்டில் இருந்து வந்தனான்'..... (அதனால் புலிகளுடன் தொடர்பில்லை) என்று சொல்லி அரசபடையின் பிடியிலிருந்து தப்பிக்கும், வெட்கம் நிறைந்த பயணம். இலங்கையில் மனித மதிப்புகள் பற்றி உங்களுக்குத் தெரியும். தமிழ் மனித மதிப்பு இன்று சிங்களவர் தேசத்தில் ஒருபடி மேல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களவர் தேசம் என்று நான் கூறுவதால் நான் ஒன்றும் சிங்களவர்க்கு எதிரான தமிழ் வெறியனல்லன். நானும் மனிதர்களையும், மனித நேயத்தையும் மதிக்கும் சாதாரண மனிதன்தான். எனது பழைய இலங்கையில் (இன்று சிக்கலான தமிழீழம் - சிறிலங்கா எனக் கிழிந்து கிடக்கிறது எனது தேசம்) குடாநாட்டில் மட்டும்தான் தமிழன் என்ற மனிதனின் இருப்பு (சில மட்டுப் படுத்தல்களுடன் தான்) அனுமதிக்கப் பட்டிருக்கிறது.

குடாநாடு தவிர்ந்த பகுதிகளில் தமிழ் மனிதர்களின் இருப்பு - அந்நிய இருப்புத்தான்; அது சிங்களவர் தேசம்தான். இந்த சிங்களவர் தேசமே 87-89களில் 60,000 சிங்கள இளைஞர்களின் உயிரைத் தின்று, அன்று அவர்களின் இருப்பை அந்நியமாக்கியது. அப்போது இலங்கை முழுவதும் தமிழர் இருப்பு (புலி அரச நல்லுறவினால்) உறுதிசெய்யப் பட்டிருந்தது. சிங்களவர் தேசம் என்ற குறியீடும் நடக்கும் கதையைப் பொறுத்ததே.

படபடத்த நெஞ்சுடன், பலவீனமான கால்களுடன் விமான நிலையத்திலிருந்து வெளிவர பரிசோதனைக்காக நிற்கிறேன். என்ன கேட்பான்? 'ஏன் இலங்கைக்கு வந்தனி? எங்கே குண்டுவைக்கப் போகிறாய்?' என்பானா? ஒஸ்லோவில் எனது சிங்கள நண்பன் சொன்னது ஏனோ எனக்கு ஞாபகம் வருகிறது. 'நானும் கொழும்பு வருகிறேன். நீ என்னுடன் பாதுகாப்பாக கொழும்பில் திரியலாம்' இது அவன்.

'ஆமி பிடித்தால்?'

'ஆமி பிடிச்சால் நான் ஒன்றும் செய்யமுடியாது' இது அவன்.

சில தேவையற்ற கேள்விகளுக்குப் பின் நான் விமான நிலையத்தில் இருந்து விடுதலையாகிறேன். எனது பதில்கள், நான் இரண்டு நாள், ஒரு கிழமை, அல்லது ஒரு வருடம் தடுப்புக் காவலில் வைக்கப்பட வேண்டிய 'பயங்கரவாதி' அல்ல என்பதைப் பரிசோதனை அதிகாரிக்கு அறிவித்திருக்க வேண்டும்.

எங்கு போய்த் தங்குவது? எது பாதுகாப்பு? சிங்கள நண்பனின் வீடு? ஹோட்டல்? நீண்ட யோசனை, ஒரு கப் தேநீர், இரண்டு 'றோல்' முடிந்தவுடன் சிங்கள நண்பனின் வீடு செல்கிறேன். மிக அன்பான உபசரிப்பினூடே, ஒரு தமிழனைத் தங்க வைப்பதில் உள்ள கஷ்டங்களை எனக்கு மிகக் கனிவாக விளங்கப் படுத்திவிடுகிறார்கள். உலகில் எங்குமே தமிழர் வாழமுடியாத நிலையை நாம் உருவாக்கிவிட்டோம். கனடியர்களுக்குத் தமிழர் லி.ஃப்டில் சிறுநீர் கழிப்பார்கள்; ஏ.கே.47இனால் சுடுவார்கள் எனும் பயம் தொடங்கி....... சுவிஸில் தமிழர் கள்ள ஆடுவெட்டித் தின்பார்கள் எனும் பயம்வரை எல்லா இனங்களுக்கும் எமது இருப்பு பயமும் சந்தேகமும் நிறைந்ததாகி விட்டது.

கொழும்பு வீதிகளின் எனது காலடிகளின் ஒவ்வொரு பதிவும் சிறைச்சாலைகளின் திறப்புகளாக இருக்கும் (என்னை அடையாளப் படுத்த அடையாள அட்டை இல்லாவிடில். அடையாள அட்டையினால் பெரிதாக ஒன்றும் சாதித்துவிட முடியாதுதான்). நெரிஞ்சிமுட் பத்தையில் வெறும்பாதம் பட்டதுபோல், அரசபடைகளின் கண்கள் துளைத்திட கொழும்பு நகர் வலம்வருவது ஒரு அவமான அனுபவம்.

எனது முதலாவது சந்திப்பு, கொழும்புவாழ் தமிழர்கள் மிகப் பயப்படும் வெள்ளைக் கார் சி.ஐ.டி. பொலிஸ். அவர்கள் பிடித்தால் பிடிபட்டவர் எங்கு என்று அறியப் பலநாள் எடுக்குமாம். என் அதிர்ஷடம், தோளில் தொங்கிய எனது பையைப் பரிசோதனை இட்டதுடன் அதற்குள் குண்டு இல்லை என திருப்திப்பட்டுப் போய்விடுகிறார்கள்.

ஒருநாள் தெரிந்த நண்பர் வேலை செய்யும் இடத்துக்குப் போகிறேன். எனது நண்பரின் கீழ் வேலை செய்த ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு விட்டார். எனது நண்பர் ஒரு காலத்தில் 'புளொட்'டுக்காக வேலை செய்து, ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டு, ஒரு வருடம் கைதியாய் இருந்து விடுதலையானவர். நண்பருடன் வேலை செய்பவர் புலிக்கு வேலை செய்கிறார் என்ற சந்தேகமே அவரது கைதுக்குக் காரணம் என்கிறார்கள். ஒரு மாதத்தின் பின் ஏதேதோ செய்து நண்பர்களது வேலையாளை விடுதலை செய்கிறார்கள்.

ஒரு மாலைவேளையில் 65 வயதான ஒரு தமிழ் மூதாட்டி, கடையில் ஏதோ சாமான் வாங்கிக்கொண்டு வருகிறார். இரு சிங்கள வாலிபர்கள் மோட்டார் சைக்கிளில் வந்து 'நீ தமிழச்சியா? எடு அடையாள அட்டையை' என்கின்றனர். அவள் கொட்டைப் பெட்டியை எடுக்கிறாள். அதைப் பறித்துக்கொண்டு பறந்துவிடுகின்றனர். அதில் 75ரூபாய் பணம், அவளது அடையாள அட்டை. அவளது இருப்பு, அவள் எதற்கோ சிறுகச் சிறுகச் சேமித்த ஒரு தொகை. அதோ ஒரு தமிழ்க் கிழவி அநாதரவாக தலைநகர வீதியில்.

எனக்கு மாலைப் பொழுதில் காலிமுகத் திடல் (Galleface) கொழும்பில் ஆறுமணிக்குப் பின் பொலிசாருக்குக் கொடுக்கப்பட்ட விலாசத்தில் இருந்து வெளிவருவது தமிழர்களுக்கு ஆகாத செயல். இதனால் தமிழர் பொலிசாருக்கும், இராணுவத்தினருக்கும் பயப்படுவது போல, வாடகை வீட்டில் இருப்பின், வீட்டுச் சொந்தக்காரருக்கும் பயப்பட வேண்டும். என்றாலும் ஒருவாறு எனது நண்பர், செஞ்சிலுவைச் சங்க 'வானி'ல் என்னைப் பாதுகாப்பாகக் காலிமுகத்திடலுக்கு அழைத்துப் போகிறார். அங்கு சிறிதுநேரம்




நிற்கிறோம். அங்கு காவலிருந்த பொலிசார் எம்மை நோக்கிவர, எமது தமிழ்ச் சத்தம் அடக்கி அமைதி காக்கிறோம். பொலிசார் கடந்ததும், நண்பர் தனது கடைசிக் காலிமுகத் திடல் அனுபவம் பற்றி என்னிடம் கூறுகிறார்.

வைத்தியரின் ஆலோசனைப்படி அதிகாலை எனது நண்பர், தனது நண்பர்கள் இருவருடன் ஒவ்வொரு நாளும் காலிமுகத் திடலில் ஓடவேண்டி வருகிறது; உடம்பு கூடிவிட்டதாம். ஒருநாள் ஆகாயப் படையால் மறிக்கப்பட்டுப் பல கேள்விகளுடன் ஓட அனுமதிக்கப் படுகிறார்கள். வழமைபோல வயதான தனது நண்பரைக் காருக்குப் பாதுகாப்பாக நிறுத்திவிட்டு, மற்ற இருவரும் ஓட ஆரம்பிக்கிறார்கள். சிறிது நேரத்தில் பின்னால் மூச்சிரைக்கும் சத்தம். திரும்பினால், பாவம் வயதான நண்பர். 'நிண்டாத் தேவையில்லாத கேள்விகள் கேட்பாங்கள்' பின்னால் இளைக்கும் மூச்சுகளிடையே பலவீனமான குரலில் அந்த நண்பர்.

மாலைப் பொழுதுகள் கொழும்பில் தமிழர்களுக்கு இனிமையாக இருப்பது குறைவு. ஒருநாள் எனது நண்பரின் அண்ணன் மகன் ஒட்டோவில் கொட்டாஞ்சேனையில் இருக்கும் வீட்டிற்கு வருகிறார். ஒட்டோ ஓட்டியுடன் அருகில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்டியின் நண்பர். இவருக்குப் பக்கத்தில் காலிமுகத் திடல் வந்ததும் ஒட்டோ வழிமாறிப் போகிறது. தன்னைக் கடத்த முயற்சி நடக்கிறது என்பதை அறிந்த கணத்தே, ஒட்டோவைவிட்டுப் பாய்கிறார் இளைஞர். அவ்வளவுதான். தலையில் அடிபட்டு, ஒருகிழமை ஆஸ்பத்திரியில் இருந்து வீடு வருகிறார். ஆனால் நித்திரையைப் பறிகொடுத்து விடுகிறார். பல இரவுகள் நித்திரையில்லாது போகிறது. நான் கடைசியாகப் பார்த்தபோது டொக்டர் தனது தலைநரம்பு பாதிக்கப் பட்டதை, உறுதிப் படுத்தியிருக்கிறார் என்கிறார்.

ஈழப்போர்2 இனாலும் வெளிநாட்டில் இருக்கும் தமது கணவன்மாரைச் சென்றடையவும் லொட்ஜ், ஹோட்டல், தனியார் வீடுகளில் தற்காலிகமாகத் தங்கியுள்ள தாய்மாரின், பெண்களின் அவலங்கள் சொல்ல முடியாதவை. புதிய சூழலில் அவர்கள் தமது வாழ்வை ஒழுங்கமைக்கக் கொடுக்கும் விலை மிகப்பெரிது. தமது பிள்ளைகளை ஒழுங்கான கல்வியில்லாது சீரழிகின்றனர் என்ற கவலை ஒருபுறம், லொட்ஜ்களில் வேலை செய்வோர் சிறுகுழந்தைகளை 'வெத்திலை வாங்கி வா, பீடி வாங்கி வா' என வேலை வாங்கும் கொடுமை மறுபுறம். சிறார்கள் லொட்ஜ்களில் கூலிக்கு வேலைக்கே அமர்த்தப் பட்டிருக்கிறார்கள்.

எனக்குத் தெரிந்த ஒரு பெண், சிங்கள வீட்டில், 'ஐந்து மணிக்குமுன் வந்துவிட வேண்டும், யாருமே உங்களை எந்த நேரத்திலும் பார்க்க வரமுடியாது' என்ற கட்டுப்பாடுகளுடன், உயர்வாடகைக்குச் சம்மதித்துக் குடியேறியுள்ளார்.

எல்லாப் பெண்களும் இந்த வாழ்க்கையை விரும்பவில்லை என்றில்லை. யாழ்ப்பாணத்தில் சாப்பாடே இல்லை என்ற நிலையில், கொழும்புவாழ் தமிழ்ப் பெண்கள் சிலர் மதிய உணவிற்குக் கொக்கோ கோலா தேடி அலைவதும், நான்கு மணியளவில் லொட்ஜின்முன் ஆளுக்கு ஆள் மாறிப் பேன் பார்ப்பதும் ஒரு கண்கொள்ளா யாழ்ப்பாணத் தெருக் காட்சி. இது மட்டுமல்ல சில பெண்கள் தமது தற்காலிகக் காதலன் பக்கத்தில் நிற்க, வெளிநாட்டில் இருக்கும் தமது கணவனிடம் காசு அனுப்பச் சொல்லி சிருங்கார ரசத்தில் குழையும் காதல் வேடிக்கையானது (இவர்கள் சிறுபான்மையினரே எனினும் பரவலாக உள்ளனர்). ஆண்களின் சீரழிவு வழமை போலத்தான்.

லொட்ஜில் வேலை செய்பவர்களது மேலதிக வருமானமுறை மிகக் கொடூரமானது. வெளிநாட்டில் இருந்து யாரும் புதிதாக வந்தால், உடனே லொட்ஜ் நிர்வாகிகள் பொலிசாருக்கு அறிவிப்பார்கள். இது சாதாரணமாக நிகழும் நபர் தொடர்பான பதிவுத் தகவல் அல்ல. இவ்விசேட தகவல் கிடைத்ததும் பொலிசார் வெளிநாட்டில் இருந்து வந்தவரைக் கைது செய்து, சிறையில் அடைத்து மிரட்டுவார்கள். அவருடன் பொலிசார் 10-20ஆயிரம் அளவில் பேசி, அவர் விடுதலை தொடர்பாக ஒரு முடிவுக்கு வருவார்கள். அல்லது லொட்ஜ் மூலம் ஒரு வழக்கறிஞரை அமர்த்திக் கைதானவரை விடுதலை செய்வார்கள். வழக்கறிஞரை அமர்த்தும்போது பேசும் தொகை மூன்றாகவும், அல்லாத பட்சத்தில் இரண்டாகவும் பிரித்து லொட்ஜ் நிர்வாகிகளுக்கும் பொலிசாருக்கும் செல்லும். வெளிநாட்டுத் தமிழர் அல்லது உள்நாட்டுத் தமிழர் கொஞ்சம் 'அட்டகாசமாக'த் திரியும் பட்சத்தில் கைதுகள் பல தடவை நடைபெறும். இப்படி ஐந்து தரம் கைது செய்யப்பட்ட ஒரு தமிழ் இளைஞனையும் சந்திக்க நேர்ந்தது.

(இன்னும் வரும்)



# தி.மு.க.வின் மரணம்

**அன்பரசன்**

திராவிட முன்னேற்றக் கழகம் இறந்துவிட்டது. அப்படித்தான் சொல்ல வேண்டும். உயிர் போக்கடிக்கப் பட்டுவிட்டது. கருப்பு - சிவப்புக் கொடியால் போர்க்கப்பட்ட வெறும் சடலம் மாத்திரமே தற்போது இருக்கிறது. திமுக ஏறத்தாழ 40 வருடங்களுக்கு மேலாகத் தமிழகத்தில் வரலாறு செய்துவந்த பாரிய கட்சி. இக்கட்சியில் இருந்து ஈ.வே.சி.சம்பத் போன்ற மூத்த தலைவர்கள் உட்படப், பலர் விலகியிருக்கிறார்கள்; எம்ஜிஆர் போன்ற செல்வாக்கும், கவர்ச்சியும் மிகுந்த பல உறுப்பினர்கள் விலக்கப் பட்டிருக்கிறார்கள். ஆனால் திமுக உயிர் வாழ்ந்தது. அடுத்தடுத்துப் பெற்ற தோல்விகளால்கூட அதன் ஆணிவேரை அறுக்கமுடியவில்லை. இருக்கவேண்டிய ஒரு கட்சியாக அது இருந்தது. 'இடர்கள்' எத்தனை வரினும் உறுதியோடு துணைநின்ற இலட்சக் கணக்கான உறுப்பினர்களோடு திமுக நவம்பர் 11ம் திகதிவரை நிமிர்ந்து நின்றது. இந்த நவம்பர் 11ம் திகதியே திமுக உயிர்வாழ்ந்த இறுதிநாளாகப் போயிற்று. இந்த நாளில்தான் கருணாநிதியாலும் அவரது குடும்பத்தினராலும் திமுக துடிக்கத் துடிக்கப் படுகொலை செய்யப் பட்டது. நாற்பது இலட்சம் உறுப்பினர்களைக் கண்ட அந்த மாபெரும், வை.கோபால்சாமி என்ற உறுப்பினர் ஒருவரை - ஒரே ஒருவரை விலக்கியதன் மூலம் இறந்து போனதெப்படி?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணாநிதியைப் பொறுத்தவரை திராவிட முன்னேற்றக் கழகம் ஓர் அரசியல் கட்சி என்பதைவிட, தனக்கும் தனது குடும்பத்துக்கும் சொந்தமான ஒரு நிறுவனமாகவே கருதியிருந்தார். எம்ஜிஆர் ஆட்சிக் காலத்தில், இடைவிடாத சோதனைகளின் மத்தியில் கட்சியைக் காப்பாற்றியவர் என்று தொண்டர்களினால் கருதப் பட்டதனால், அவரது சர்வாதிகாரத் தனத்தை அவர்கள் ஆரம்பத்தில் ஆட்சேபிக்கவில்லை. "டில்லிக்கு மாறன், சென்னைக்கு ஸ்டாலின், மதுரைக்கு அழகிரி, கோவைக்குத் தமிழரசு, முரசொலிக்குச் செல்வம்" என்று கட்சியின் மூலை முடுக்கெல்லாம் தனது பிடியினை இறுக்கி, 500கோடி ரூபாய் மதிப்புள்ள கட்சிச் சொத்துகளையும், கட்சியினையும் தனது குடும்பச் சொத்தாகக் கருதி, கருணாநிதி நடாத்திய அட்டகாசம் மெல்ல மெல்லத் தொண்டர்களிடையே அதிருப்தியைத் தோற்றுவிக்கத் தொடங்கியது. எனினும் கருணாநிதிக்கு எதிராகச் சிந்திக்கவே அவர்கள் தயங்கினார்கள். அந்தத் தயக்கத்தை நிரந்தரமாக்கிக் கொள்ளலாம் என்று நினைத்ததன்மூலமே கருணாநிதி ஒரு பெரிய தவறைச் செய்துவிட்டார். தனக்குப் பின் கட்சியையும், சொத்துகளையும், தனது

உதவாக்கரை மகன் ஸ்டாலினுக்கு எழுதிவைக்க அவர் எடுத்த முயற்சியுடன், கருணாநிதியின் சர்வாதிகாரத்தனம் ஆட்டங்காணத் தொடங்கியது. பாலியல் வன்முறை உட்படப்பல கிறிமினல் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகியுள்ள ஸ்டாலின், கருணாநிதியின் மகன் என்பதைத் தவிர, வேறெந்தத் தகைமையும் இல்லாதவர். திராவிட சமூகத்தின் பாதுகாப்பு அரண் எனக் கருதப்படும் திமுகவிற்கு இந்தச் சமூகவிரோதி தலைமை தாங்க இருப்பதைக் கட்சியின் மிகப் பெரும்பாலானோர் வெறுத்தனர். இந்த அதிருப்தியாளர்களின் கண்டுபிடிப்பே, 'வை.கோ' என்றழைக்கப்படும் வை.கோபாலசாமி.

ஈழத்தமிழர்கள் மீது கொண்ட தீவிர அக்கறைதான் வை.கோபாலசாமியைத் திரைநீக்கம் செய்தது. அதன்பின்பே வை.கோ கவனத்திற்குள்ளாகினார். இந்தியக் கொலைப்படை ஈழத்தில் புரிந்த கொடூரங்களை எதிர்த்து டில்லி ராஜசபையில் குரலெழுப்பிய போது தமிழகமெங்கும் வாசிக்கப் பட்டார். உயிருக்கஞ்சாது அவர் மேற்கொண்ட ஈழப்பயணமும், ஈழத்துக்கான அவரது தீவிர ஆதரவும், திராவிடர் நலன்பேணும் திமுகவிற்கு அடுத்த தலைவராக வருவதற்கு இவரே தகுதியானவர் என்ற கருத்தை திமுக தொண்டர்களிடையே ஏற்படுத்தியது. மேலும் அவரது உணர்ச்சியான பேச்சுகளும், அயராத உழைப்பும் திமுக தொண்டர்களைக் கவர்ந்தது. நாஞ்சில் மனோகரன் போன்ற மூத்த தலைவர்களே வை.கோ.தான் அடுத்த தலைவர் என்று கருத ஆரம்பித்தனர்.

இந்த நிலைமை கருணாநிதி சற்றும் எதிர்பாராத ஒன்றாகும். தனது ஆயுட்காலத்தில் தனக்கு அடுத்ததாகத் தன் மகனைவிட வேறு ஒருவர் வரக்கூடும் என்பதனை அவர் கனவுகூடக் கண்டிருக்க மாட்டார். ஆத்திரமடைந்த கருணாநிதி, வை.கோ ஒரு தலைவனாக வளர்வதைத் தவிர்ப்பதற்குப் பல முனைகளில் முயன்றார். உட்கட்சித் தேர்தலில் தலையிட்டு, வை.கோ. ஆதரவாளர்கள் கட்சிப் பதவிகளை வென்றுவிடாதபடி பார்த்துக் கொண்டார். வை.கோ. ஆதரவாளர்களைக் ட்சியை விட்டுத் தூக்கி எறிந்தார்; கட்சிக் கூட்டங்களிலும், நிகழ்ச்சிகளிலும் வை.கோ.வைப் புறக்கணித்தார். ஆனால் அவரது இந்நடவடிக்கைகள் மறுவிளைவுகளையே பயனாகக் கொடுத்தன. தலைமையினால் வை.கோ. திட்டமிட்டு ஒதுக்கப் படுகிறார் என்ற அனுதாபம், ஆதரவாக மாறியது. கருணாநிதியின் மகனுக்குப் போட்டியாளர் என்ற நிலைமாறி, கருணாநிதிக்கே போட்டியாளர் என்ற நிலை உருவானது.

வை.கோ.வின் வேகமான வளர்ச்சி கண்டு கருணாநிதி குடும்பம் சலசலத்துப் போனது. எம்ஜிஆரை விலக்கியது போல, வை.கோ.வைக் கட்சியை விட்டு விலக்குவது சாத்தியப் படாது என்று கருணாநிதி அறிந்திருந்தார். வெளிப்படையாக பல மாவட்டச் செயலாளர்களும் கட்சியின் முக்கியஸ்தர்களும் வை.கோ.மீது விசுவாசத்தைக் காட்டியிருந்தனர்.

வெள்ளம் தலைக்குமேல் போவதைக் கருணாநிதி உணர ஆரம்பித்தார். இதற்கு மேலும் வை.கோ.வை அனுமதித்தால் இதுவரை காலமும் கட்டிக்காத்த தனது சாம்ராஜ்யம் கைநழுவிப் போவதைத் தவிர்க்க முடியாது என்பது அவருக்குத் தெளிவாகப் புரிந்திருந்தது. எனவே வை.கோ.வை வீழ்த்தவேண்டும் என்று முடிவு செய்யப் பட்டது. ஆனால் கழகத் தொண்டர்களின் அமோக ஆதரவைக் கொண்டுள்ள வை.கோ.வை வீழ்த்துவது எப்படி?

எத்தனையோ சோதனைகளை இதுவரை சந்தித்துள்ள கருணாநிதியைத் தாக்காத தடுமாற்றம் இப்போது அவரைத் தாக்கியுள்ளது. என்ன செய்வது, எப்படிப் பேசுவது, எவரிடம் ஆலோசனை கேட்பது என்று தெரியாமல் குழம்பியிருந்த கருணாநிதியைத் திராவிட இயக்கத்தின் பரமவிரோதிகளான பார்ப்பனீய சக்திகள் சுற்றி வளைத்தன. முதுமையினாலும், தள்ளாமையினாலும், ஆத்திரத்தினாலும் பலமிழந்துபோன கருணாநிதி, அவர்களின் வலையில் வசமாகச் சிக்கிக் கொண்டார். வை.கோ.வுக்குக் குழிபறிக்கச் சொல்லிக் குடும்பம் நெருக்கியது. கழகத்துச் சனியன் என்று வர்ணிக்கப்படும் அவரது மருமகன் மாறன் கத்தியைத் தீட்டிக் கொடுக்க, சுப்பிரமணிய சுவாமி, 'சோ' ராமசாமி போன்ற பார்ப்பனீய சதிகாரர்கள் குறித்த சுபவேளையில், கருணாநிதி கழகத்தின் அடிவயிற்றில் கத்தியைச் செருகினார்.

வை.கோ.வைக் கட்சித் தலைவராக்கும் நோக்குடன் தன்னை விடுதலைப் புலிகள் கொல்லச் சதி செய்ததாக உறுதிப்படுத்தப் படாத உளவுத் துறையின் செய்தியைப் பத்திரிகைக்கு வெளியிட்டவுடன் தமிழகம் குலுங்கும் என்று கருணாநிதி சந்தேகமின்றி எதிர்பார்த்தார். நகரங்கள் தீப்பற்றும்; வை.கோ.வின் ஆதரவாளர்கழது வீடுகள் தகர்ந்து போகும்; வை.கோ. இரத்த வெள்ளத்தில் மிதப்பார் என்றெல்லாம் கனவுகண்ட கருணாநிதிக்கு, தி.மு.க வரலாற்றில் முதற்தடவையாக கழகத் தொண்டர்களின் கேலிச்சிரிப்பு பதிலாகக் கிடைத்தது. நிலைகுலைந்துபோன கருணாநிதி அரசியல் துறவறம் கொள்வதாக அறிவித்தார். "நன்றி, உடனே செய்தால் நல்லது" என்ற பதில் வந்தது. இந்த அதிர்ச்சியைத் தாங்கிக்கொண்டு கருணாநிதி உயிரோடு இருப்பதே ஆச்சரியம்தான்.

தி.மு.க.வை ஈழ மக்களின் விரோதியாக்குவது தங்களால் சாத்தியமாகும் என்பது பார்ப்பனீயச் சதிகாரர்கள் நினைத்துப் பார்த்திராத ஒன்று. கருணாநிதி உள்ளூர விரும்பினாலும், கொள்கையளவில் திராவிடர்களின் முன்னேற்றத்தைத் தனது முதுகெலும்பாகக் கொண்டுள்ள ஒரு கட்சியை, தமிழின



உணர்வையே தனது உயிர் நோக்காகக் கொண்டுள்ள தி.மு.க.வை, ஈழத்தமிழர்களது நலனுக்கு எதிராகப் பேசச் செய்யமுடியும் என்று பார்ப்பனீயச் சதிகாரர்கள் மட்டுமல்ல, உலகில் உள்ள எந்தத் தமிழனும் எதிர்பார்த்திருக்கவில்லை. ஆனால் எல்லோரது எதிர்பார்ப்புகளையும் பொய்யாக்கிவிட்டு, தனது மக்களின் நலனுக்காக, 500கோடி ருபா சொத்துக்காக - ஈழத்தமிழரென்ன, எவரது நலன்களையும் கருணாநிதி விற்கத் தயாரானார். பிரபல தமிழகப் பத்திரிகையாளரான வலம்புரி ஜான் தனது கட்டுரை ஒன்றில், கருணாநிதியின் அண்மைக்கால நடவடிக்கை பற்றி "தமிழினத் தலைவராக இருந்த கருணாநிதி இப்போது வெறும் அப்பாவாகவும், மாமாவாகவும் போனது தமிழ்ச் சாதியின் துயரமான தலைவிதி" என்ற கருத்தில் குறிப்பிட்டுள்ளார்.

முரசொலி மாறனின் வேண்டுகோளை ஏற்று, இந்திய உளவுத்துறையை வை.கோ. ஒழிப்பு முயற்சிக்கு ஏற்பாடு செய்து தந்தவர் சுப்பிரமணிய சுவாமியே என்று கதைபடுகிறது. இந்தப் பார்ப்பனீயச் சதிகாரர்களைப் பொறுத்தவரை கருணாநிதியின் இன்றைய பரிதாப நிலை ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்தது. கருணாநிதிக்கு வேண்டிய ஒரு 'உதவி'யைச் செய்வதன்மூலம் தங்களுக்குச் சாதகமான பல விளைவுகளை எதிர்பார்த்துக் கணக்கிட்டார்கள்.

* முதலாவதாக தி.மு.க.வில் விரிசலை ஏற்படுத்துவது.

* இரண்டாவதாக தி.மு.க.விலிருந்து தீவிர நிலைப்பாடுடைய வை.கோ. அணியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியேற்ற வைப்பதன்மூலம், தி.மு.க.வை ஒரு காயடிக்கப்பட்ட கட்சியாக்கி, அதிமுக மாதிரி ஒரு சுரணையற்ற கட்சியாக்குவது.

* மூன்றாவதாக, திமுகவே ஈழத்துக்கு எதிர் என்ற நிலையை உருவாக்கி, தமிழின உணர்வுள்ள மக்களைக் குழப்புவது.

* நான்காவதாக ஈழப் போராட்டத்தை ஆதரிக்கிற ஒரு கட்சி தமிழகத்தில் ஆட்சியைப் பிடிக்கவே முடியாது என்று தமிழகக் கட்சிகளை நம்பவைப்பது.

* ஐந்தாவதாக திமுக, அதிமுக, கொங்கிரஸ் ஆகிய தமிழகத்தின் மூன்று பாரிய கட்சிகளும் ஈழப் போராட்டத்திற்கு ஏதிராக உள்ளன என்ற நிலையை உருவாக்குவதன் மூலம் தமிழ்நாட்டையும் ஈழத்தையும் விரோதிகள் ஆக்குவது.

* ஆறாவதாக, தமிழகத்திலே எதிர்காலத்திலே தமிழுணர்வு, தீவிரவாதம் தலைதூக்க விடாமல் செய்வது.

இதையெல்லாம் ஐம்பதாண்டுகால அரசியல் முதிர்ச்சி உடைய கருணாநிதி அறியாவதரல்ல. ஆனால், பேராசையும், பிள்ளைப்பாசமும் அவரை நயவஞ்சககமான அரசியல்வாதி ஆக்கிவிட்டது.

என்றுமே தானும் திமுகவும் ஈழப் போராட்டத்தை ஆதரித்ததில்லை என்று அறிவித்த கருணாநிதி, "போனால் போகிறது, ஒரு தமிழ் மாகாணம் வேண்டுமானால் பெற்றுக் கொள்ளுங்கள்" என்ற ரீதியில் முன்னாள் உலகத் தமிழர்களின் தலைவர் ஈழத்தமிழர்களைப் பார்த்து இன்று சொல்கிறார். ஈழத்தமிழர் போராட்டத்தை ஆதரிக்கிறேன் என்று கோபால்சாமி குறிப்பிட்டதைக் கட்சிக் கட்டுப்பாட்டை மீறிய செயல் என்று கூறியிருக்கிறார். பைத்தியம் பிடித்துவிட்டதோ என்று சந்தேகப்படும்படியாக அவரது பேச்சுகளும் செயல்களும் உள்ளன. திமுக இன்று பார்ப்பனாகளாலும், வடஇந்திய உளவுப் படையாலும் வழிநடத்தப்படும் கொடுமையைக் காண நல்லவேளை அண்ண இன்று உயிரோடு இல்லை.

கருணாநிதியின் இந்த அயோக்கியத் தனத்தினால் இன்று திமுக தொண்டர்கள் மனம் கசந்து போயுள்ளனா. ஆனால் கருணாநிதி உயிரோடிருக்கும் போதே தமது அதிருப்தியைக் காட்டும் தொண்டர்கள் எத்தனை வீதம் என்பது தெரியவில்லை. கட்சியின் பதவியில் உள்ளவர்கள்



பெரும்பாலும் இன்னும் கருணாநிதியிடமே மண்டியிட்டுள்ளனர். இவர்களிற் பலரை, கருணாநிதியிடம் உள்ள கோடிக் கணக்கான சொத்துகள்தான் கருணாநிதியின் பக்கம் நிற்கவைத்துள்ளது என்கிறார்கள். தமிழின உணர்வே திமுகவின் உயிர்க்காற்று. அந்த இனஉணர்வைக் கருணாநிதியின் திமுக விற்றுவிட்டது. அதன்பின் இப்போது திமுகவின்...... கருணாநிதி தயாராக இருக்கிறார்.

வை.கோ. ஆவேசத்துடன் பேசுகிறார். சிலவேளை ஆத்திரப்பட்டு அவசியம் இல்லாதவற்றையும் பேசுகிறார். அவரை இளைஞர்களே பெரும்பாலும் சூழ்ந்துள்ளனர். திமுகவின் உயிர்க்காற்றைக் கோபாலசாமியே வைத்திருக்கிறார் என்று இந்த இளைஞர்கள் நம்புகிறார்கள். ஈழப் போராட்டத்திற்குப் பகிரங்க ஆதரவு தருகிறார். ஈழமக்களின் மீதான தனது அக்கறையினை வெளிப்படையாகவே சொல்கிற். பத்திரிகைகள் இவரைப் பற்றியே அதிகமாக எழுதுகின்றன. எனினும் பெரும்பாலான பத்திரிகைகள் திமுக பத்திரிகைகள், திமுகவில் இருந்து வை.கோ.பிரியும்வரை அவரை உயர்த்திப் பிடித்து, அவர் கட்சியிலிருந்து பிரிந்ததும் அவரைத் தாக்கத் தொடங்கியுள்ளன.

அண்மைக்கால ஆனந்த விகடன் "ஈழத்தமிழர்களைப் பற்றிப் பேசுகிறார், இவர் ஒரு ஆபத்தான பேர்வழி" என்று ஆசிரியத் தலையங்கம் தீட்டியிருநத்து. வை.கோ. தமிழகத்தின் வலுவான அரசியற் சக்தியாக வருவாரா என்பது பற்றி இன்னமும் சொல்ல முடியாதுள்ளது. அப்படி அவர் வந்தால் தமிழர்களின் அதிர்ஷ்டம் என்று சொல்லலாம். இல்லையேல், தமிழகத்துத் தலைவிதி அதுதான் என்று நாம் கவலைப்படலாம்.

தற்சமயம் கருணாநிதி தான் வென்றிருப்பதாகவே நினைக்கிறார். கட்சிச் சொத்துகள் இன்னமும் அவரிடமே இருக்கின்றன. மகனை அடுத்த தலைவராக்கும் அவரது கீழ்த்தரமான ஆசைக்குத் தடையாயிருந்த விடயம் கட்சியில் இருந்து அகற்றப்பட்டு விட்டது என்று நினைத்து ஆறுதல் அடைந்திருக்கிறார். ஆனால் உண்மையில் கருணாநிதி, வை.கோ., தமிழ்நாடு, தமிழர்கள் எல்லோருமே தோற்றிருக்கிறார்கள். உண்மையான வெற்றி பார்ப்பனீயச் சதிகாரர்களுக்கே. இந்தச் சுற்றில் அவர்கள்தான் வென்றிருக்கிறார்கள். ஆனால் இன்னும் பல சுற்றுகள் இருக்கின்றனவே, பார்க்கலாம். ●

## வன்முறைக்கு எதிராக!



*அமெரிக்காவில் கறுப்பின மக்களிடையே நிலவும் வன்முறைகளை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளில் தன்னை ஈடுபடுத்தவுள்ளதாக பிரபல அமெரிக்க நடிகர் பில் கொஸ்பி அறிவித்துள்ளார். இவரது முக்கிய நடவடிக்கையாக தொலைக்காட்சி மற்றும் திரைப்படங்களில் இடம்பெறும் வன்முறைகளைக் குறைக்குமாறு பிரசாரத்தில் ஈடுபட உள்ளார் கொஸ்பி. இந்த நடவடிக்கைகளில் இவருடன் பிரபல அரசியல்வாதியான ஜெஸி ஜக்ஸன் ஈடுபடுவார்.*

*கடந்த வருடம் நியூயோர்க்கில் மாத்திரம் 362 கறுப்பின இளைஞர்கள் (21 வயதுக்குக் கீழ்) தமக்கிடையேயான வன்முறைகளில் பலியாகினர். இவ்வாறான கொலைகளுக்கு போதைவஸ்துப் பாவனை, விற்பனை என்பன முக்கிய காரணமாக உள்ளதால் அவற்றையும் எதிர்த்துத் தமது பிரசாரத்தை முடுக்கவுள்ளனர் இவர்கள்.*

*அமெரிக்காவில் நிலவும் கறுப்பு - வெள்ளை இனப்பாகுபாடுகளும், கறுப்பின மக்களது நிரந்தர வறுமையும் ஒழிக்கப்படும்வரை கறுப்பின மக்கள் இவ்வாறான வன்முறைகளில் இருந்து தம்மை விலத்தி வாழ்வதற்கான சந்தர்ப்பங்கள் குறைவாகவே இருக்கும்.*

– சிவன் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.எல்.எம்.அன்ஸாரின்
இரு கவிதைகள்

## வீதிக்கு வருகிற தெம்பு

கொழும்பு வீதியில் அகதியாய் நான்.
உண்ணுகிறேன்
இரண்டு நாட்களுக்கு ஒரு தடவை.
பிள்ளை குட்டி
குடும்பம் வாழ்க்கை அனைத்தும்
தண்ணீர் இல்லாத
இலவசமாய் வீசுகிற காற்றுக் கிடையாத
முகாமில்,
அழுகி நாறுகிற குப்பைகள் மாதிரி.

வெத்திலைக் கூறு வாங்க வீதிக்குவந்தால்
அடையாள அட்டை கேட்கிறாய்.
இல்லை என்றால்,
வெறி தீர
குத்து குத்தெனக் குத்தி
கூட்டிச் செல்லுகிறாய் எங்கெல்லாமோ.
இருட்டு அறைகளிலும் வைத்துச் சாத்துகிறாய்.

உனது குண்டுகள் வீசுதலால்
பொசுங்கிக் காய்ந்த
எனது ஒரு கை மாதிரித்தான்
அடையாள அட்டையும்,
உனக்குத் தெரியுமா?

காதலித்த மண்ணையும்
நேசித்த எனது வீட்டுப் பனைகளையும்
விலக முடியாமல் பிரிந்து
கொழும்பு முகாமில் குந்தவைத்தது நீதானே!
சுட்டுச் சுட்டுத் துரத்தினாய்;
குண்டுகளை எறிந்தாய் ஆகாயத்தில் இருந்து.

உனது அட்டகாசங்கள் இங்கும்;
அடையாள அட்டை கேட்டு
கன்னத்தில் ஓங்கி அறைகிற போது
நொறுங்குகிற பற்களும்
கசிகின்ற குருதியும் - நோகாது
இனி!
புதிய தெம்புகளை என்னுள்
நடுகின்றன.

நாளையும் வீதிக்கு வருவேன்,
கேட்பாய் நீ அடையாள அட்டை.
ஒரு கைக் குண்டை
ஒளித்து வைக்கிற துப்பாக்கியை
உனக்கு நான் காட்டுவேன்.

02.08.93

## ஊர் எல்லையின் ஓரத்தில்

இரவின் சில்லூறுச் சத்தங்கள் மட்டும்.
பிடுங்கி எறியப்பட்ட சிறு புல்லாக
தூக்கம்,
எனது கண்களில்.

கொதிக்கின்ற இரத்தம்
விழியின் படலங்களில் சிவப்புப் பூசுகிறது.
நடுநிசியின் கூதல் காற்றில்
பனியில்
எனது சபதங்களை எழுதுகிறேன் நான்.

ஒரு நிம்மதி.
அது இரவில் முளைக்கின்ற நித்திரை.
நித்திரை மட்டும்தான்.
கோதாலிக்காரனின் இனம் விழுங்குகிற பசியால்
ஒவ்வொரு ராவிலும்
கழன்று தொலைகிறது.


நான் பொருத்திக் கொள்ளுவது
ஊரை, எனது
எல்லா மக்களையும் காக்கின்ற
வீரத்தை.

எனது சுகங்களை
துப்பாக்கி வெடிகளின் நெருப்பு
வெளிச்சத்தில்
பீரங்கிப் பொறிகளில்
பார்க்கிறேன்.

எல்லா எதிரிகளுக்கும் நான்
எழுதுவது,
நிம்மதியான
எனது மக்களின் தூக்கத்தை
கொலைசெய்யும் உங்களை
நீண்ட உறக்கத்தில்
மிகவும் நீண்ட கடைசி
உறக்கத்தில் ஆழ்த்துவேன்.

எனது இருப்பானது
ஊர் எல்லைகளின் ஓரத்தில்
அதுவரை.

14.02.93




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் போன அவன் பாடல்கள்

அவன் கட்டடங்களில் குந்தியிருக்கிறான்,
கிளியாய்,
குயிலாய்.
யார் சொன்னது, அவன் காணாமல் போய்விட்டானென்று!
வீதியின் ஓரத்தில் நிற்கின்ற புற்களிலும்
அவன்
பனி விழும் காலையில்,
சில இரவுகளிலும்,
வீற்றிருந்ததை நான் கண்டிருக்கிறேன்.

அன்று நான்
மிக அவசரமாக யோசனையுடன்
சென்றுகொண்டிருந்தேன்.
அவன் ஒரு புறாவின் வடிவில்
பெரிய நிழல் மரம் ஒன்றில்
கால்நீட்டிப் படுத்திருந்து
அவன் விருப்பத்துடன் படிக்கும் புத்தகத்தைப்
படித்துக்கொண்டிருந்தான்.
நான் கை அசைத்துவிட்டுப் போனேன்.

அன்று
அவன் என்னைக் கண்டு சிரித்தான்,
எங்கென்று ஞாபகமில்லை.
அன்றைக்கு முதல்நாளும்,
நான் அவனைச் சந்தித்தேன்.
சந்தையில் பழம் வாங்கியபடி
நின்றதாய் நினைவுண்டு.
யார் சொன்னது;
அவனை யாரோ
கடத்திப்போய்
கொன்றதாய்!

அவன் பாடிய பாடலை நேற்றும் கேட்டேனே
மிகவும் இனிமையாய்,
ஒரு மழையின் ஓசையாய்!
அவன் இப்போதும் மிக அற்புதமாகப் பாடுகிறான்.
நாளை வரும் மழையில்
காதுகொடு
அவன் பாடுவான்
கேட்கலாம்!
மாம்பழத்துள் இருக்கும் புழுத்தெறித்து நிலத்தில்
ஆடும் அளவுக்கு,
அவன் பாடல் இனிக்கிறது!

19.09.93

சோ
லை
க்
கி
ளி





# நமது மண் நமது மக்கள் நமது போராட்டம்

## வ.ஐ.ச.ஜெயபாலன்

III

(முன்தொடர்)

இந்தியப் படை யாழ் குடாநாட்டைக் கைப்பற்றியதுடன் தமிழகப் பின்தள வாய்ப்புகளையும் பெருமளவு தடைசெய்தபின் விடுதலைப் புலிகளின் எஞ்சியிருந்த ஒரே கேந்திரமாக வன்னிப்பகுதி முதன்மை பெற்றது. வடமராட்சி தென்மராட்சி பச்சிலைப்பள்ளிப் பகுதிகளை ஓரளவு கட்டுப்படுத்தி, கரையோர வெளிகள் வயல்வெளிகளூடாக வலிகாமத்தின் தோட்டவெளிகளுள் புகுந்துவிட்ட, ஒரு பலமான கவசவாகன அணியைக் கொண்டிருக்கும், முறைசார்ந்த படையுடன் நேரடி யுத்தம் புரிவது விடுதலைப் போராளிகளைப் பொறுத்துச் சாத்தியமற்றது என்பதையும், மதியீனமானது என்பதையும் இந்திய அமைதிப் படையினரின் யாழ்ப்பாணப் போரின் விளைவுகள் புலப்படுத்தின.

எனினும் அமைப்பு ரீதியாக வன்னிக்குப் பின்வாங்கிச் சென்ற வகையிலும், தமது யுத்த தந்திரத்தை மீளமைத்ததின் வகையிலும் புலிப்படைப் போராளிகள் தமது மீளமைத்துப் பலப்படக்கூடிய வல்லமையை மிகவும் தெளிவாக வெளிப்படுத்தினர்.

இலங்கைக் காடுகளின் 80%க்கு மேல் உலர்வலயத்திலேயே உள்ளது. இவை பாதிபாதியாக தமிழ் சிங்களப் பகுதி எல்லைக் கோடுகளால் பிரிக்கப் பட்டாலும், பெரும்பாலும் தொடர்ச்சியறாமல் பரந்துள்ளது. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மாவட்டம் புறநீங்கலாக ஏனைய தமிழ் மாவட்டங்கள் இலங்கைக் காட்டுப் பரம்பல் அதிகரித்த மாகாணங்களுள் இடம்பெறுகிறது. இதில் முல்லைத்தீவு மாவட்டம் இலங்கையிலேயே காட்டுப் பரம்பல் அதிகரித்த மாவட்டமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் சிங்களப் பிரதேச எல்லைகளைத் தாண்டிய காட்டு விரிவு பற்றி தமிழீழ விடுதலைக் கழகத்தினரும் பிரக்ஞையும் அக்கறையும் கொண்டிருந்தனர். எனினும் உட்கொலைகள் மூலமும், இயக்க மோதல்களாலும் அமைப்பு சிதைந்து, தமிழ் மக்களது நம்பிக்கையை இழந்துவிட்ட நிலையில் அவர்களால் விடுதலைப் போராட்டத்திற்குப் பங்களிப்புச் செய்திட இயலவில்லை.

சிங்களப் பகுதிகளில் புத்தளம் அநுராதபுரம் பொலனறுவ அம்பாந்தோட்டை மாவட்டங்களில் ஊடுருவிச் செயற்படவும், வன்னியில் இராணுவத்தின் பெட்டியடைப்பு முயற்சிகளைத் தொடர்ந்து முறியடித்து வரவும், மணலாறு (வெலிஓயா) இராணுவ வேலியைத் தாண்டிக் கிழக்கு மாகாணத்துடன் குறைந்தபட்சத் தொடர்புகளைப் பராமரிக்கவும், தமிழ் சிங்கள எல்லைகளை மேவித் தொடர்கின்ற காட்டுவிரிவு தமிழ்ப் போராளிகளுக்கு வாய்த்த சாதகமான புவியியல் பின்னணியாகும்.

காட்டு வளங்களும், காடுசார்ந்த விவசாயக் கிராமங்கள் நகரங்களது வளங்களும், காடுசார்ந்த கடற்கரைகளது வளங்களும் போராளிகளது இருப்புக்கு ஆதாரமாக அமையும்.

வன்னியைப் பொறுத்து முக்கியமான இன்னொரு புவியியல் அம்சம் இருபகுதியும், கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த கடற்புறத்தைக் கொண்டிருப்பதாகும். யாழ்குடாநாட்டுக்கும், இந்தியாவுக்கும், கற்பிட்டி தூத்துக்குடி நடுவாக சர்வதேசத்துக்கும் அணுகுவழியான மன்னார்கரை மிகவும் முக்கியமானதாகும். மன்னார்கரை உண்மையில் வில்பத்துக் காடு சார்ந்து புத்தளம் மாவட்டத்தில் கல்பிட்டிவரை விரிவாக்கம் பெறக்கூடியதாகும்.

பெரும் கப்பல்களில் அணுகக்கூடியதும், கிழக்கு மாகாணத்துடனும் யாழ்ப்பாணத்துடனும் தொடர்பு கொள்ளக் கூடியதுமான அடர்ந்த முல்லைத்தீவுக் காடுகளைச் சார்ந்திருப்பதால், போராளிகளால் எப்போதும் ஓரளவாவது பாதுகாத்துக் கட்டுப்படுத்தக் கூடியதாகவும் வன்னியின் கிழக்குக் கரை அமைகிறது. இவை வன்னிப்பகுதியின் கேந்திரவள முக்கியத்துவத்தை மேம்படுத்துகிறது.

இலங்கைத் தமிழ் பேசும் மக்களது விடுதலைப் போராட்டத்துக்குப் பல நூற்றாண்டுகளாக நசுக்க முடியாத தன்மையைத் தருகிற காவல் காடாக வன்னி விளங்கி வருகிறது. இதனை 1803இல் இடம்பெற்ற பண்டாரவன்னியனின் போர்கள், 1950களில் கலவரங்களையும் குடியேற்றத் திட்டங்களையும் முறியடித்தமை, இன்றைய போராட்டமெனத் தமிழரது இராணுவ புவியியல் வரலாறு மீண்டும் மீண்டும் உறுதிப் படுத்தியிருக்கிறது.

எனினும் வன்னிப்பிரதேசம் அரசியலற்ற இராணுவ அணுகுமுறைகளால் பலவீனப்படுகிற ஆபத்தை எதிர்நோக்கியுள்ளமை குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

வன்னிப் பிரதேசத்தில் மன்னார் மாவட்டம், குறிப்பாக கடல்கரை சார்ந்த பகுதிகள் குறிப்பிடப்பட வேண்டிய சமூக புவியியல் அம்சங்களைக் கொண்ட பகுதியாகும்.

வடகிழக்கு மாகாணத்தில் கத்தோலிக்கர் முதன்மைபெறும் மாவட்டமாக மன்னார் மாவட்டம் உள்ளது. இனரீதியாக அம்பாறை மாவட்டம், திருகோணமலை மாவட்டத்தின் தென்பகுதி (மூதூர், கிண்ணியா) போலவே மன்னார் மாவட்டத்தின் தென்பகுதியும் பாரம்பரியமாக முஸ்லிம் மக்கள் முதன்மை பெறும் பிரதேசமாகும்.

இரண்டாவதாக தமிழ்ப் போராளிகளுக்கும் இந்தியாவுக்கும் இடையிலுள்ள மோதல் நிலைமையால் இந்தியக் கடற்படைச் செயற்பாடு மன்னார் மாவட்டத்தில் அதிகரித்துள்ளமை.

மூன்றாவதாக மன்னார் மாவட்டம் கரையோரத்தைப் பொறுத்து, நீண்ட கடற்கரை வெளிகளையும் கட்டுக்கரைக் குளத்தின்கீழ் உள்ள வயல்வெளிகளை உள்ளடக்கிய பரந்த வெளிகளையும் கொண்ட பிரதேசமாக உள்ளமை.

மேற்படி நிலைமைகள் தமிழ்ப் போராளிகள் அரசியல் ரீதியாக முஸ்லிம் மக்கள் தொடர்பான தமது படுபாதகமான பயங்கரவாத நிலைப்பாட்டைத் திருத்திக் கொள்ளுதல், இந்திய - தமிழகத்துடனான முறுகல் நிலையைக் குறைத்தல், துணைப்படைகளாகச் செயற்படாத எல்லைப்புறத்துச் சிங்கள விவசாயிகளுக்குத் தாம் எதிரானவர்கள் அல்லர் என்பதை உறுதிப் படுத்தல்என்ற அடிப்படையில் அரசியல் வெற்றிகளைப் பெறாமல், வன்னிப் பகுதியை முழுமையாகப் பலப்படுத்தல் சாத்தியமில்லை என்பதைத் தெளிவுபடுத்துகின்றது.

(வரும்)

தமிழர்தம் தலைமைகள் நிரந்தரமானவை அல்ல. தமிழரது நலன்கள் நிரந்தரமானவை; தமிழர்தம் நலன்கள் வடகிழக்கு மாகாணத்தைப் பாரம்பரிய தாயகமாகக் கொண்டுள்ள முஸ்லிம் மக்களது நலன்களுடன் வேரும் விழுதும் என்றிப் பின்னிப் பிணைந்தவை. இதற்கு மன்னார் மாவட்ட, கிழக்கு மாகாண நிலைமைகள் சிறந்த எடுத்துக் காட்டுகளாகும்.

விடுதலைப்புலிப் போராளிகள் தமிழர்தம் நிரந்தரமான நலன்களுக்குத் தமது நலன்களைக் கீழ்ப்படுத்தும் பண்புகளை வளர்த்துக் கொள்ளாமல் தமிழரது விடுதலைக்குப் பங்களிப்புச் செய்வது சாத்தியமில்லை. இது உடனடியாக அவர்கள் தம்மிடம் உள்ள முஸ்லிம் கைதிகளை நிபந்தனையின்றி விடுதலை செய்வதையும், வடபகுதி முஸ்லிம் அகதிகளது மீழ்குடியமர்விற்கு வழிவிடுதலையும் கோரிநிற்கிறது.

இது தொடர்பான பேச்சுவார்த்தைகளை விடுதலைப் புலிகள் வடமாகாண முஸ்லிம் அகதிகள் தலைமைகளுடனும், அவர்கள் மத்தியில் பணிபுரியும் சேவை நிறுவனங்களுடனும், சர்வதேச நிறுவனங்களுடனும், வடபகுதி அரசசார்பற்ற நிறுவனங்களுடனும் உடனடியாக ஆரம்பிக்க வேண்டும்.

முஸ்லிம் மக்கள் தனித்தும், சமூகமாகவும், சமய நிறுவனமாகவும் ஆண்டு அனுபவித்த சகல அசையும், அசையாச் சொத்துகளும் பொதுச் சொத்துகளும் நிறுவனங்களும், வாய்ப்புகளும் விடுவிக்கப் படுவதும் புனருத்தாரணம் செய்யப் படுவதும் அவசியம்.

வடபகுதி முஸ்லிம் மாணவர்கள் இளைஞர்கள் யுவதிகள் தொடர்பாக விசேட இட ஒதுக்கீட்டு அடிப்படையில் எதிர்வரும் பத்து வருடங்களுக்காவது இழந்துவிட்ட கல்வி வாய்ப்புகளும், தொழில் வாய்ப்புகளும் உறுதிப் படுத்தப்பட்டு செம்மை செய்யப்பட வேண்டும்.

தமிழரது போராட்டம் நீதித்தன்மை பெறாத பட்சத்தில், அது எவ்வளவு வீரம் செறிந்ததாக அமைந்தாலும் தோற்றுப் போய்விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களவு போன மனிதர்கள்

● ரீ.எல்.ஜவ்பர்கான்

மரங்களிடம்தான் கேட்டுப்பார்க்கிறேன்
அவைகள் சொல்லவேயில்லை.....
காற்றிடம்கூட எத்தனை முறையீடுகள்
அதுவும் மௌனித்த பதில்களாய்...
நிலவிடம் விண்ணப்பிக்கிறேன்
ஊமையாய்ப் பார்க்கிறது....
தெருவிடம், மேகத்திடம், தென்றலிடம்
எல்லாமே அமைதியாகவே
கிழித்தெறியப்படுகிறது!

நேற்றுப்போலிருக்கிறது!
சூரியன் உதிக்கச் சுணங்கிய
பொழுதுகளில்கூட
அதற்குமுன் விழித்துக்கொண்ட எங்கள்
முகங்கள்
போருக்குப் போன அனுபவமில்லாமல் -
நேரம்காலம் தெரியாமல் தெருவுக்கு வந்த
முதுமைகள்.....

நாளைகளையும், இன்றைகளாய் சுருக்கி
தேஸத்தை பௌர்ணமியாக்கிய சிந்தனா
ஹிருதயங்கள்...
கிட்டபோல் கட்டைகளுடன்
கொட்டபாக்கான் அடித்து,
தெருக்களையும் மைதானங்களாக்கிய
சின்னஞ்சிறுசுகள்...
தோற்றுப்போன வாழ்க்கையோடு
விமானங்கள் ஏறி
மீண்டும் திரும்புகையில் நெரிக்கப்பட்ட
சீதைகள்


இன்னும் கேட்கிறேன்!
கெஞ்சி, கூத்தாடி, அழுது, புலம்பி
மனசிலும், கண்ணிலும் கொஞ்சம்கூட
நீரில்லாமல்...

இனி யாரிடம் கேட்கலாம்
கொடிகளில் காயப்போட்ட புடவைகள்மாதிரி
திடீரென அல்லவா தொலைக்கப்பட்டுப்
போனார்கள்.

அநியாயத்தை உச்சரிக்காமலேயே -
சிலுவைகளில் அறையப்பட்டவர்களைப் பற்றி
எந்த முகவரியிடம்தான் விசாரிக்கலாம்....
கிடைக்கவில்லை என்பதற்காக
அலுத்துவிடவில்லை!
தேடித்தேடி நாளையும் புலம்புவோம்
எங்கே களவாடப்பட்ட மனிதர்கள்?

10.08.93

O புவனன்



குணாளனின் அலறல் அந்தத் தகரக் கொட்டகை முழுதையுமே அதிரவைத்தது. முதலாவது பாடம் முடிந்து இரண்டாவது பாடம் தொடங்கியும் இன்னும் குளாளனைக் காணவில்லையே என்று தவித்துக் கொண்டிருந்த எங்களில் பலர் அந்த அலறால் திடுக்கிட்டோம்.

எங்கள் வகுப்பறையிலிருந்து பார்த்தால் பெருமாள் மாஸ்ரரின் அறை தெரியும். பெருமாள் மாஸ்ரர் எங்கள் கல்லூரி கனிஷ்ட பிரிவின் தலைமை ஆசிரியர். இப்போ அவரை நினைக்கும்போது இதயம் இனம்புரியாத வலி எடுக்கிறது. எனக்குப் படிப்பித்த ஆசிரியர்களுள் எனக்குப் பிடித்தமானவர்களில் ஒருவர். ரீச்சேஸ்மாரின் பிள்ளை என்றோ, ஊரில் யாராவது பணக்காரர்களின் பிள்ளை என்றோ யாருக்கும் தமிழ் வாசிப்பிற்குக் கூடிய மாக்ஸ் போடமாட்டார். எந்த நேரமும் ஒரே சுறுசுறுப்பு, முகத்தில் ஒருவித சோகமும் இடையிடையே படரும், குடும்பக் கஷ்டமோ தெரியவில்லை.
வேலைப்பழுவில் ஞாபகமறதியும் சற்று அதிகம்தான். எங்கள் வகுப்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்பித்துக்கொண்டு நிற்பார். யாராவது வந்து ஏதாவது அலுவல் என்றால், கையில் வைத்திருந்த புத்தகத்துடனேயே அப்படியே போய்விட்டு, திரும்ப வரும்போது மாறி அடுத்த வகுப்பில் போய்நின்று கேள்விகள் கேட்பார். இப்படிச் சம்பவங்கள் பல.
இப்பவும் அவரின் 'உஷ்' சத்தமும், வேட்டியைத் தூக்கிக்கொண்டு, ஒரு கையில் பிரம்பையும் ஆட்டியபடி அவர் நடந்துபோகிற காட்சி கண்ணுக்குள்ள வந்துவந்து போகிறது.
பாவம் பெருமாள் மாஸ்ரர்.
நாங்கள் கொஞ்சப் பேர்- அதாவது குணாளனின் நண்பர்கள் - பெருமாள் மாஸ்ரரின் அறையை எட்டிப் பார்த்தோம். ஒவ்வொருத்தர் பின் ஒவ்வொருவராக ரெயில் பெட்டி போலவும், ஒருவரை ஒருவர் தள்ளிக்கொண்டும் நின்றோம்.
பெருமாள் மாஸ்ரர் கையில் பிரம்பு, பக்கத்தில் குணாளன் மாமா. "டேய் உண்மையைச் சொல்லிப்போடு. இல்லாட்டாத் தோலை உரிச்சுப் போடுவன்" மாமாவும் பெருமாள் மாஸ்ரரும் மாறிமாறி அடித்துக் கொண்டிருந்தார்கள். அலுமாரி ஒன்றுக்கும் சுவருக்கும் இடையிலான ஒரு மூலையில் குணாளன் முழங்கையாலும், முதுகினாலும் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளப் போராடிக் கொண்டிருந்தான்.
எனக்கென்னவோ இரண்டு பேரிலுமே கோபமாக வந்தது. ஒன்றில் பெருமாள் மாஸ்ரர் அடித்திருக்க வேண்டும், இல்லாவிட்டால் மாமா அடித்திருக்கவேணும். என்ன இருந்தாலும் தலைமை ஆசிரியருக்கு முன்னால் மாமா கையை நீட்டியது ரொம்ப அநியாயமாகவே பட்டது. இவர் பிறகு ஏன் இங்க கூட்டிக்கொண்டு வந்தவர்?

குணாளன் செய்தது பிழை பிழைதான். சரி, வீட்டில் இருந்த காசை எடுத்தான். பத்தாததிற்கு பக்கத்தில இருக்கிற சபாவின்ர சமூகக்கல்விப் புத்தகத்தை எடுத்துப் பின்வாங்கில் இருக்கிற ஞானத்துக்கு விற்றிருக்கிறானே! முட்டாள் பயல்.
ஆனாலும், வீட்டில் எடுத்த காசு பிடிபட்டு, மாமா ஸீக்கிறற்றாக பெரிய இன்வெஸ்ரிகேஷன் நடாத்தித்தான் சமூகக்கல்விக் களவும் பிடிபட்டது. ஒரு விதத்தில் மாமா கெட்டிக்காரன்.

"என்னென்ன எடுத்தனி?
எங்கையெங்கை எடுத்தனி? கெதியா லிஸ்ற் போடு"
இது பெருமாள் மாஸ்ரர்.

மாமாவும் மாஸ்ரரும் களைத்துச் சோர்ந்து அவனை என்ன செய்யலாம் என்று ஆறுதலாக யோசித்துக் கொண்டிருப்பது தெரிந்தது.
குணாளன் கைக்குப் பென்ஸிலும் பேப்பரும் கொடுக்கப்பட்டது.
வீட்டில் இருந்து முதல் நாள் - 100 ரூபாய் இரண்டாம் நாள் - 150 ரூபாய் சமூகக்கல்வி விற்ற காசு - 4.50

"ம்... ஆறு ரூபா ஐம்பது சதப் புத்தகத்தை நீர் நாலம்பதுக்குக் கொடுத்திருக்கிறீர், சரிசரி"
பெருமாள் மாஸ்ரர் கிண்டலாக......

அதற்கிடையில் திரும்பவும் மாமாவின் கை குணாளனின் கன்னத்தைப் பதம் பார்த்தது.



"ஸேர் இவன் வீட்டில் இருந்து ஐநூறு ரூபா எடுத்திருக்கிறான்!"

"இல்ல ஸேர், நானூற்றம்பது ரூபாதான் எடுத்தனான்"
"அட கடவுளே! ஒரு மாதச் சம்பளம். இதை என்னடா செய்தனி"
பெருமாள் மாஸ்ரர் தலையில் கையை வைத்தார்.

அடுத்த லிஸ்ற்.
இப்போ அடி குறைந்து அமைதியாக இருந்தது. குணாளனும் அழுகையை நிறுத்தியிருந்தான், எப்படியோ விஷயம் முடிவுக்கு வந்ததுபோல.
எட்டு ரெனிஸ் போல்' - 72 ரூபா.
"இரண்டு கிழமைக்குள்ள என்னத்துக்கடா எட்டுப் பந்து?"
பெருமாள் மாஸ்ரருக்கு என்ன விளங்கும் இப்பத்தையில் பந்துகளைப் பற்றி, ரெண்டு அடியோட சரி, மூண்டாவது ஸிக்ஸ்' என்று அடித்தால் முன்னுக்கு நிக்கிறவனின் கைக்குள்ள நிக்குது. போதாதற்கு பந்துகளை வீட்ட கொண்டுபோற பயத்தில, மேசைத்தட்டுகளுக்குக் கீழேயோ, அல்லது எங்காவது மரங்களுக்குள்ளயோ ஒழிச்சு வைச்சிட்டுப் போனால், இந்த ஹொஸ்டல்' பொடியள் எடுத்துப் பந்தின்ர கலரை மாத்திப்போட்டுத் தங்கட ஆக்கிப் போடுவாங்கள், சண்டை பிடிச்சும் பிரயோசனமில்லை.
இதுபற்றி மாமாவுக்கு ஓரளவு விளங்க, சரிசரி என்று பெருமாள் மாஸ்ரரைப் பார்த்துத் தலையை அசைத்தார்.
"சரி மிச்சம்?"
"கடையில சாபபிட்டனான் ஸேர்..."
"என்ன இவ்வளவுத்துக்குமோ?"
" இல்ல ஸேர், தன்ர சிநேகிதர்களுக்கும் வாங்கிக் கொடுத்திருக்கிறார்" என்று மாமா ஒரு அடி போட, "எங்கயடா உன்ர சிநேகிதமார், கூப்பிடு அவங்களை" என்றார் பெருமாள் மாஸ்ரர்.
நெஞ்சு பக்'கென்றது. ஆளை ஆள் பார்த்து முழுசினோம்.
யாருக்குத் தெரியும் இவன் களவெடுத்த காசெண்டு. ஐஸ்கிறீம் என்ன..
கன்ரீன்ல சாப்பாடு என்ன....
அவனும் வாங்கித் தந்தான். நாங்களும் சாப்பிட்டம். இப்படித் தலையிடி வருமெண்டு தெரிஞ்சிருந்தால் சத்தியமாய் கிட்டவே போயிருக்கமாட்டம்.
குணாளன் லிஸ்ற் போட்கு முடியவில்லை.
போண்டா 35 சதம் தர எட்டு சமன் 2.80.
ரீ 15 சதம் தர ஆறு சமன் 90.
..............

இப்படிக் கணக்குப் போட்டு நானூற்றி ஐம்பத்திநாலு ரூபாவுக்குக் கணக்குக் காட்டிறதெண்டால் என்ன விளையாட்டே?
குணாளன் மண்டையைப் பிய்த்துக்கொண்டிருந்தான்.
மறந்துபோயிருந்த பெருமாள் மாஸ்ரர், "கெதியா உன்ர சிநேகிதர்மாரைக் கூட்டிக்கொண்டு வா" என்றார் திரும்பவும்.
நாங்கள் ஆறுபேர் வரிசையாகப் போய் நின்றோம்.
இதற்கிடையில், யாரோ வந்து அவசர அலுவல் என்று பெருமாள் மாஸ்ரரைக் கூட்டிப்போக, "இந்தா வாறன்" என்றுவிட்டு அவரும் போய்விட்டார்.
குணாளன் தான் போட்ட லிஸ்ற்றை எங்கள் ஒவ்வொருவருக்கும் காட்டிக்கொண்டு வந்தான். அவனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகமெல்லாம் சிவந்து வீங்கிப்போய்
இருந்தது. கேவியபடி
நின்றுகொண்டிருந்தான். பார்க்கப்
பாவமாக இருந்தது.
நல்லவேளை, என்னுடைய பெயருக்குப்
பக்கத்தில் ஒரு போண்டா - 35 சதம்
என்று மட்டும் இருந்தது. தப்பினேன்.
பொக்கற்றுக்குள் இருந்த 35 சதத்தை
எடுத்து அவன் கையில் திணித்து
"என்னுடைய பெயரை வெட்டிவிடு"
என்றேன் காதுக்குள்.

அவன் அதை வாங்கிக்கொண்டு
என்னைப்பார்த்த அந்தப் பரிதாபப்
பார்வை.

ஓ!

புறங்கையால் கண்ணீரைத்
துடைத்தபடி, விக்கிவிக்கி அழுதான்.
ஒரு கையில் பென்ஸில், மறுகையில்
தாள். தாள் முழுவதும் கண்ணீரால்
நனைந்துபோய்........

இப்போது நினைக்கும்போதும்
எனக்குக் குமட்டிக்கொண்டு வருகிறது.
சாப்பிட்ட போண்டாவோ, ஐஸ்கிறீமோ
அல்ல. என்னுடைய ஈனச் செயல்தான்.

ஈழத்து இலக்கியப் பரப்பில் பல நல்ல படைப்பாளிகளை விதைத்த மகாஜனக் கல்லூரியின் ஆண்டு மலர் அண்மையில் பிரான்சில் கல்லூரிப் பழைய மாணவர்களால் வெளியிடப் பட்டது. இப்படைப்பு, மலரிலிருந்து மகாஜனா தந்த இலக்கிய கர்த்தா ஒருவரின் படைப்பு.

# சிறகு முளைத்த கவிதை

**முகமட் அபார்**

கவிதைக் கூட்டமெல்லாம்
பாட்டம் பாட்டமாக வந்து
என் மா மரத்தில் குந்தியது.

என்ன அதிசயம்!
கவிதைக்கெல்லாம் சிறகு முளைத்துவிட்டது,
எல்லோரும் கதைத்துக்கொண்டு
எட்டி, எட்டிப் பார்த்தார்கள்.

ஒரு கவிதை
இன்னொன்றுக்கு ஏறி மிதித்தது.
இன்னும் சில
சொண்டுக்குள் சொண்டை
ஒட்டிக்கொண்டு நின்றன.

காகமும், குயிலும்
மரத்தைச் சுற்றிக்
கத்திக் கத்திப் பறந்தன.
அங்கு நிண்ட ஆண் கவிதை
ஒரு காகத்தின் தலையில்
சிறுநீர் அடித்தது.
காகம் மண்ணில் விழுந்து
துடியாய்த் துடித்தது.
எல்லாக் கவிதைகளும்
கைதட்டிச் சிரித்தன.


மாம்பிஞ்சுகளைப் பறித்து
கடித்துத் துப்பியது ஒரு வெறிபிடித்த கவிதை.
மாமரம் அசையாமல் நின்றது.
காற்றைக் கைதுசெய்து கொண்டது கவிதைகள்.

உலகம் அழியப் போகிறது
கவிதைக்கெல்லாம் சிறகு முளைத்துவிட்டது
சுதந்திரக் காற்றுக்கூட இனி நமக்கு இல்லை
என்று தங்களுக்குள் பேசியவாறு
அங்குமிங்கும் ஓடியது - பூனையும் நாயும்.

10.10.92

## குழந்தைகளுக்கு எதிராகப் பாலியல் பலாத்காரம் முடிவுக்கு வந்த தேவாலய அரசியற் தஞ்சங்கள் பொலிசார் மீதும் குற்றச்சாட்டுகள்

## அண்மைக்கால நோர்வேயின் மூன்று முகப் பதிவுகள்



குழந்தைகள் பராமரிப்பு நிலையம் (Barnehage) ஒன்றில் நான்கு வயதுக்குட்பட்ட குழந்தைகள்மீது அங்கு பணிபுரியும் ஒருவர் பாலியல் பலாத்கார நடவடிக்கைகளை மேற்கொண்டதாகக் கூறப்படும் சம்பவங்கள் தொடர்பான வழக்கு அண்மையில் விசாரணைக்கு வந்தது. பியூன் (Bjugn) என்ற இடத்தில் நிகழ்ந்ததால் 'பியூன் வழக்கு' (Bjugnsaken) என அழைக்கப்படும் இந்த வழக்கே அண்மைக் காலங்களில் நோர்வேயில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய வழக்காகும்.

இவ்வாறான சம்பவங்களோ இவை பற்றிய வழக்குகளோ நோர்வேயில் புதிதான ஒன்றல்ல எனினும், இந்தச் சம்பவத்தில் பத்துக்கு மேற்பட்ட குழந்தைகள் பாதிக்கப் பட்டிருப்பதாகக் கூறப்படுவதுடன், இந்தக் குழந்தைகளின் சாட்சியங்கள் நீதிமன்றினால் பதிவாகி விசாரிக்கப்பட்டு வருகின்றன.

குற்றம் சாட்டப்பட்டவரின் பெயர் விவரம் வெளியிடப்படாத நிலையில் அவர் '44 வயதுடையவர்' என்ற குறியீட்டுப் பெயருடன் நிகழும் இவ்வழக்கு பகிரங்கமாக நடத்தப்பட வேண்டும் என்ற சந்தேக நபரின் வழக்கறிஞரது வேண்டுகோள் பாதிக்கப் பட்டோரது நலன் கருதி மறுக்கப் பட்டுள்ளது. செய்தியாளர்கள், வழக்கில் பங்குகொள்வோர் தவிர எவரும் நீதிமன்றத்தில் நுழைய அனுமதி மறுக்கப் பட்டுள்ளது.

வழக்கில் பாதிக்கப்பட்டதாகக் கூறப்படும் குழந்தைகள் அனைவரும் பாலியல் உறவுக்கு உட்படுத்தப் பட்டிருப்பதற்கான சாத்தியக் கூறுகள் காணப் படுவதாக குழந்தைகளைப் பரிசோதித்த வைத்தியர்கள் அறிக்கை சமர்ப்பித்தனர். நீதிமன்றில் ஏற்கனவே சாட்சியமளித்த மூன்று குழந்தைகள், தங்களுடன் '44 வயதுக்காரர்' எவ்வாறு நடந்துகொண்டார் என நீதிமன்றத்தில் விவரித்தன. குழந்தைகளின் வழமையான நடவடிக்கைகளில் ஏற்பட்டுவந்த 'சிறிய மாற்றங்களை'யும், 'அவர்களது புதிய கனவுகளை'யும் பராமரிப்பு நிலையத்திற்குப் போகமாட்டோம் எனச் சில குழந்தைகள் அடம்பிடித்ததையும் குறிப்பிட்டுச் சாட்சியமளித்த தாய்மார்களில் ஒருவர், தனது கணவரையே இவ்விடயத்தில் தான் சந்தேகிப்பதாகவும் இதனால் தனது குடும்ப வாழ்க்கை பாழாகி விட்டதாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்டுள்ளார்.

குற்றச்சாட்டுகள் அனைத்தையும் மறுத்த '44வயதுக்காரர்' சுகாதாரச் சட்ட விதிகளின்படியும், குழந்தைகள் பராமரிப்புப் பற்றிய பயிற்சிக் காலத்தில் தனக்கு வழங்கப்பட்ட அறிவுரைகளின்படியும் தான் மிகப் பொறுப்பாக நடந்துகொண்டதாகவும் கூறினார். சிறுவிடயங்களையும் பெரிதுபடுத்தும் இயல்பு குழந்தைகளுக்கு இருப்பதால், குழந்தைகளின் சாட்சியம் ஏற்றுக்கொள்ளப்படக் கூடாது என்பது சந்தேக நபரின் வழக்கறிஞரது வாதம். இதற்கு எதிராக, குழந்தைகள் மிகைப்படுத்திக் கூறினாலும் அவர்கள் உண்மையையே கூறுவார்கள் என்பது அரசதரப்பு வழக்கறிஞரது வாதம்.

மூன்று நீதிபதிகள், 12 யூரிமார்கள், மூன்று உளவியல் நிபுணர்களுடன் நடக்கும் இந்த வழக்கில் பொதுமக்கள் அனுமதிக்கப் படாவிடினும், சில நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப் பட்டுள்ள செய்தியாளர்கள் வழக்கு பற்றிய செய்திகளைத் தினமும் வெளியிடுகின்றனர்.

பழைய யூகோஸ்லாவியாவின் கொஸவோ அல்பேனியர்கள் பலரது அரசியற் தஞ்சக் கோரிக்கைகளை நிராகரித்த நோர்வே அரசு, இவ்வருட ஆரம்பத்தில் அவர்கள் பலரை நாட்டைவிட்டு வெளியேற்றியிருந்தது. எனினும் அரசின் இத்தகைய மனிதாபிமானமற்ற நடவடிக்கையைக் கண்டு அஞ்சிய கொஸவோ அகதிகள் 500க்கு மேற்பட்டோர் தேவாலயங்களில் தஞ்சம் அடைந்தனர்.


பல ஐரோப்பிய நாடுகளைப் போலவே நோர்வேயிலும் தேவாலயங்களில் பொலிசார் உடன் உள்நுழைய முடியாத நிலை இருப்பதுடன், தேவாலயங்களினதும் மதநிறுவனங்களதும் முடிவுகளை அரசு மறுதலிக்க முடியாத நிலை உள்ளது. இதுவே தேவாலயங்களில் அகதிகள் பாதுகாப்பாகத் தஞ்சமடையக் காரணம். 1987இல் சில தமிழ் அகதிகள் திருப்பி அனுப்பப்பட இருந்தபோது, ஒஸ்லோவில் உள்ள தொய்யன் தேவாலயத்தில் தஞ்சம் புகுந்து தம்மைக் காப்பாற்றினர் என்பது குறிப்பிடத் தக்கது.

பெருந்தொகை அகதிகள் ஒரேவேளையில் தேவாலயங்களில் தஞ்சம் புகுந்ததும், அரசுக்கும் தேவாலயங்களுக்கும் இடையில் ஒரு பனிப்போர் ஆரம்பித்தது. சகல தேவாலயங்களதும் ஆயர்கள் அகதிகளுக்குச் சார்பாக அறிக்கைகள் விட்டது இதற்கு முக்கிய காரணம். தேவாலயப் பொறுப்பாளரது அனுமதியின்றிப் பொலிசாரோ, வேறு அதிகாரிகளோ தேவாலயத்தினுள் நுழைய இயலாது என்பதால் பெரும்பாலும் அகதிகள் தஞ்சம் புகுந்த தேவாலயங்களைச் சுற்றிக் கண்காணித்து வந்தனர் பொலிசார். வெளியே வந்த சில அகதிகளைக் கைது செய்து அவர்களை நாடுகடத்தினர் பொலிசார். ஆனால் இந்நடவடிக்கை அரசுக்குப் பெரும் வெற்றி தரவில்லை. தஞ்சமடைந்தவர்களது சகல செலவுகளையும் தேவாலயங்கள் பொறுப்பேற்றதுடன், அகதிகள் தேவாலயத்தின் உள்ளேயே தொடர்ந்து இருப்பதை உத்தரவாதம் செய்தன.

நவம்பர் மாத நடுப்பகுதியில் நீதியமைச்சருக்கும் 'ஐக்கிய தேவாலய' நிர்வாகிகளுக்கும் இடையில் நவம்பர் மாத நடுப்பகுதியில் நிகழ்ந்த பேச்சுகள் எதிர்பார்த்த பலனைத் தரவில்லை.

தேவாலயங்களில் தஞ்சம் புகுந்த அகதிகள் டிசம்பர் முதலாம் திகதிக்குள், வெளியே வந்து அகதி முகாம்களுக்குச் சென்றால் அவர்களது நிராகரிக்கப்பட்ட அகதி விண்ணப்பங்கள் திரும்பப் புதிதாகப் பரிசீலிக்கப்படும் என்ற நீதியமைச்சர் கிறேத்த ஃபாறெமோவின் (Grethe Farremo) பேச்சை சட்ட வல்லுனர்கள் கண்டித்துள்ளனர். நோர்வேயின்






## திரைகடல் ஓடியும்...

பனிப்பாளங்கள் நிறைந்த வடதுருவப் பகுதியைக் கப்பற் போக்குவரத்துக்குப் பாவிப்பது பற்றி ஆராய ஒரு அமைப்பை நோர்வே, ஜப்பான், ரஷ்யா ஆகியன இணைந்து அமைத்துள்ளன. வருடத்தின் பெரும்பகுதியும் பனிக்கட்டிகளாலேயே நிறைந்துள்ள இந்தப் பகுதியில் ஒருகடற்பாதை அமைவதன் மூலம், ஐரோப்பாவிலிருந்து வட ஆசியாவிற்கு இலகுவாகப் பயணம் செய்யலாம். இதன்மூலம் ஐரோப்பாவிற்கும் வடஆசியாவிற்கும் இடையில் வர்த்தகம் செய்யும் கப்பல்கள் பெருமளவு பணத்தைச் சேமிக்க முடியும்.

இந்த வழியில் ஒரு பகுதி ஏற்கனவே பாவனையில் உள்ளது. மிகுதிப் பகுதியில் பாதை திறப்பதில் உள்ள சிக்கல்களைத் தீர்ப்பது பற்றிப் புதிய அமைப்பு ஆராயவுள்ளது. இந்தப் பாதை பற்றிய நடைமுறை ஆய்வுகள் முடிய இரண்டு அல்லது மூன்று வருடங்கள் ஆகலாம்.

வடதுருவப் பாதை திறக்கப்படும் பட்சத்தில் இந்தப் பாதையில் கப்பல்கள் பயணம் செய்யமுன்பு ஒரு கப்பல் பனிக்கட்டிகளை உடைத்துச் செல்லும். அதன்பின் ஏனைய கப்பல்கள் அணியணியாகப் பின்னால் செல்லும். இந்தக் கப்பற் பாதை நடைமுறைக்கு வரும் பட்சத்தில் வடநோர்வேப் பகுதியில் புதிய தொழில் வாய்ப்புகள் பெருகும் என எதிர்பார்க்கப் படுகிறது.

- சேகரன் -

---

சட்டவிதிகளின்படி நாட்டின் எல்லைக்குள் ஒருவர் வந்துவிட்டால் அவர் எந்த இடத்தில் இருந்தும் அரசியற் தஞ்சம் கோரலாம் என்பது அவர்களது கருத்து. நீதியமைச்சரது கருத்து அகதிகளது உரிமையை மறுக்கிறது என்று அவர்கள் கண்டித்துள்ளனர். எனினும் நீதியமைச்சரது பேச்சுக்குச் செவிவாய்த்துச் சில அகதிகள் தேவாலயங்களைவிட்டு வெளியேயும் வந்துள்ளனர்.

வண.ஆயர் ஊலா ஸ்ரெய்ன்ஹொல்ற் (Ola Steinholt) நீதியமைச்சரையும் அரசையும் 'ஒருபிடி பிடித்துள்ளார்'. உண்மையான ஜனநாயகத்தில் நம்பிக்கையீனத்தை அரசும், நீதியமைச்சரும் ஏற்படுத்தியுள்ளதாகக் குறிப்பிட்ட அவர், (ஆளும்) தொழிற்கட்சி அங்கத்தவர்கள் 'சிலரே நீதியமைச்சரை நம்பமுடியாது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு எதுவித உத்தரவாதமும் இல்லை' என்று தன்னிடம் கூறியதாகவும் தெரிவித்துள்ளார். அவரது கருத்துப்படி, அரசு அவர்களைத் திருப்பி அனுப்பினால் அகதிகளது சொந்த இடங்களில் எதுவித உயிராபத்தும் ஏற்படாது என்பதை அரசே, சர்வதேச ரீதியில் இயங்கும் மனித உரிமை அமைப்புகள் போன்றவற்றின் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்; இல்லாவிடில் அரசின் கூற்றை ஏற்றுக்கொள்ள முடியாது. உயிருக்கு உத்தரவாதமற்ற சூழலில் இருந்து அந்நிய தேசமொன்றுக்கு அகதிகளாக ஓடிவந்த இவர்களது துயரங்களுக்கு அரசு செவிசாய்க்குமா என்பது தெரியவில்லை.

வெளிநாட்டவர் தொடர்பான விவகாரங்களைக் கையாளும் பொலிசார் (Fremmedpoliti) மீது அண்மையில் மொழிபெயர்ப்பாளர்கள் சிலர், சட்டத்துக்குப் புறம்பான முறையில் தம்மைப் பயன்படுத்த முனைந்ததாகப் பகிரங்கமாகக் குற்றம் சுமத்தியுள்ளனர். நாட்டின் மத்திய பிரதேசமான துரொண்ட்ஹெய்மில் (Trondheim) இந்தச் சம்பவம் நிகழ்ந்ததாகக் கூறப்படுகிறது.

நோர்வேக்கு அகதிகளாக வந்த பலரைப் பற்றிய மேலதிக தகவல்களைப் பெற அந்தந்த நாட்டு மொழி பெயர்ப்பாளர்களைக் கட்டாயப் படுத்தியதாக, ஆறு மொழிபெயர்ப்பாளர்கள் பகிரங்கமாகக் கூறியுள்ளமை நோர்வேயில் அண்மையில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. தமது தொழில் நியதிகட்கு அப்பாற்பட்ட முறையில் தாம் தொழிற்பட்டு, அகதிகளிடம் இருந்து மேலதிகத் தகவல்களைப் பெற்றுத் தருமாறு வெளிநாட்டார் தொடர்பான பொலிசாரால் நிர்ப்பந்திக்கப் பட்டதாக மொழிபெயர்ப்பாளர்கள் தெரிவித்துள்ள குற்றச்சாட்டு, பொலிசாரின் தொழிற்பாடு பற்றிப் பலத்த கண்டனங்களை எழுப்பியுள்ளது. சில காலம் முன்னதாகப் பாலஸ்தீன அகதிகள் விவகாரம் தொடர்பாக பொலிஸார் அம்பலமானதை மறந்துவிட முடியாது.

இங்கு அகதிகள் வரத் தொடங்கிய 1987காலப் பகுதியில் இருந்து தமிழ் அகதிகளுக்கு மொழிபெயர்ப் பாளர்களாகத் தொழில் புரிந்தோர் பற்றி, அகதிகளால் பல குற்றச்சாட்டுகள் பரவலாக முன்வைக்கப் பட்டன. எனினும் இதைப் பகிரங்கமாகவோ, சட்டத்தின் முன்னோ எவரும் இதுவரை கூறியதாகத் தெரியவில்லை. அவ்வாறு பகிரங்கமாகவோ சட்டத்தின் முன்னோ கூறமுடியாதெனில் குற்றம் சுமத்துவதும் அர்த்தம் இல்லாததாகிவிடும்.

● சஞ்சயன்

## புதிய தளபதி பழைய இராணுவம்

*இலங்கை ராணுவம் அண்மையில் ஆயிரக்கணக்கான படையினரை இழந்து படுதோல்விகளைச் சந்தித்த பின்னர் அரசு, இராணுவத் தளபதியை மாற்றியுள்ளது.*

*தோல்வியுறும் ராணுவத்திற்குத் தளபதியாக இருக்க விரும்பவில்லை என்று பகிரங்கமாகக் கூறிய தளபதி சிசில் வைத்யரத்னவின் இடத்தை, முன்னாள் இராணுவத் தலைமை அதிகாரி நிரப்புகிறார்.*

*புதிய தளபதியின் முழுச்சக்தியும் பிரயோகிக்கப்பட வேண்டிய தேவையை வடகிழக்கு நிலைமை வேண்டுவதாகச் செய்திகள் கூறுகின்றன.*

செய்தியாளன்

● சமுத்திரன்



# 1917 ஒக்டோபர் மறதிக்கு எதிராக நினைவுகளின் போராட்டமும் ஒரு சுயவிமர்சனமும்

(பகுதி 2)

சென்ற கட்டுரையின் இறுதியில் போல்ஷெவிக் புரட்சிக்குப் பின் தோன்றிய விவாதங்கள் பற்றிக் குறிப்பிட்டேன். இவற்றுள் முக்கியமான சோஷலிச நிர்மாணம் பற்றிய விவாதத்தின் ஆரம்பப் போக்குகளைப் பற்றி விவாதிக்க முன்னர் புரட்சியின் தன்மைகள், அவை பற்றிய விவாதங்கள் பற்றி மேலும் சற்று விரிவாக விளக்குதல் பயன்தரும் என நம்புகிறேன். ஆகவே இக்கட்டுரை மீண்டும் புரட்சியின் பின்னணி, அதன் நகர்ச்சிப் போக்குகள் பற்றிப் பரிசீலிக்க முற்படுகிறது.

ரஷ்யப் புரட்சி ஒரு நேர்கோட்டு மார்க்கமாக நகரவில்லை என்பது சென்ற கட்டுரையில் தெளிவாகத் தென்பட்டிருக்கும். 1917 பெப்ரவரி – ஒக்டோபர் கால வெளியில் ரஷ்ய இடதுசாரிகள் மத்தியில் பல கேள்விகளும் அவற்றைச் சுற்றிப் பல விவாதங்களும் தோன்றின என்பதில் சந்தேகமில்லை. ரஷ்யப் புரட்சியின் வரலாற்றைப் பல தடவைகள் மாற்றி எழுதி, அதற்கு ஒரு கருத்தமைவு ரீதியான யாந்திரீகப் போக்கினையும் வழங்கி, உண்மைகளை 'சீர்படுத்தி' 'செப்பனிட்டு' சரித்திரத்தின் செழுமையை அகற்றி அதை சூத்திரமயமாக்க முற்பட்ட சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டபூர்வமான வரலாற்றினால் கூட இந்தக் காலகட்டத்தின் குழப்பம் நிறைந்த போக்குகளை முற்றாக மூடிமறைக்க இயலவில்லை.

அன்று பல கேள்விகள் எழுந்தன. விவாதங்கள் தொடர்ந்தன.

மாக்சிய வாதிகள் மத்தியில் விவாதிக்கப்பட்ட முக்கிய கேள்வி, இந்தப் புரட்சி பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சியா அல்லது அதைத் தொடர்ந்து வரும் சோஷலிசப் புரட்சியையும் உள்ளடக்கியதா? அப்படியானால் இந்தக் காலகட்டம் இரண்டு புரட்சிகளின் காலகட்டம். அதே நேரம் நடைமுறையைத் தொடர்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயங்கிக் கொண்டிருக்கும் புரட்சிகர அலைகளின் அரசியல் தலைமை ஸ்தாபனம் எது என்ற கேள்வியும் முக்கியமடைகிறது. முன்னர் குறிப்பிட்டதுபோல ரஷ்யப் புரட்சியின் நகர்ச்சிப் போக்குகளில் ஆழமான சுயேச்சையான நடைமுறைத் தன்மைகள் தென்பட்டன. பழைய அமைப்பிற்கெதிரான மக்களின் எதிர்ப்புகள் பல தடவைகள் சுலபமாய் எழுந்தன, வளர்ந்தன, அமிழ்ந்தன.

ஆரம்பத்தில் ஒரு பலமான மையப்படுத்தப்பட்ட தலைமையின் வழிகாட்டலின்றிப் புரட்சிகர நடவடிக்கைகள் இடம்பெற்றனவாயின் பின்னர் எப்படி போல்ஷவிக்குகளின் கைகளுக்குத் தலைமை சென்றது அல்லது அவர்கள் எப்படித் தலைமையைக் கைப்பற்றினர்? ஏன் போல்ஷவிக் கட்சி புரட்சி நாயகனாக வெற்றிவாகை சூடியது என்ற கேள்வி மீண்டும் எழுகிறது.

1917ன் புரட்சிகரத் தன்மைகளைத் தெளிவாகக் கிரகிக்க 1905ல் நடைபெற்ற புரட்சி பற்றிய சில தகவல்கள் உதவலாம். 1905ல் இடம்பெற்று தோல்வி அடைந்த புரட்சியை முதலாவது ரஷ்யப் புரட்சி என போல்ஷவிக்குகளும் வரலாற்றாசிரியர்களும் குறிப்பிடுவர். இந்தப் புரட்சி 1917 புரட்சியின் முன்னோடியாய் ஒரு பரிசோதனையாய் அமைந்தது எனலாம். 1905லும் 1917இன் தன்மைகள் தென்பட்டன. இ.எச்.கார் (E.H.Car) கூறுவதுபோல 1905ல் மூன்று சுயமான நடைமுறைப் போக்குகள் இயங்கின. ஒருபுறம் ரஷ்யப் பூர்ஷ்வா லிபரல்களும் யாப்புவாதிகளும் (constitutionalist) காலத்துக்கு ஒவ்வாத, பழமையில் ஊறிப்போன ஸாரிச கொடுங்கோன்மைக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தனர். மறுபுறம் தொழிலாளர்களின் எழுச்சி முதலாவது பீட்டஸ்பர்க் (Petersborg) சோவியத்தின் உருவாக்கத்திற்கு வழிவகுத்தது.

இன்னொரு புறம் நாட்டுப் புறத்தில் விவசாயிகள் கிளர்ந்தெழுந்தனர். இவர்களின் கிளர்ச்சி ஒன்றிணைக்கப் படாததாகவும், பலாத்காரம் நிறைந்ததாகவும் இருந்தது. இம்மூன்று போக்குகளும் தமக்கே உரித்தான வர்க்கத் தன்மைகளைக் கொண்டிருந்தன. பூர்ஷ்வா லிபரல்கள் முதலாளித்துவத்திற்கு உதவக்கூடிய நவீன சீர்திருத்தங்களை வேண்டினர். தொழிலாளர் அடிப்படைப் பொருளாதார உரிமைகளை மட்டுமன்றி சர்வஜன வாக்குரிமையையும் கூடுதலான அரசியல் பங்குபற்றலையும் கோரினர். விவசாயிகள் தமது நிரந்தரத் தரித்திரத்தில் இருந்து, நிலவுடைமையின் கொடுமைகளில் இருந்து விமோசனத்தைத் தேடினர். விவசாயக் குடும்பங்களில் இருந்தே ஸாரின் ராணுவத்திற்குப் போர்வீரர்கள் திரட்டப் பட்டனர்.

1905 புரட்சியின் முக்கிய பின்னணியான சம்பவம் ஒன்றையும் குறிப்பிட வேண்டும். அதுதான் ரஷ்யாமீது ஜப்பான் நடத்திய தாக்குதல். புரட்சியின் ஆரம்பத்தின்போது ஸாரின் இராணுவம் ரஷ்ய சாம்ராஜ்யத்தின் பின்கோடியில் ஜப்பானிய இராணுவத்தினால் தோற்கடிக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

1905ன் தொழிலாளர் எழுச்சி ஒரு பெரும் இரத்தக் களரிக்கூடாகவே முன்னேறியது. 1905 ஜனவரி மூன்றாம் திகதி தலைநகரில் 12,500 தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் ஒன்றை ஆரம்பித்தனர். நான்கு நாட்களில் இது நகரின் பல தொழிற்சாலைகளுக்கும் பரவி 90,000க்கு மேற்பட்ட தொழிலாளர் வேலை நிறுத்தத்தில் குதித்தனர். ஜனவரி ஒன்பதாம் திகதி ஞாயிற்றுக்கிழமை பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்களும் அவர்களின் குடும்பத்தவரும் ஸாரின் குளிர்கால அரண்மனை (winter palace)யை நோக்கி ஒரு ஊர்வலத்தை மேற்கொண்டனர். அவர்களின் அடிப்படைக்



கோரிக்கை 'சமத்துவமான இரகசிய சர்வசன வாக்குரிமை' என்பதாகும். இந்த ஊர்வலத்தில் பலர் ஸாரின் உருவப் படங்களையும் மதச்சின்னங்களையும் எடுத்துச் சென்றனர். கேப்பொன் (Gapon) எனும் பாதிரி தலைமை வகித்தார். ஊர்வலம் அரண்மனையை நெருங்கியபோது ஸாரின் படையினர் ஊர்வலத்துக்கூடாக மக்களை வாட்களால் வெட்டியவண்ணம் ஊடுருவினர். பின்னர் படையினர் துப்பாக்கிப் பிரயோகமும் செய்தனர். இந்த 'இரத்தக்களரி ஞாயிறு' (Bloody Sunday) ஒரு புயலைக் கிளப்பியது. நாடு பூராவும் பத்து லட்சத்துக்கு மேற்பட்ட தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்தனர். கிளர்ச்சிகள் தொடர்ந்தன. 1905 ஒக்டோபரில் பீட்டர்ஸ்பேர்க் சோவியத் உருவானது. இந்த முயற்சியில் ஆரம்பத்தில் முன்னணியில் நின்றவர்கள் மென்ஷெவிக்குகளே. வெளிநாட்டில் இருந்து திரும்பிய ட்றொட்ஸ்கி இவர்களுடன் இணைந்து செயற்பட்டார்*. போல்ஷவிக்குகள், சமூகப் புரட்சிவாதிகள் ஆகியோர் சோவியத் அமைப்பில் பங்குபற்றினர். இறுதியில் மென்ஷவிக், போல்ஷவிக், சமூக புரட்சியாளர் ஆகிய மூன்று கட்சிகளும், கட்சிக்கு மூன்று பிரதிநிதிகளைத் தெரிவு செய்து பீட்டர்ஸ்பேர்க் சோவியத்திற்கு அனுப்பினர். அத்துடன் தொழிற்சங்கங்கள், தொழிற்சாலைகளில் பிரதிநிதிகளும் தெரிவு செய்யப் பட்டனர்.

ஆனால் முதலாவது சோவியத்தின் ஆயுசு அற்பமாகவே இருந்தது. மக்கள் எழுச்சியின் விளைவால் ஸார் சில அரசியற் சீர்திருத்தங்களுக்குச் சம்மதித்தான். அவற்றின் அடிப்படையில் பீட்டர்ஸ்பேர்க் சோவியத் நியாயமாகவே பட்டது. ஆயினும் ஸாரின் உறுதிமொழிகளை சோவியத் அடிப்படைப் பரீட்சைக்குள்ளாக்கியது. விளைவு சோவியத்தின் தோல்வி, மரணம். 1906 செப்டம்பரில் சோவியத் தலைவர்களுக்கு எதிரான குற்றவிசாரணை ஆரம்பித்தது. ஏற்கனவே அவர்கள் கைது செய்யப் பட்டிருந்தனர். இந்தக் குற்ற விசாரணையின்போது ட்றொட்ஸ்கி பிரபலமான உரையை நிகழ்த்தினார். ஆயினும் ரஷ்யப் புரட்சியின் அரசியற் பொருளாதாரத் தன்மை பற்றி லெனினே ட்றொட்ஸ்கியைவிடத் தெளிவான கிரகிப்பைக் கொண்டிருந்தார்.

1905 நிலைமைகள் தொழிலாளர் - விவசாயிகளின் ஸ்தாபன ரீதியான ஒற்றுமையின் அவசியத்தை மீண்டும் வலியுறுத்தின. பின்தங்கிய நாடான ரஷ்யாவில் விவசாயிகளின் ஜனநாயக உரிமை, குறிப்பாக நிலப் பிரச்சனையின் தீர்வு பற்றிய வேலைத்திட்டமும் விவசாயிகளின் பங்குபற்றலும் இன்றிப் புரட்சி வெற்றிபெற முடியாது என்பதை லெனின் தெளிவாகக் கண்டார். "தொழிலாளர் - விவசாயிகளின் புரட்சிகர ஜனநாயக சர்வாதிகாரமே" ரஷ்யப் புரட்சியின் நிகழ்ச்சி நிரலின் முக்கிய அம்சம் என்பது லெனினின் கருத்து. ட்றொஸ்கி இதை ஏற்கவில்லை. புரட்சியின் முக்கிய சக்திகள் பற்றி லெனின் கொண்டிருந்த தெளிவான கருத்தும் நிலப்பிரச்சனையின் தீர்வாக அவர் முன்வைத்த கருத்துகளும் 1917ன் வெற்றியைப் பலப்படுத்தும் காரணிகளில் அடங்கின.

சுருங்கக் கூறின் 1905ன் பாடங்களை லெனினுடைய தலைமையில் இருந்த போல்ஷவிக்குகளே ஆழமாகக் கிரகித்துக்

*\ *லெனின் 1905 நவம்பரிலேயே வெளிநாட்டில் இருந்து ரஷ்யா வந்தார். அவர் 1905ன் சோவியத்தில் தீவிர பங்கை வகிக்கவில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டனர். ஆயினும் லெனின் எனும் தனிமனிதனின் விடாமுயற்சியே ஒக்டோபர் புரட்சியில் போல்ஷவிக்குகளின் கையை ஓங்கவைத்தது. 1905ன் தோல்வியை 1917ல் போல்ஷவிக்குகள் வெற்றியாக்கினர்.

1917ல் மூன்று முக்கிய இடதுசாரி அமைப்புகள் தலைமைக்காகப் போட்டி போட்டன. மென்ஷவிக்குகள், போல்ஷவிக்குகள், சமூக புரட்சிவாதிகள். இவர்களில் மென்ஷவிக்குகள் பூர்ஷ்வா ஜனநாயகவாதிகளோடு இணைவதே புரட்சியின் அன்றைய காலகட்டத்தின் சேவை எனும் அடிப்படையில் செயற்பட்டனர். ஆரம்பத்தில் சைபீரியாவில் இருந்து திரும்பிய போல்ஷெவிக் தலைவர்களான ஸ்டாலினும், காமனேவும் இந்தப் போக்குடன் ஒத்துப் போயினர். சமூக புரட்சிவாதக் கட்சியும் இதே நிலைப்பாட்டைக் கொண்டிருந்தது.


ரஷ்யா ஒரு பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சிக்கூடாகப் போகாது சோஷலிசப் புரட்சியியைக் காண முடியாது என்ற கருத்தை லெனினும் வலியுறுத்தி வந்தார். ஆனால் அவருடைய கருத்தில் ரஷ்ய முதலாளி வர்க்கத்திடம் ஜனநாயகப் புரட்சிக்குத் தலைமை வகிக்கும் சக்தியில்லை - அந்த வர்க்கத்தின் வரலாற்றுப் பங்கினையும் தொழிலாள வர்க்கத் தலைமையினால் மட்டுமே பின்தங்கிய ரஷ்யாவில் ஈடுசெய்ய முடியும் என அவர் நம்பினார், வாதிட்டார். தொழிலாளர்களை விவசாயிகளுடன் இணைத்து பூர்ஷ்வா வாக்கத்திற்கு எதிராகத் திருப்புவதே புரட்சியைத் தொடரும் வழிமுறை என்பது லெனினின் நிலைப்பாடு. 1917 ஏப்ரலில் தனது கருத்துகளை லெனின் 'ஏப்ரல் அறிக்கை' (April Thesis) என்ற பிரபலமான கட்டுரையில் விவரித்தார். வெளிநாட்டிலிருந்த போதும் புரட்சிகரச் சக்திகளின் முனைப்பான போக்குகளை லெனின் நாட்டிற்குள்ளிருந்த போல்ஷவிக்குகளையும் விடக் கூர்யமாகக் கணித்துக் கொண்டார். தொழிலாளர், விவசாயப் பின்னணியைக் கொண்ட படைவீரர்கள், விவசாயிகள் போன்றோரிடமிருந்து வளர்ந்துவந்த புரட்சிகரப் போக்குகள் நாட்டின் இடதுசாரிக் கட்சிகள் அனைத்தையும்விட (போல்ஷவிக்குகள் உட்பட) தீவிரமாக அமைந்திருப்பதை அவர் சுட்டிக் காட்டினார்.ரஷ்ய சமூகத்தின் புறநிலைக் காரணிகள் இப் போராட்டப் போக்குகளுக்கு அடிப்படையாய் அமைந்தது. இதுவே பழைய அமைப்பை மாற்றியமைக்க வரலாறு கொக்கும் மாபெரும் சந்தர்ப்பம். இந்தச் சந்தர்ப்பத்தின் சேதன ரீதியான சுலோகங்கள் - 'சமாதானம், உணவு, நிலம்' 'சகல அதிகாரங்களும் சோவியத்துக்களுக்கே' என்பனவே என லெனின் எதுவித ஈடாட்டமுமின்றி முன்மொழிந்தார்.

போல்ஷவிக்குகளின் வெற்றிக்கு உறுதுணையாய் இருந்த மற்றக் காரணங்களில் அவர்களின் ஸ்தாபன அமைப்பு முக்கியமானது. நகர்ப்புறத் தொழிலாளர் மத்தியில் போல்ஷவிக்குகள் திடமான அமைப்புகளைக் கொண்டிருந்தனர். ஸ்தாபன வேலைகளில் முக்கிய பங்கை வகித்தவர்களில் ஸ்டாலினும் ஒருவர். யுத்தத்திற்கும் ஸாரிசத்துக்கும் எதிராகத் திரும்பிய படைவீரர்கள் வறிய விவசாயக் குடும்பங்களைச் சார்ந்தவர்கள். இவர்கள் தொழிலாளருடன் இணைந்தது தொழிலாளர் - விவசாயிகள் ஒற்றுமையைப் பலப்படுத்த உதவியது. ஸாரிசத்தின் பூரண முடிவை விரும்பிய படைவீரர்களை போல்ஷவிக்குகளின் திட்டம் வெற்றி கொண்டது. போல்ஷவிக்குகள் பூர்ஷ்வா லிபரல்கள் முன்வைத்த அமைப்பிற்கு ஒரு



இடதுசாரி மாற்றமைப்பையும் முன்வைத்தார்கள். சோவியத்துக்களுக்கு ஊடாக அரசியல் அதிகாரத்தைத் தொழிலாளர் - விவசாயிகள் அமைப்புகளுக்கு எடுத்துச் செல்லும் சாத்தியப்பாடுகளைப் புரட்சிகரப் போராளிகள் கண்டனர். லெனின் நாடு திரும்பியபின் போல்ஷவிக்குகளின் செல்வாக்கு மேலும் அதிகரித்தது. ஒக்டோபர் புரட்சியை நடத்துவது என்ற முடிவுக்குப் பின் அவர்கள் மிகவும் துரிதமாக இயங்கினர். ஸாரிசத்தின் பூரண அழிப்பை நோக்காகக் கொண்டு இயங்கிய சகல போக்குகளுக்கும் (குறிப்பாக தொழிலாளர்கள்; ஸாரிசத்திற்கு எதிராக எழுந்த படைவீரர்கள் போன்ற சக்திகளுக்கு) திருப்தி தரக்கூடிய சுலோகங்களையும் திட்டங்களையும் முன்வைத்து ஸ்தாபன ரீதியாக இயங்கியதன் மூலம் போல்ஷவிக்குகள் புரட்சியின் தலைமையைக் கைப்பற்றினர்.

1917 பெப்ரவரியின் பின் பூர்ஷ்வா தலைமையில் அமைக்கப்பட்ட இடைக்கால அரசு ஒரு பாராளுமன்ற அமைப்பை உருவாக்க முற்பட்டது. மேற்கு ஐரோப்பிய அரசியல் அமைப்புகள் போன்ற ஒன்றினை உருவாக்கும் திட்டத்தை இடைக்கால ஆட்சியினர் முன்வைத்தனர். இந்தக் கட்டத்திலேயே சில இடதுசாரிகள், இது பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சியின் காலகட்டம், ஆகவே இடைக்கால அரசின் அரசியல் கொள்கையை ஆதரிப்பதே சரியான நிலைப்பாடு என்ற முடிவுக்கு வந்தனர். இந்த நிலைப்பாட்டிற்கு மாக்சிய தத்துவத்தின் அடிப்படையில் ஒருவித நியாயத்தைக் காணலாம். ஆனால் புரட்சியின் முன்னணி சக்திகள் இந்தத் திட்டத்தை நம்பவில்லை. அவற்றின் பார்வையில் பாராளுமன்ற அமைப்பு ஜனநாயகத் தோற்றத்தைக் கொண்டிருந்தாலும் ரஷ்ய மக்களின்




அடிப்படைப் பிரச்சனைகளுக்கான தீர்வுகளைத் தரவல்லதாகப் படவில்லை. சொத்துடைமையாளர்களின் தலைமையிலான ஆட்சியால் உற்பத்திச் சாதனங்களின் உடைமை உறவுகளில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தி தொழிலாளர் விவசாயிகளுக்கு உரிமைகளை வழங்கும் ஆற்றலோ விருப்பமோ இடைக்கால அரசிடம் இருக்கவில்லை என அவர்கள் கருதினர். ஜனநாயக மாற்றங்களைச் சட்டரீதியான சீர்திருத்தங்களுக்கூடாக ஏற்படுத்த முடியும் என மென்ஷவிக்குகளும் அவர்களின் போக்கினை ஆதரித்த மற்றைய சில மாக்சிஸ்டுகளும் நம்பினர். இந்த தற்காலிக அரசியல் சமநிலையைத் தொடர்ச்சியான புரட்சிக்குச் சாதகமாக மாற்றி அமைக்கும் திட்டத்தை லெனின் முன்வைத்தார். அப்படியென்றால் ஜனநாயகப் புரட்சி பற்றிய லெனினுடைய முன்னைய கருத்து என்னவாயிற்று? இதற்கான அடிப்படையான விளக்கத்தை ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன். அதாவது, ரஷ்ய பூர்ஷ்வா வாக்கத்தினால் ரஷ்யாவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனநாயகப் புரட்சியின் தேவைகளைப் பூரணப்படுத்த முடியாது, அந்தச் சக்தி அந்த வர்க்கத்திடம் இல்லை என்றது லெனினின் வாதம். ஆனால் இங்கு சில முக்கிய கேள்விகள் எழுகின்றன.

ரஷ்யப் பூர்ஷ்வா வர்க்கத்தினால் ஜனநாயகப் புரட்சியைப் பூரணமாக்க முடியாது என்பதை ஏற்றுக் கொண்டால், போல்ஷவிக்குகளின் தலைமையில் நடைபெற்ற ஒக்டோபர் புரட்சி, ரஷ்ய ஜனநாயகப் புரட்சியின் பணிகளையெல்லாம் பூரணமாக்கியதா?

ஒக்டோபர் புரட்சியின் நோக்கம் சோஷலிசமாயின் லெனின் குறிப்பிட்ட தொழிலாளர் – விவசாயிகள் இணைந்த ஜனநாயகம் என்னவாயிற்று?

சோவியத்தின் ஜனநாயக உள்ளடக்கம் என்ன?

இன்று பின்னோக்கிப் பார்க்கும்போது முதலாவது கேள்விக்குச் சுலபமாக இல்லை என்ற பதிலைக் கொடுத்துவிடலாம். அந்த "இல்லை"யுடன் மற்றைய இரு கேள்விகளும் முக்கியமிழந்தும் போகலாம். ஆனால் அன்று வரலாறு உருவாக்கப்பட்டுக் கொண்டிருந்தபோது போல்ஷவிக்குகள் அதற்கு என்ன விளக்கங்களைக் கொடுத்தனர், நடைமுறைக்கு என்ன திட்டங்களை முன்வைத்தனர்?

புரட்சியின் இறுதிக் கட்டத்தையும் அதன் போக்கினையும் போல்ஷவிக்குகள் எப்படிப் பார்த்தனர் என்பதை 1917 ஏப்ரலுக்குப் பின் உலகைக் குலுக்கிய ஒக்டோபர் தினங்களுக்கிடையிலான நாட்களில் லெனின் எழுதிய கட்டுரைகளில் இருந்தும் அவற்றை அடிப்படையாகக் கொண்ட விவாதங்களில் இருந்தும் அறிந்துகொள்ளலாம். ஏப்ரல் அறிக்கையையும் அதைத் தொடர்ந்து பெட்றோகிறாட்டில் இருந்து லெனின் முன்வைத்த கருத்துகளையும் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்.


* பெப்ரவரியில் தொடங்கிய ரஷ்யப் புரட்சியின் முக்கிய குணாதிசயம் இரட்டை அதிகாரம் (Dual power) ஆகும். இரண்டு அரசாங்கங்கள் சமாந்திரமாக இயங்குகின்றன. ஒன்று பூர்ஷ்வாக்களினால் அமைக்கப்பட்ட இடைக்கால அரசாங்கம். இந்த அரசாங்கம் அரசின் அதிகாரக் கருவிகளைத் தன் கையில் கொண்டுள்ளது. மற்ற அரசாங்கம் பெட்றோகிறாட் சோவியத். இது "தொழிலாளர் – விவசாயிகளின் ஜனநாயக சர்வாதிகாரத்தை"ப் பிரதிநிதித்துவம் வகிக்கிறது. ஆனால் இந்த சோவியத்திடம் அரசு அதிகாரக் கருவிகள் இல்லை. இது பெரும்பான்மை மக்களின் ஆதரவைப் பெற்றுள்ளது. அத்துடன் இதற்கு ஆயுதம் ஏந்திய தொழிலாளர் போர்வீரர்களின் ஆதரவு உண்டு. அதேநேரம் இந்த மாற்று அரசாங்கம் பூர்ஷ்வா இடைக்கால அரசாங்கத்திற்கு அதிகாரத்தை விட்டுக் கொடுத்துள்ளது. இந்தப் போக்கினால் பெட்றோகிறாட் சோவியத் ஒரு பார்வையாளனாக மாறி வருகிறது. இது பூர்ஷ்வா அரசாங்கத்தின் பலத்தை அதிகரிக்கவும் புரட்சியின் தலையாய நோக்கான தொழிலாளர் – விவசாயிகள் கைகளுக்கு அரசியல் அதிகாரம் போவதைத் தடை செய்யவுமே உதவுகிறது. இந்த இரட்டை அதிகார நிலை நிரந்தரமானதல்ல. இதில் ஒன்று வெல்லும் மற்றது மறையும். இப்போது பூர்ஷ்வாக்களின் அரசாங்கம் சோவியத்துக்களைப் பலமிழக்க வைக்கச் சகல வழிகளையும் கையாள்கிறது.

* இந்தநிலையைத் தொழிலாளர் – விவசாயிகளின் சர்வாதிகாரத்துக்குச் சாதகமாக மாற்றுவதே போல்ஷவிக்குகளின் கடமை. மென்ஷவிக்குகள், சமூக புரட்சிவாதிகள் உண்மையில் குட்டி பூர்ஷ்வா சீர்திருத்தவாதிகள். அவர்களின் குட்டி பூர்ஷ்வா வர்க்கத் தன்மை புரட்சியின் இலக்கை அடையத் தடையாகவுள்ளது. இடைக்கால பூர்ஷ்வா அரசினால் மக்களின் கோரிக்கைகளுக்கு ஈடுசெய்ய முடியாது. ஏகாதிபத்திய யுத்தத்தை நிரந்தர முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கம் அவர்களுக்கில்லை. அவர்களிடம் ரஷ்யப் பேரினவாதம் இன்னும் நிறைய உள்ளது. மக்களின் பசியைப் போக்க அவர்களால் முடியவில்லை. நிலப்பிரச்சனைக்கு நியாயமான தீர்வினை அவர்களால் நடைமுறைப்படுத்த முடியவில்லை. இவையே அடிப்படைப் பிரச்சனைகள். பூர்ஷ்வா வர்க்கத்தை முற்றாக எதிர்க்கும் ஒரு தொழிலாளர் – விவசாயிகள் இணைந்த ஜனநாயக சர்வாதிகாரத்தாலேயே மக்களுக்கு விமோசனம் கிடைக்கும். அதன்மூலமே சோசலிஷத்தை நோக்கி முன்னேற முடியும்.

* ரஷ்யப் புரட்சி ஒரு புதியரக அரசின் தோற்றத்திற்கு வழிவகுத்த வண்ணமிருக்கிறது. இது பூர்ஷ்வா ஜனநாயகப் பாராளுமன்ற அமைப்பையும் விட உயர்ந்த ஒரு ஜனநாயகத்தை உள்ளடக்கியது. ஏங்கல்ஸ் குறிப்பிட்டது போல் இது பாரிஸ் கொம்யூனை மாதிரியாகக் கொண்ட ஒரு அரசு. 1905ல், 1917ல் (பெப்ரவரி) ரஷ்யப் புரட்சி இத்தகைய ஒரு அரசையே உருவாக்க முற்பட்டது. சோவியத் இதன் அடிப்படை அமைப்பு. இதற்கூடாகவே ரஷ்யாவின் புதிய அரசு உருவாக வேண்டும். ஆகவே "சகல அதிகாரமும் சோவியத்களுக்கு" என்பதே புரட்சியின் உடனடி நோக்கமாயிருக்க வேண்டும். இடைக்கால பூர்ஷ்வா அரசாங்கம் தூக்கியெறியப்பட வேண்டும். சோவியத் அரசு பூரண வெற்றி பெற்று மேலாதிக்கத்தை நிலைநாட்ட வேண்டும்.

* ஏப்ரல் 1917ல் சமூக ஜனநாயகக் கட்சி (போல்ஷவிக்) என்ற பெயரை கம்யூனிஸ்ட் கட்சியாக மாற்ற வேண்டும் எனவும் லெனின் கேட்டுக் கொண்டார். இந்தக் கருத்துக்களே போல்ஷவிக்குகளின் அரசியல் தீர்வுகளையும் நடைமுறையையும் வழிநடத்தின. இடைக்கால அரசாங்கம் தூக்கி எறியப்பட்டது, சோவியத் அதிகாரம் எழுச்சி பெற்றது. லெனினும் போல்ஷவிக்குகளும் புதிய அரசை அமைப்பதில் தீவிரமாக ஈடுபட்டனர்.

(தொடரும்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனநாயகப் புரட்சியின் தேவைகளைப் பூரணப்படுத்த முடியாது, அந்தச் சக்தி அந்த வர்க்கத்திடம் இல்லை என்றது லெனினின் வாதம். ஆனால் இங்கு சில முக்கிய கேள்விகள் எழுகின்றன.

ரஷ்யப் பூர்ஷ்வா வர்க்கத்தினால் ஜனநாயகப் புரட்சியைப் பூரணமாக்க முடியாது என்பதை ஏற்றுக் கொண்டால், போல்ஷவிக்குகளின் தலைமையில் நடைபெற்ற ஒக்டோபர் புரட்சி, ரஷ்ய ஜனநாயகப் புரட்சியின் பணிகளையெல்லாம் பூரணமாக்கியதா?

ஒக்டோபர் புரட்சியின் நோக்கம் சோஷலிசமாயின் லெனின் குறிப்பிட்ட தொழிலாளர் - விவசாயிகள் இணைந்த ஜனநாயகம் என்னவாயிற்று?

சோவியத்தின் ஜனநாயக உள்ளடக்கம் என்ன?

இன்று பின்னோக்கிப் பார்க்கும்போது முதலாவது கேள்விக்குச் சுலபமாக இல்லை என்ற பதிலைக் கொடுத்துவிடலாம். அந்த "இல்லை"யுடன் மற்றைய இரு கேள்விகளும் முக்கியமிழந்தும் போகலாம். ஆனால் அன்று வரலாறு உருவாக்கப்பட்டுக் கொண்டிருந்தபோது போல்ஷவிக்குகள் அதற்கு என்ன விளக்கங்களைக் கொடுத்தனர், நடைமுறைக்கு என்ன திட்டங்களை முன்வைத்தனர்?

புரட்சியின் இறுதிக் கட்டத்தையும் அதன் போக்கினையும் போல்ஷவிக்குகள் எப்படிப் பார்த்தனர் என்பதை 1917 ஏப்ரலுக்குப் பின் உலகைக் குலுக்கிய ஒக்டோபர் தினங்களுக்கிடையிலான நாட்களில் லெனின் எழுதிய கட்டுரைகளில் இருந்தும் அவற்றை அடிப்படையாகக் கொண்ட விவாதங்களில் இருந்தும் அறிந்துகொள்ளலாம். ஏப்ரல் அறிக்கையையும் அதைத் தொடர்ந்து பெட்றோகிறாட்டில் இருந்து லெனின் முன்வைத்த கருத்துகளையும் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்.


* பெப்ரவரியில் தொடங்கிய ரஷ்யப் புரட்சியின் முக்கிய குணாதிசயம் இரட்டை அதிகாரம் (Dual power) ஆகும். இரண்டு அரசாங்கங்கள் சமாந்திரமாக இயங்குகின்றன. ஒன்று பூர்ஷ்வாக்களினால் அமைக்கப்பட்ட இடைக்கால அரசாங்கம். இந்த அரசாங்கம் அரசின் அதிகாரக் கருவிகளைத் தன் கையில் கொண்டுள்ளது. மற்ற அரசாங்கம் பெட்றோகிறாட் சோவியத். இது "தொழிலாளர் - விவசாயிகளின் ஜனநாயக சர்வாதிகாரத்தை"ப் பிரதிநிதித்துவம் வகிக்கிறது. ஆனால் இந்த சோவியத்திடம் அரசு அதிகாரக் கருவிகள் இல்லை. இது பெரும்பான்மை மக்களின் ஆதரவைப் பெற்றுள்ளது. அத்துடன் இதற்கு ஆயுதம் ஏந்திய தொழிலாளர் போர்வீரர்களின் ஆதரவு உண்டு. அதேநேரம் இந்த மாற்று அரசாங்கம் பூர்ஷ்வா இடைக்கால அரசாங்கத்திற்கு அதிகாரத்தை விட்டுக் கொடுத்துள்ளது. இந்தப் போக்கினால் பெட்றோகிறாட் சோவியத் ஒரு பார்வையாளனாக மாறி வருகிறது. இது பூர்ஷ்வா அரசாங்கத்தின் பலத்தை அதிகரிக்கவும் புரட்சியின் தலையாய நோக்கான தொழிலாளர் - விவசாயிகள் கைகளுக்கு அரசியல் அதிகாரம் போவதைத் தடை செய்யவுமே உதவுகிறது. இந்த இரட்டை அதிகார நிலை நிரந்தரமானதல்ல. இதில் ஒன்று வெல்லும் மற்றது மறையும். இப்போது பூர்ஷ்வாக்களின் அரசாங்கம் சோவியத்துக்களைப் பலமிழக்க வைக்கச் சகல வழிகளையும் கையாள்கிறது.

* இந்தநிலையைத் தொழிலாளர் - விவசாயிகளின் சர்வாதிகாரத்துக்குச் சாதகமாக மாற்றுவதே போல்ஷவிக்குகளின் கடமை. மென்ஷவிக்குகள், சமூக புரட்சிவாதிகள் உண்மையில் குட்டி பூர்ஷ்வா சீர்திருத்தவாதிகள். அவர்களின் குட்டி பூர்ஷ்வா வர்க்கத் தன்மை புரட்சியின் இலக்கை அடையத் தடையாகவுள்ளது. இடைக்கால பூர்ஷ்வா அரசினால் மக்களின் கோரிக்கைகளுக்கு ஈடுசெய்ய முடியாது. ஏகாதிபத்திய யுத்தத்தை நிரந்தர முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கம் அவர்களுக்கில்லை. அவர்களிடம் ரஷ்யப் பேரினவாதம் இன்னும் நிறைய உள்ளது. மக்களின் பசியைப் போக்க அவர்களால் முடியவில்லை. நிலப்பிரச்சனைக்கு நியாயமான தீர்வினை அவர்களால் நடைமுறைப்படுத்த முடியவில்லை. இவையே அடிப்படைப் பிரச்சனைகள். பூர்ஷ்வா வர்க்கத்தை முற்றாக எதிர்க்கும் ஒரு தொழிலாளர் - விவசாயிகள் இணைந்த ஜனநாயக சர்வாதிகாரத்தாலேயே மக்களுக்கு விமோசனம் கிடைக்கும். அதன்மூலமே சோசலிஷத்தை நோக்கி முன்னேற முடியும்.

* ரஷ்யப் புரட்சி ஒரு புதியரக அரசின் தோற்றத்திற்கு வழிவகுத்த வண்ணமிருக்கிறது. இது பூர்ஷ்வா ஜனநாயகப் பாராளுமன்ற அமைப்பையும் விட உயர்ந்த ஒரு ஜனநாயகத்தை உள்ளடக்கியது. ஏங்கல்ஸ் குறிப்பிட்டது போல் இது பாரிஸ் கொம்யூனை மாதிரியாகக் கொண்ட ஒரு அரசு. 1905ல், 1917ல் (பெப்ரவரி) ரஷ்யப் புரட்சி இத்தகைய ஒரு அரசையே உருவாக்க முற்பட்டது. சோவியத் இதன் அடிப்படை அமைப்பு. இதற்கூடாகவே ரஷ்யாவின் புதிய அரசு உருவாக வேண்டும். ஆகவே "சகல அதிகாரமும் சோவியத்களுக்கு" என்பதே புரட்சியின் உடனடி நோக்கமாயிருக்க வேண்டும். இடைக்கால பூர்ஷ்வா அரசாங்கம் தூக்கியெறியப்பட வேண்டும். சோவியத் அரசு பூரண வெற்றி பெற்று மேலாதிக்கத்தை நிலைநாட்ட வேண்டும்.

* ஏப்ரல் 1917ல் சமூக ஜனநாயகக் கட்சி (போல்ஷவிக்) என்ற பெயரை கம்யூனிஸ்ட் கட்சியாக மாற்ற வேண்டும் எனவும் லெனின் கேட்டுக் கொண்டார். இந்தக் கருத்துக்களே போல்ஷவிக்குகளின் அரசியல் தீர்வுகளையும் நடைமுறையையும் வழிநடத்தின. இடைக்கால அரசாங்கம் தூக்கி எறியப்பட்டது, சோவியத் அதிகாரம் எழுச்சி பெற்றது. லெனினும் போல்ஷவிக்குகளும் புதிய அரசை அமைப்பதில் தீவிரமாக ஈடுபட்டனர்.

(தொடரும்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

●●

இரு கவிதைகள்

**இளைய அப்துல்லாஹ்**

# கசங்கல்கள்

உயிரைப் பணயம் வைத்த
பயணக் கொடுமைகளில்
மீண்டும் மீண்டும்
வரித்துக் கொண்டதாய்
எங்கள் தாய்மண்.

ஏரிகள்கூட
ஏற்றுக்கொள்ளாத
உடல்களாய் வெறுத்துப்போன
விடயங்கள்.

மண்புனிதமுண்டாகி
மீண்டும் மீண்டும்
அசிங்கப்பட்டுப் போன
மறக்கவே முடியாத சோகங்கள்.

ஒவ்வொரு படைகளும்
எங்கள் மண்ணைக்
கற்பழித்துவிட்டுப் போன
தடயங்கள்தான் ஏராளம்.

அமைதிப் படைகள்...
சிங்களப் படைகள்...
விடுதலைப் படைகள்....

இவைகளுக்கு எட்டாத தூரத்தில்தான்
இன்னும் சுதந்திரக் கொடிகள்....

1948.......
வெள்ளையன் தந்துவிட்டதான
வேதனை விளக்கம்
இன்னும் அடிமைப்பட்டுப்
போனதாய் எங்கள் தாய்மண்.

செத்துப் போனால்கூட
அது கிடைக்குமா என்பதை
கேள்விக்குறியாக்கிய
அண்மைக்கால நிகழ்வுகள்

அழித்துப் போட்டு
அழித்துப் போட்டு
நாகவிகாரை
உயிர்த்துப் போகும்.
ஆனால்
எங்கள்
தாய் மண்ணின்
கசங்கல்கள்....?

# நிதானங்கள்

உயிர் நிதானங்களை
ஊத்தையாக்கிப் பார்த்த
எங்கள் கிராமம்.

பெத்த முப்பதுநாள்
குழந்தையைப் போட்டுவிட்டு
உயிர் காப்பாற்றப் போன
தாய் செத்துவிட்ட
சோகம்

எலும்புக்கூடுகளை
வைத்து மட்டும்
ஆட்சி நடாத்த
துடித்துப் போகும்
ஜனநாயகப் பிடிவாதங்கள்.

செத்த மனிதனிடம்
கண்களுக்கு விலைபேசும்
இரக்க வேதனைகள்.

இன்னுமின்னும்
புதைகுழிகளை நிரப்பியவாறு

வங்கக் கடலுக்கருகில்
எமது கிராமம்
வாழ்ந்து கொண்டுதானிருக்கிறது.


29.04.93



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோலைக்கிளி

## தென்னம்பாளைக்குள் ஒரு திருமண வீடு




நிலைமை எனது மண்ணில்
முற்றியேவிட்டது.
அழிக்கப்பட அழிக்கப்பட உயிர்கள்
எங்காவது, எந்த விதத்திலாவது, மீண்டும்
உயிர்த்து எழும்பி
இந்த மண்ணை நேசிக்கும் திறன்
வளர்ந்தேவிட்டது.

நேற்று ஒரு
பச்சைப் பாக்கை
ஒரு கிழவர் வெட்டினார்.
உள்ளே இருந்து
சிறு மஞ்சல் குருவி
கண் திறந்து துடித்த விதம்;
இந்தத் தேசத்தில் நாங்கள்
அழிக்கப்பட்டாலும்
முடியாது எங்கள் இனத்தைப் பூரணமாய்
யாரும் கரைகாண,
என்பதைப்போல இருந்தது அர்த்தமாய்.

அன்று
சிறு மண் உருண்டையை ஒரு பையன்
பொறுக்கி உடைத்தான்.
உள்ளே இருந்தது,
அழகிய பொன் வண்டு!
வெண் பூவைக் குழந்தை
ஒருநாள் கிழிக்க;
துப்பாக்கிச் சூட்டுக்குக் கணவனைப் பறிகொடுத்த
விதவைப்பெண் சிறுமியுடன்,
கருக்கட்டிக் குறை உயிராய்!

இவை அனைத்தும்
பழைய பல சம்பவங்கள்.
இன்று நடந்தது,
தென்னையிலே ஆச்சரியம்!
ஆம்; அதன் பாளை
இன்று விரிய,
அதற்குள் இருந்தவை பூக்களே அல்ல;
ஒரு திருமண வீடு!
தம்பதிகள்,
சோடிக்கப்பட்ட மணவறை,
வந்திருந்த விருந்தாளிக் கூட்டமெனப்;
பலரும் பண்டமும்!

எங்கு, எப்போது, எந்தத் திருமண வீட்டில்,
குண்டு விழுந்தது
எனது மண்ணில்;
கருக!

05.11.93








ஈழத்தில் தமிழ் மக்களது தேசிய எழுச்சிக் காலத்திலும்சரி, அதற்கு முந்திய காலங்களிலும் சரி, ஈழத்துக் கவிதைகள் உலகத் தமிழ் இலக்கியப் பரப்பில் ஒரு முக்கிய இடத்தைப் பிடித்திருக்கின்றன. தமிழ்நாட்டில் பாரதியாருக்குப் பின் ஒரு மஹாபெரிய கவியாற்றல் தோன்றவில்லை என்றே கூறவேண்டும். ஆனால் ஈழம் ஒரு மஹாகவியைத் தந்தது. அவருக்குப் பின்பும் பல அற்புதமான கவிதைகளை முருகையன், நீலாவணன், நுஃமான், ஜெயபாலன், சிவசேகரம், சேரன், சோலைக்கிளி, புதுவை இரத்தினதுரை உட்படப் பலர் படைத்தனர்.

ஈழத்துக் கவிதைகள் கொண்டிருந்த சிறப்பை ஏனையதுறையில் ஈழத்துப் படைப்புகள் கொண்டிருக்கவில்லை. குறிப்பாக நாவல், சிறுகதை வரலாற்றில் குறிப்பிடத்தக்க படைப்புகளை விரல்விட்டே எண்ணிவிடலாம். அண்மையில், தமிழகத்தில் வெளியாகும் சுபமங்களா சஞ்சிகையில் ஈழத்து எழுத்தாளர் செ.யோகநாதனிடம் பேட்டியில், 'கவிதையில் ஈழத்துப் படைப்பாளிகள் போராட்ட உக்கிரத்தை வெளியிட்ட அளவுக்கு நாவலில் இல்லையே?' என்று கேள்வி கேட்டுள்ளார் பேட்டியாளர். இந்தக் கேள்வி, யோகநாதனை மாத்திரம் கேட்கப்பட்ட ஒன்றல்ல, ஈழத்து இலக்கியவாதிகள் அனைவரையும் கேட்கப்பட்ட கேள்வியே இது. ஈழத்து இலக்கியவாதிகள் என்ன பதிலைச் சொன்னாலும் ஈழத்தில் கவிதை தவிர்ந்த துறைகள் பெரும் எழுச்சி கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டு பரவலாக உள்ளதை ஒப்புக்கொள்ளவே வேண்டும்.

இவ்வகைக் குற்றச்சாட்டுகளைக் கூறுபவர்களும் சரி, இவற்றை எதிர்கொள்ள வேண்டிய நிலையில் இருப்பவர்களும் சரி, மிக முக்கிய விடயம் ஒன்றை மறந்துவிடுகின்றனர். ஈழத்தில் மிக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட காலமாகவே நல்ல நாடகங்கள் உருவாகி வந்திருக்கின்றன. அவை, நாடகப் பிரதிகளாயினும் சரி, மேடை நிகழ்வுகளாயினும் சரி, ஈழத்தில் அவற்றின் வளர்ச்சி குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டிய ஒன்று. இதுபற்றிப் பலர் அலட்டிக் கொள்வதில்லை.

ஈழத்திற்கே மாத்திரம் சிறப்பான பல வாழ்வம்சங்களைத் தொட்ட நாடகங்கள் பல உருவாகியிருக்கின்றன. அதிலும் குறிப்பாகக் கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக நாடகங்களில் தன்னை அர்ப்பணிப்போடு ஈடுபடுத்தி உழைத்துவரும் குழந்தை சண்முகலிங்கத்தின் படைப்புகள் தனியாகக் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவை. நாடக அரங்கக் கல்லூரியை உருவாக்குவதில் முன்னின்று உழைத்த இவரது படைப்புகள் அனேகமானவை கடந்த பத்தாண்டுகளில் மேடையேறியிருக்கின்றன. இவை வெளிக்காட்டும் வாழ்வனுபவக் கூறுகள், நம்பிக்கை என்பன ஈழத்தில் தோன்றிய எந்த நாவலிலும் காணப்படவில்லை எனத் துணிந்து கூறலாம். போரும், இழப்புகளும், அவலமும் நிறைந்த சூழலில், வாழ்வில் நம்பிக்கைகளை விதைக்கும் படைப்புகளை உருவாக்குவது இலகுவல்ல. பலர் இந்த நோக்கத்திற்காகச் செயற்கைத் தனமான படைப்புகளைப் படைக்கின்றனர். ஆனால் குழந்தை அவர்கள் தனது எளிமையான மண்மனம் கமழும் படைப்புகளால் இவர்கள் அனைவர் மேலும் உயர்ந்து நிற்கிறார்.


ஒரு நாடகப் பிரதி வாசிப்பதற்காகவோ, நிகழ்த்துவதற்காகவோ உருவாக்கப் படலாம். குழந்தையின் படைப்புகள் நிகழ்த்தலை நோக்கியே உருவாக்கப் பட்டவை. இதனால் அவை எழுத்து வடிவில் உள்ளபோது, நாடகத்தின் உண்மையான உணர்வு மனதில் ஏற்பட முடியாது போகலாம். ஆயினும், அது அவரது நாடகப் பிரதியின் பலவீனமல்ல. இந்த நாடகப் பிரதிகள் பலர் வாசிக்கக் கூடிய வகையில் கிடைத்தால் ஈழத்து இலக்கியம் கவிதையில் மாத்திரம் வீறுநடை போடவில்லை என்ற கருத்து உருவாகலாம். இதற்கான பணிகளில் ஆர்வமும் வசதியும் உடையோர் ஈடுபடல் அவசியம். குழந்தையின் நாடகப் பிரதிகளை நூல் வடிவில் வெளியிடுவது, நல்ல நாடகப் பிரதிகளை உருவாக்குவது தொடர்பாகப் பலருக்குப் பயிற்சியாகவும் அமையலாம். யார் செய்யப் போகிறார்கள்?

எங்களை (மிகப் பெரும்பாலானோரை) இந்த நாடு அகதிகளாக ஏற்கவில்லை. மனிதாபிமான ரீதியில்தான் இங்கு தற்காலிகமாகத் தங்க அனுமதித்திருக்கிறது. ஆனால் எங்களில் ஒருவரையாவது திருப்பி அனுப்ப இந்த அரசு முடிவு செய்தால் எவ்வளவு பெரிய அநியாயம் என்று கூக்குரல் எழுப்புகிறோம், அந்த முடிவுக்கு எதிராகப் போராடுகிறோம். ஆனால் எந்தக் கேள்வியும் கேட்க முடியாமல் பலவந்தமாக யாழ்ப்பாணம்,



முஸ்லிம் மக்களை வெளியேற்றிய போது எம்மில் எத்தனை பேர் அதுபற்றிக் கவலைப் பட்டிருக்கிறோம்?

அவர்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டு மூன்று வருடங்கள் ஆகின்றன. அகதி வாழ்க்கையை இன்னொரு இனத்தின்மீது சுமத்த எமக்கு எந்த உரிமை இருக்கிறது? யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு வரும் யாரிடமாவது முஸ்லிம் மக்கள் ஏன் அங்கிருந்து துரத்தப் பட்டார்கள் எனக் கேட்டுப் பாருங்கள். 'அவங்கள் கொள்ளை அடித்தவங்கள், அவங்கள் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்தவங்கள்' என்ற மாதிரியான விளக்கங்களைக் கேட்டுப் புளித்துவிடும். யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தராக இருந்த பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களது படைப்பொன்றில் பின்வரும் வரிகள் உள்ளன. 'யாழ்ப்பாண முஸ்லிம்களுக்குத் தனித்துவமான ஒரு வரலாறுண்டு. போர்த்துக்கேயருக்கு எதிராகச் சிங்கள மன்னர்கள் நடாத்திய போராட்டத்தில் அம்மன்னருக்கு ஆதரவு கொடுத்தமை போன்று, போர்த்துக்கேயருக்கு எதிராகத் தமிழ் மன்னர்கள் நடத்திய போராட்டத்திலும் தமிழ் மக்களுக்குத் துணையாக நின்றவர்கள் முஸ்லிம் மக்கள். இவர்களின் வரலாற்றினை ஆராய்ச்சிபூர்வமாக மேற்கொள்ளுதல் பயன்தரும் முயற்சியாகும்' என்பது பேராசிரியரது கூற்று.




தமிழ் மக்களோடு தோளோடு தோள்நின்று அந்நியர்களை விரட்டியடித்த அந்த மக்கள் தமது சொந்த மண்ணில் இருந்து தமிழ் மக்களது உரிமைகளின் பேரால் விரட்டப்பட்டு, அகதிகளாகி மூன்றாவது இலையுதிர்காலம் இது. யாழ்ப்பாணத் தமிழ் மக்களால் பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு ஆளான அவர்களை வெளியேற்ற உத்தரவு பிறப்பித்த விடுதலைப் புலிகளின் தலைவர், மக்கள் மத்தியில் நிலவும் கருத்துக்கு மாறான ஒன்றைக் கூறினார். அது, முஸ்லிம்களது பாதுகாப்பிற்காகவே அவர்கள் வெளியேற்றப் பட்டார்கள் என்பது. (இதைச் சொல்லவே ஏறத்தாழ இரண்டு வருடங்களுக்கு மேல் பிடித்தன.)

தவறுகளை இழைத்தால் அவற்றை மூடிமறைக்க அதிகம் பொய் பேசநேரிடும். புத்திசாலித்தனமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயம், (இவ்வாறான) தவறுகளை இழைக்காமல் இருப்பது.

ஈழத் தமிழர்களது தேசிய எழுச்சி கொண்டுவந்த மாற்றங்களில் ஒன்று, பிறமொழிக் கலப்பைத் தவிர்க்க வேண்டும் என்பது பற்றிய அக்கறையைப் பரவலாக எழுப்பியமை எனலாம். தமிழில் கலந்துவிட்ட பல பிறமொழிச் சொற்களை மாற்றிப் பாவித்தலும், அதற்கிணையான புதிய சொற்களை உருவாக்கலும் பரவலாக அவதானிக்கப்படக் கூடிய ஒரு விடயம். மொழியுடன் அதிக தொடர்பு கொண்டவர்களான எழுத்தாளர்களிடையே இதுபற்றிய அக்கறை பரந்திருப்பதை அவதானித்திருக்கிறேன். நடராஜன் ‘ஆடலிறை’ எனப் புனைபெயர் சூடுவதும், சூரியநாராயண சாஸ்திரிகள், பரிதிமாள் கலைஞர் ஆவதும் இவ்வகையே.

ஆனால் தவிர்க்க முடியாமல் பலரது பெயர்கள் பிறமொழிச் சொற்களாக இருக்கின்றன. அதுவும் கடந்த பத்தாண்டுகளாகக் குழந்தைகளுக்கு வைக்கப்படும் பெயர்கள் ‘ஸ்ரீ’ என்ற எழுத்தையோ, ‘ஜ’ என்ற எழுத்தையோ கொண்டிருப்பது கண்கூடு. ஒருபுறத்தில் சரித்திரப் பெயர்களைத் தேடிக் குழந்தைகளுக்கு வைக்கிற போக்கும், மறுபுறத்தில் கருத்தே இல்லாத புதிய சொற்களை உருவாக்கி (ஒருவரது பெயருக்குக் கருத்து இருக்கவேண்டும் என நான் கருதுவதில்லை) நாமம் சூடுவதும் இன்றைய வழமை. கருத்தே இல்லாத பெயர்கள்தான் பெரும்பாலும் இந்தப் ‘புதிய’ எழுத்துகள் நுழையக் காரணம்.

இன்றைய போக்கு எங்கு போகும் என எதிர்வு கூறுவது எனது பிரச்சனை அல்ல. ஆனால் இத்தனைதான் தமிழ் எழுத்துகள் என்று நாம் கற்கும் எழுத்துகளுக்கும், நாங்கள் பாவிக்கும் எழுத்துகளுக்கும் இடையில் சில வேறுபாடுகள் (ஜ, ஸ்ரீ, ஹ) உள்ளன. இந்தப் ‘புதிய’ எழுத்துகளைப் பாவிக்காமல் பல விடயங்களைச் சரியாக எழுதவும் முடியாமல் இருக்கிறது. என்ன செய்யலாம். மொழி அறிஞர்களிடம் இந்தக் கேள்வியை விட்டுவிடுகிறேன்.

## பரிசு பெற்ற புகைப்படக்காரர்

இங்கிலாந்தில் எறிக் ஹொஸ்கின்ஸ் விருது, இருபத்தேழு வயதுக்குட்பட்ட சிறந்த புகைப்படக் கலைஞர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. ஹொஸ்கின்ஸ் இங்கிலாந்தின் முன்னணி ‘இயற்கைப் படப்பிடிப்பாளராவார்.

இந்த வருடம் விருது இரு நோர்வேஜியர்களுக்கு வழங்கப் பட்டுள்ளது. உலகம் முழுவதும் இருந்து வந்த 11,500 புகைப்படங்களில் இருந்து எட்டுப் படங்கள் தெரிவு செய்யப்பட்டு அதிலிருந்து, பரிசுக்கென போல் ஹெர்மான்ஸன் (Paal Hermansen), அஸ்கெய்ர் ஹெல்கஸ்ரா (Asgeir Helgestad) ஆகியோரே விருதுக்குத் தெரிவாகினர். இவர்களது புகைப்படங்கள் தபால் அட்டைகளாக வெளியிடப்படும்.



# சுவடுகள்

## ‘ஏனென்று கேட்க நாங்கள் யார்?
## நாங்கள் உழைக்கவும் சாகவுமே பிறந்தவர்கள்’


அண்மையில் இலங்கை அரசுக்கும், தொண்டமான் தலைமையிலான
இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுக்கும் இடையிலான நீண்டகால உறவில்
விரிசல் ஏற்பட்டுள்ளது. இது சிங்கள அரசுடன் இணைந்து எல்லா நேரங்களிலும்
தொழிற்பட முடியாது என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.
மலையக மக்களது குடியுரிமை பறிக்கப்பட்ட 45 வருட நிறைவுக் காலத்தில், இந்த
நிலை மலையக மக்களில் அதிகம்பேரைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு கட்சிக்கு
ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இந்த முரண்பாடு அதிகாரம் தொடர்பானதேயன்றி,
மலையக மக்களது நலன்கள் தொடர்பானதல்ல.
இ.தொ.கா., மீண்டும் சிங்கள அரசியற் தலைமைகளுடன் உடன்பாடு ஒன்றுக்கு
வரும் சாத்தியங்கள் உள்ளன. இது மீண்டும் மலையக மக்களது உரிமைகளை
வாக்குகளுக்காகப் பேரம் பேசும் விவகாரமாகக் குறுகச் செய்யும் வாய்ப்புகளை
அதிகரிக்கிறது.
தமது நீண்ட, துயர்நிறைந்த வரலாற்றினூடாக மலையக மக்கள்
பெற்றுக்கொண்டவைகளைவிட இழந்தவை அதிகம். பாராளுமன்றத் தலைமைகளில்
இருந்து தமது அரசியற் தலைமைகளை மாற்றிக் கொள்ளாதவரை மலையக மக்கள்
தமது உரிமைகளை உறுதியாக நிலைநாட்டுவது கடினம்.
அண்மைக்கால நிகழ்வுகள், சிங்கள அரசுகளுடன் இணைந்து எதையும் சாதிக்க
முடியாது என்பதை இன்னும் ஒருதரம் உரத்துச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறது.

## ஒரு பயங்கரவாதத் தலைவர்

இலங்கையின் துரதிர்ஸ்டம், இலங்கையின் தேசிய இனங்களது
பிரச்சனைகளைப் புரிந்துகொள்ள விரும்பாத தலைவர்களே நாட்டுக்குக் கிடைப்பது.
பிரேமதாசாவின் கொலையுடன் குறுக்குவழியில் பதவிக்கு வந்த டிங்கிரிபண்டா
விஜேதுங்கவும் இந்த வகை நபர்தான்.
தொடர்ச்சியாக அவர் தமிழ் மக்களது பிரச்சனையைப் பயங்கரவாதப்
பிரச்சனையாக மட்டும் கருதி, கூறிவந்ததற்குப் பதிலடியாகப் பூநகரி பதில்
கூறியிருக்கிறது. இனப்பிரச்சனையைத் தீர்க்க அவர் உடன் நடவடிக்கை
எடுக்காவிடில், அவரது நாட்டில் தற்போது வாழும் தமிழ் மக்களை அவர் சுதந்திர
அயல்நாடொன்றிலேயே, கௌரவமிக்க பிரஜைகளாகச் சந்திக்க நேரிடும். வேறு
வழியில்லைத் தமிழ் மக்களுக்கு.

சுவடுகள் 52, கார்த்திகை'93
SUVADUGAL, Herslebs Gt 43, 0578 Oslo, Norway.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




'Suvadugal', A Tamil monthly from Norway, Issue nr 52, Nov'93. (Estd: 1988 Sep)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org